ஸ்ரீ

# பெரியாழ்வார் பிரபந்தம்.

1 பொய்கை பூதம் பேயென்னப் புகல வரிய முதலாழ்வீர்
செய்ய கமலத் திருவடிகளிருந் திறைஞ்சித் திருவருளான்
மெய்கொள் புதுவை நகர்வந்த விட்டுசித்தன் கதைவிரிவை
யையைம் புலனா லலைப்புண்ணு மடியே னறிந்த படியுரைப்பேன்.

## வேறு

2 விண்ணாட்டு ளந்தாம மியன்புரிசை வேந்தனுக்கு
மண்ணாட்டி லான்மாவாந் தவசமருள் வழிநடத்தி
யெண்ணாட்டு மூவர்களு மேகியபின் னிருநிலத்தின்
கண்ணாட்டி நீங்காத களப்புலனாய்க் குறும்புசெயும்.

3 வேடர்களோ டைவர்களு மேதினியின் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி மேயயிடயாய்க் கலித்திலங்கு
நாடுமதின் கீழாய நற்பதியு நசிப்பித்து
மூடவிலங் கவைசாத்தி முடித்தனர்கள் புவிமுழுதும்.

4 அத்திறத்தாற் புவிமுழுது மல்லலுறும் படிகண்டு
மெய்த்திறத்தான் மெய்வீட்டில் வீற்றிருந்தே யுலகாள்வான்
பொய்த்திறத்தார் புலைச்சர்ப்பம் பொடியாகக் கருடனைத்தன்
சித்திரத்தாற் பெரியாழ்வா ராயுலகைத் திருத்தென்றான்.

5 என்றிறைவ னருள்புரிய விறையருளுந் திருவருளு
மொன்றியசீ ரன்பினா லுடன்கொண்டு புவியிலிறை
சென்றுதுயில கொண்டவருட் சிறந்தவில்லி புத்தூரி
னன்றிதரும் வேதியரிற் சோழியரென் றேநவிலும்.

6 குலத்தினெறி யுடைமுகுந்தர் தந்தையாய்க் கோதில்வார
நலத்தினார் தேவியார் பற்புமைநற் றாயாராய்
நிலத்தினிருள் கெடத்தோன்று மருக்கனென நிலவுமுயிர்
புலக்கூடா நிசியொழிக்கும் போதமாக் கதிரவனாய்.

7 ஆனியெனுந் திங்களினில் வளர்பிறையி லருஞ்சோதி
மேனியனார் சோதியினில் விண்ணவர்பூ மழைசொரிய
வானில்வரு முகிலொலியு மறையொலியு மாறுசெயப்
பானிலா முகத்தியர்கள் பல்லாண்டி னிசைபாட.

8 அறந்தழைப்ப மெய்ஞ்ஞானம் யாவர்களு மறிந்துய்ய
மறந்தீய வேரோடு மடியவஞ்சம் பாழாகத்
திறந்திறம்பா துயர்ந்தோங்கத் தீவினைகால் குலைந்தோட
வுறங்கினா னாடுகெடா வீனாதே யுயிர்நோக்க.

9 திருவவதாரஞ்செய்தார் செகமுழுது மீடேற
மருவமரும் பொழிற்புதுவை வடபெருங்கோ யிலானன்று
தருகுழவி தனைநோக்கிச் சதஞ்சீவ வெனவாழ்த்திப்
பொருவவருக் கவரேயாய்ப் புவிமீதில் வளர்ந்திடுநாள்.

10 பூதமுத லாயகன்சீர்ப் பூங்கழற்கீழ்ப் பசுந்துளவா
லேதமிலாப் பூமாலை பாமாலை யெனுமிரண்டு
மாதரவி னாற்கட்டி யருளவல்ல வாழ்வார்க்கு
வேதநெறி விட்டுணுசித்த னெனுநாமம் வியந்துரைத்தார்.

11 திருக்காக்கு மிந்திரனுஞ் சதுமுகனுஞ் சராசரமு
மொருக்காக்குஞ் சடையானு மிறைஞ்சவெய்தா திடர்க்கரியி
னுருக்காக்கும் பெருமானை யுவந்துபல்லாண் டெனவோதித்
திருக்காப்பன் றிடுவார்க்குத் திருக்காப்புஞ் செய்தனரால்.

வேறு.

12 பூதத்தனி நாயக னையலையார் புனலூட்டியி லும்புயன் மேனியினாய்
வேதத்தனி நாயக னேயெனவான் விடையாரய னாவிண னோர்கோமா
னோதிக்கரை வாரி யானெறியா னுலகிற்றமர் கட்குத வுந்திருமால்
பாதக்கம லங்கா ணென்றுர் பாதக்கம லங்கண் டார்பலரும்.

வேறு.

13 ஒத்தவரு மிக்கவரு மன்றியொளி ரும்பன் னேதமவை யேழுமுல கேழுமலை யேழு
மித்திரம லாதுபிறி தில்லையென வொல்லை யின்பமுறு மீரடியி னாலுறவளந்தான்
முத்துநிரை யன்னநக பத்திகள் விளங்கு மொய்மமல ரினும்திருது வாமுளரி யந்தாட்
பத்துவிர லுங்காணுமினென் றவர்பத்திற்பத்துவிர லுந்தொழுது பத்தர்கள்பரிந்தார்.

வேறு.

14 விணைக்காரி யொடுமிக்கவி ணணடை வேதனை யாலமிடற்றானைப்
பணைக்கானுண் மறையைப்பக லோரைப் பலவைக் கனிவா யுறைணை நிறவோர்
துணைக்கா லாக்கக் கொண்டிலை மீதிற் றுயிலும் பெருமா டிருமா லழகார்
கணைக்கால் காணுமினெனக்கசி வோர்தங் கணைக்கால் கண்டு களித்தனரன்பர்.

வேறு.

15 பாராளு நூற்றுவரைப் பாழாக்கிப் பாண்டவருக்
காராத வின்ப மருளப் பிறந்தபிரான்
சீரார் கருணைத் திருமுழந்தாள் காண்மினென்று
னோரார் முழந்தாள் யாவருங்கண் டின்புற்றார்.

16 வங்கக் கடற்றுயின்ற மாமான் மதுசூதன்
வெங்கட் களிறடர்த்தா னைவர்களை வெல்லுவித்த
செங்கமலக் கண்ணன் றிருக்குறங்கு காண்மினென்று
னங்கக் குறங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

17 புன்புலத்தார் பாரம் புவிமடந்தை யாற்றரிதென்
றன்புறநின் றேத்த வவனியின்கட் போந்தபிரான்.
மின்பொறுத்த சோதி விளங்குமுத்தங் காண்மினென்றா
னின்பமுறு முத்தம் யாவருங்கண் டின்புற்றார்.

18 வைய முழுதும் வயிற்றுள்வைத்த தேவகியா
ருய்ய வழகா ருதரத் துதித்தபிரான்
மையனைய சோதி மணிமருங்குல் காண்மினென்ற
வையன் மருங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

19 சத்தம் பரிச முருவந் தரைக்கந்த
மொத்த குடம்பைதொறு மூட்டியென்னை யாட்டுவிக்கு
மத்தன் றிருவுந்தி யாயிழையீர் காண்மினென்ற
சித்தனெழி லுந்திகண்டு நீணிலத்தோர் வாழ்த்தினார்.

20 கொல்லு மதவானைக் கோடுங் கொடியவிறன்
மல்லுந் தொலைப்ப வடமதுரை வந்துதித்த
செல்லுருவ மன்னான் றிருவுதரங் காண்மினென்று
சொல்லும் பிரானுதரம் போற்றினார் தூயோரே.

21 சங்கக் குழையரன்கைச சாபந் தவிர்த்திரைக்கும்
பொங்குகட லேழும் பொடிசெய்து வந்தபிரான்.
செங்கமலை தங்குந் திருமார்பு காண்மினென்றான்
பங்கமில்லா மார்பழகு கண்டார் பரிவோடே.

வேறு.

22 பெருத்தோங்கு நூற்றுவர் மாளப் பிறந்த
குருத்தோங்கு நான்மறைக் கோவலர் குட்டன்
றிருத்தோ ளிருந்தவா காணென்றான் றோள்கள்
கருத்தோங்கு மன்பர்கள் கண்டார் களித்தே.

23 சூழவிசும் போடுமுன் றொல்லுல குண்டவ
னாழியுஞ் சங்கு மடங்கு கரங்களை
யேழையர் காண்மின்க ளென்றவன் கைத்தலம்
பாழிய மண்ணவர் கண்டு பணிந்தார்.

24 பெருக்கண்ட முட்டிப் பிறங்கிய பொன்ன
னுருக்கண்டங் கண்டே ழுலகுமுண் டான்றன்
றிருக்கண்டங் காணென்ற சேய்களங் கண்டு
கருக்கண்டங் கண்டனர் கற்றறிந் தோரே.

25 முன்றொண்டை தண்டாமன் மூவுலகு முண்டவன்
செந்தொண்டை வாய்காண்மி னென்றானின் செப்பமூன்
றன்றொண்டு தானே சகியாய்ப் பிறந்தவ
னின்றொண்டை வாய்கண் டியாவர்களு மின்புற்றார்.

26 பூக்குந் திருவுந்திப் பூவை நிறத்தமலன்
வாக்கு நயனமும் வாயு முறுவலுஞ்சீர்
மூக்கு மிருந்தவா காணீரென் றுன்முகத்தி
லாக்கு மதுவதுகண் டந்தணர்கள் வாழ்த்தினார்.

27 திங்கள் வதனத் திருவனைய தேவகியாற்
றங்கிப் பிறந்தாயர் தன்பால் வளர்ந்தபிரான்
செங்கமலக் கண்காண்மின் சேயிழையீ ரென்றவர்த
மங்கமலக் கண்கண் டனைவர்களும் வாழ்த்தினார்.

28 நெருப்புருவத் தான்சாப நீக்கிவரு நீலப்
பொருப்புருவங் கொண்டவிறை பூமகடன் கேள்வன்
றிருப்புருவங் காண்மினென்ற செல்வன் புருவத்
திருப்புருவங் கண்டாங் கிமையவரும் வாழ்த்தினார்.

29 ஆகபத் தனிச்சோதி யாயர்கள் கோமா
னாகரத்தி னாளை யுரத்திற் றரித்தான்
மகரக் குழையிரண்டுங் காண்மினென்ற வள்ளல்
பகர வரியகுழை பார்த்தமரர் வாழ்த்தினார்.

30 உற்ற புவன மனைத்துமுதிப் பித்ததனுட்
சிற்றிடைத் தேவகியார் சீரார் வயிற்றுதித்தா
னெற்றி யிருந்தவா நேரிழையீர் காண்மினென்று
னொற்றைப் பிறைநுதல்கண் டுத்தமர்கள் வாழ்த்தினார்.

31 ஆராயும் வேத மயர்வெய்த வண்டர்கையி
லோரா ரணைகயிற்றாற் கட்டுண்ட வெம்பெருமான்
சீரார் குழல்காண்மி னென்றான் றிருக்குழல்கண்
டோரு முற்றாரு முண்மகிழ்வோ டாடினார்.

வேறு.

32 இவ்வண்ணம் பாத மாதியாய்க் கேச மந்தமா யிலங்குமெய்ஞ் ஞான
மெய்வணக் குழவி யனையவச் சிறப்பை மேதினி யுள்ளவர் தமக்கு
மைவணத் திரைசேர் புதுவைமா நகரின் மறையவர் மகிழ்வொடு முரைப்பப்
பொய்வணத் துயரைக் கடிபவர் பலரும் புகுந்தனர் முகுந்தன தகத்தில்.

33 அணவந் திரண்டே னுருவெடுத் துலாவு மைம்புல வேடர்க ளணியாம்
பூணவம் பூண்டு பொய்ப்பரி மீதாய்ப் பூமியைப் பொடிசெய்வார் செயலைக்
காணவந் தவரைக் காணவந் தவர்க ளுடம்பெலாங் கண்ணிலா கையினா
லூணவா முறக்க மவம்பிறப் பவமென் றுளங்கசிந் துருகிநைந் தொசிந்தார்.

34 எண்ணிநின் றிறைஞ்சிப் பாலனை நோக்கி யிரங்கினர் வாக்கினா லிசைப்பார்[ழுந்தோ
புண்ணியக் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ போதத்தின் பொலிசுடர்க் கொ
வெண்ணிய சாந்தி தருமெழிற் கொழுந்தோ விசைப்பதோர் கமையருட் கொழுந்தோ
விண்ணிய லமுதின் சுவைதிரண் டதுவோ வேதியர் தவந்திரண் டதுவோ.

35. நங்கைதாய் செய்த தவப்பயன் றானே நந்துவந் துற்றமெய்ப் பொருளோ
விந்தமா நிலத்தோர் செய்தவப் பயனோ விலங்குவா னவர்செய்த தவமோ
கந்தநாண் மலரோன் வாசவ னக்கன் காண்பரும் பஞ்சுட ரொளியைத்
தந்துநா முய்ய வந்ததோ ருருவோ வென்றென்று சாற்றிவாழ்த் தினரால்.

36 இப்படி படியிற் பாலனைக் கண்டோர் யாவரு மிரங்கினின் றேத்த
மைப்படி கண்ணார் மாதர்கள் பலரும் மகப்பெறு பற்புமைத் திருவு
மெய்ப்படிந் திலங்கு குழவியோ டளாவி மிகுமனு பவவிளை யாட்டின்
கைப்படிந் திலங்கும் பருவமோர் பத்துங் கருமுகிற் குறைத்தவற் குறைத்தார்.

37 சீருடைக் குழவி யிணையடி யாதி திருமுடி வரையினி லணியா
மேருடைச் சதங்கை சுட்டிமற் றிதனுக் கிடையிடை பூண்பன கமலத்
தாருட னணிந்து வளருநா ளொருநாட் டையலார் தற்பரா வமுதைக்
கூரிய தவத்தோர் செவிப்புல னிறைப்பீர் கொள்ளுமி னமுதெனக் கொடுத்தார்.

38 இன்னமு தருந்திச் சவுளநான் மறைக ளிசைத்தவர் செய்துமுப் புரிநூ
றன்னையு மந்நூ லறைந்தவப் படியே தரித்துமா னுரிமுஞ்சி தரித்து
மன்னிய பிரம சாரியாய்ப் புவியில் வாழுநாண் முழுவதும் வாழ்வா
ரன்னம தூர்தி தாதையா ரடிமை யாகுநா மென்பதை யறிந்தார்.

39 அத்திற மறிந்து வடபெருங் கோயி லுடையவ னடியிணை வணங்கி
யெத்திறஞ் செய்தா லிவருள மகிழு மெனவிறை திருவவ தார
மெய்த்திறத் தாறின் மூன்றினிற் கஞ்சன் விறல்கெடப் பிறந்தவர் தமக்குச்
சித்திர மாலா காரர்தம் பூவிற் றிருவுள மகிழ்தல்சிந் தித்தார்.

40 அதுவலா லடிமைத் திறத்தினுக் குரிமை யிலதென வகத்தினுட் டெளிந்து
மதுமலர்த் துளசி மல்லிகை யலரி சண்பகம் வளர்மதுப் பிசசி
புதுமதுப் பொங்கி வளர்கழு நீர்கள் செவ்வந்தி புகறரு கமல
மிதுவது வென்னா திறைவனார் சாத்தற் கிசைவன நறுமலர் யாவும்.

41 ஆக்கிடு நந்த வனங்கள்பற் பலவு மணிதிகழ் பொய்கைகள் பலவு
மாக்கிமற் றதனா லலர்மலர் போக்கி யரும்புவிட் டப்பொழு தலரும்
பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப் பொய்யிலா மெய்யனார் புரைதீர்
மூக்கிலம் மணஞ்சென் றணைந்திடா வண்ண மூடிவாய் புதைத்துமுக் குணத்தில்.

42 நன்பகல் கிரண்டுந் துடைத்துமெய்ஞ் ஞானச் சுடர்தரு சாத்திகத் துள--
லன்பனார் திருப்பூக் கூடையின் முன்ன மறைந்தசீர் நறுமல ரமைத்து,
முன்பினார் கூடை யிரண்டொரு கோலின் முறையினாற் றொகாத்தவை காவ
யென்பெலா முருக வானந்த வாரி யிருகணா லிடையறா தொழுக.

43 பங்கய வடிபேர்த் திடுந்தொறு மதனுட் பட்டபுற் பசுமைகொண் டோங்கப்
பொங்கிய சாமு மசாமு முருகப் பூமகண் மனமொடு விர்க்கு
மங்கமுங் குழைய நடந்தவர் கிடந்த வச்சுதன் வடபெருங் கோயி
றங்கிய திருமா திருவுள முவப்பத் தடமலர்த் தார்பல சமைத்தே.

44 பகலொரு சாமங் கழித்தபின் னொளிக்கொள் பரஞ்சுடர் வடபெருங் கோயிற்
புகலருங் கருணை யிறைவனை வணங்கிப் பூமலர்க் காவினிற் புகுந்தே
யகலம துடைத்தாய் நொய்யதாய்க் கைசேர்ந் தழகுறு கொட்டவ ணெடுத்து
சகலரு மிரங்க விருசிலங் குடைந்து தட்டற நிரத்தியத் தலத்தில்.

வேறு.

45 மருவேறு மல்லிகையுஞ் சண்பகமும் வளர்துளவு
மிருவேலி தருதளிரு மிலாமிச்சி னெழின்முகுளங்
கருவேரை யறுத்தபிரான் கயிங்கரிய முதிர்ச்சிதருந்
திருவேர்வி லானந்தக் கண்ணீரிற் சேறுசெய்தே.

46 வைத்துநன்னீ ருறப்பாய்ச்சி மாயனிடை மடைமாறப்
பத்தியினார் மடைமாற்றிப் பகற்பொழுதைக் கழித்ததற்பி
னெய்த்தநறு மலரங்கித் திருமாலை நேயத்தாற்
பைத்தபாம் பணைக்கிடந்த பரமனுக்குச் சமைத்தளித்தே.

47 மங்குறோய் மணிமாட வடபெருங்கோ யிலர்தமக்குப்
பொங்குமதுப் பொழிகாவிற் புகுந்துபணி செய்வதற்குக்
கங்குலெனத் தடைசெய்த கயிங்கரிய விரோதியைநொந்
தங்கமிடிந் திருந்தாழ்வா ரணைத்தை யத்தெழுந்தே.

48 நீராடிக் கற்பனையா னியமத்தின் குறைமுடித்துங்
கூராழி சங்கங்கைக் கொண்டபிரான் றனைவணங்கிப்
பாரோரும் விண்ணோரும் பணிந்தேத்தப் பசுந்துளபத்
தாரேறு மெழிற்கூடை தாங்கிநந்த வனஞ்சார்ந்தும்.

வேறு.

49 சிலபகல் கடத்தி ஞான செயல்கண்டு புதுவை மன்னும்
புலவர்க ளிவரை வாழ்த்திப் பூங்கழ லிறைஞ்ச வன்னோர்
மலமறத் திருக்காட் செய்யு மதியளித் தவர்பான் மாறு
நலமரு ளாழி சங்க நற்பொறி நல்கி யாண்டார்.

50 எருடைத் தொண்ட ரோடு மிலங்கைசெற் றவர்க்கு நற்பூந்
தாருடன் சமைத்து மாயன் றாளிணை வணங்கு நாளிற்
பார்முழு தாளு நீதிப் பாண்டியர் குலத்திற் கொண்டு
சீர்பெற வவனி காக்குஞ் சீவல தேவ னென்றோர்.

51 தென்னவன் மதுரை மன்னிச் சிறந்தர சாளு நாளின்
மன்னுமந் நகரி லுள்ள மாந்தர்கட் கரசா லெய்து
மின்னலு மிதமுங் காண வேண்டுமென் றிராக்கா லத்துப்
பொன்னகர் வீதி யெங்கு மொருவனாய்ப் போய்மீள் போதில்.

52 திருநகர் காவ லாளர் செழுமணிப் பாரி போட்டு
வருபவ ரெதிரே மன்ன மன்னவன் மறைந்தோர் நீதி
யருமறை யந்த ணாளன் றிண்ணையின் மறைய வாங்கே
யொருவனோர் மூச்ச னாகி யுறங்குவா னுயிர்ப்பக் கேட்டான்.

53 கேட்டமெய் நீதி மன்னன் கிளரொலிப் பாரிக் காரர்
கூட்டமவ் வீதி நீங்கக் குவலையந் தாங்குங் கையிற்
பூட்டிய வுடைவா ளோடும் புகுந்தி லுறங்கு கின்றான்
மாட்டணைந் திருந்தா னோகொ லிவனென மனத்தி லெண்ணி.

54 இருந்தமன் கிடந்தான் றன்னை யெழுப்பிநீ யாவ னென்று
திருந்துமின் னுரையாற் கூறத் திண்ணையிற் றுயில்கொள் வோனும்
வருந்துயில் யாவு நீங்கி மறையவ னாகு நானென்
றருந்தவன் கூற மன்ன னவனொடு மறைவ னானான்.

55 வேதியர் குலத்து ளீரேல் வெறுமையுற் றிவணந் துஞ்சு
நீதியே தறைக வென்றான் மன்னவ னெறிநின் றோங்கு
மோதிய மறிந்த பார்ப்பா னுரைப்பனுன் கங்கை யாடி
யாதியெம் பிரான சேது வாடுவா னணைந்தே னையா.

56 என்றவ னுரைப்பக் கேட்டாங் கிருநில முழுது மாளும்
வென்றிவேல் வேந்த னந்த வேதியன் றன்னை நோக்கி
நன்றிசேர் கதைகள் போமே னவில்கவென் றறையப் பார்ப்பா
னொன்றுநா னறியே னையா வுளதொரு கிரந்த மென்றான்.

57 ஆங்கதை யருளு வீரென் றரசனு முவந்து கூற
வோங்குசீ ரந்த ணாள னுரைத்தன னுரைப்ப வையந்
தாங்கிய மன்னர் மன்னன் சாற்றுவீர் பயனை யென்றான்
மூங்கரு மறியும் வண்ண மொழிந்தனன் றெளிந்து சொல்லால்.

58 மாரியின் காலந் துய்ப்பான் மற்றுள காலத் தீட்டும்
கூரிய விருளிற் றுய்ப்பான் கொழுஞ்சுடர்ப் பகலி லீட்டுஞ்
சீரிய விளமை தன்னின் மூப்புக்குஞ் சிறப்ப வீட்டு
மேரியல் பதனு லிம்மை தன்னிலே மறுமைக் கீட்டும்.

59 என்பதை யரயன் கேட்டாங் கிரங்கினைந் துருகி யந்த
வன்பனை யுடன்கொண் டேகி யளவறு நிதிய மீந்து
புன்புல னற்று யேகென் றனுப்பியப் போழுதே தானுந்
தன்பெருங் கோயில் புக்கான் றடமணி வயிரத் தோளான்.

வேறு.

60 வந்துமனை புக்கபுவி மன்னவர்கண் மன்ன
னந்தண னுரைத்தபொரு ளாய்வுறுமெய் நாலின்
முந்தவரு மொன்றுட னிரண்டுமுடி வெய்து
மெந்தவகை யான்மறுமை யெய்துமென வெண்ணி.

61 இருந்தன னிருந்துழி யிருட்பொழுது மாயா
வருந்துயரு மாயவெழி லாதவ னெழுந்தான்
றிருந்துநிய மத்தொழில்கள் செய்துமறை வாழ்வைத்
தருந்தவர்கள் கொள்வபல தானமு மளித்தே.

62 அண்டமுகட் டுருவி யாசற நிமிர்ந்த
மண்டல மிலங்குமணி வாயிலுற மன்ன
னெண்டரு திசைப்புவியின் மன்னவ ரிறைஞ்சத்
தண்டரள மார்பனுயர் தானையர் வணங்க.

63 எய்தியரி யாசனம தெய்தியிட ரற்ற
வைதிகர்க ளாசியொடு மன்னவெழின் மன்ன
னுய்திற மறிந்திடு முபாயமவை யெண்ணிச்
செய்திற மறந்துவளர் தென்னவ னிருந்தான்;

வேறு.

64 பூங்கழற்கால் விறற்றென்னன் புக்கிருக்கு மவையின்க
ணோங்கவற்குப் புரோகிதனா மச்சுதன்சீ ரருள்வடிவைத்
தாங்குமெழின் மனத்தினனாய்த் தத்துவனைப் பிரியாதே
யோங்குமடி யவராலும் பழவடியா னெனுமுறையில்.

65 உற்றவனாய்த் தென்னவனுக் குயிர்த்துணையா யறமன்றி
மற்றறியா நிலையானாய் மறைநாலுங் கற்றவனாய்ச்
செற்றமிலா மனத்தினனாய்ச் செல்வநம்பி யெனுநாமம்
பெற்றவனா யெதுவரினும் பேராத நிலையானாய்.

66 உளனொருவ னவன்வந்திட் டோங்கியசீர்த் தென்னவன்முன்
னளவிறந்த மகிழ்ச்சியொடு மணைந்தருகோ ராசனத்திற்
றுளவநெடு மணிமுடிமா றோத்திரம்வாக் கேத்தவஞ்சா
வளவனுக்குஞ் சேரனுக்கு மன்னவவாழ் கெனவிருந்தான்.

67 பொய்மையற்ற மறையோனைப் பூபால னுறநோக்கி
மைமையெனும் புலைச்சமைய மயக்கிடையிற் படாதடியே
னிம்மையிலே மறுமைதனக் கியற்றுவதெப் படிபொன்று
மெய்ம்மையையா னடையுநெறி செல்வநம்பி விளம்புகென்றான்.

வேறு.

68 முத்திசித் திக்கு மாறு மொழிகென மன்னன் கூறு
மத்திரு மொழிகேட் டுள்ளத் தந்தண னன்பு கூர்ந்து
தத்துவ மறிய வேண்டு மன்னவர் தலைவ வென்றான்
மெய்த்திற மருள்வார் யாரென் றரசன்வே தியனைக் கேட்டான்.

69 படிமுழு தாளுஞ் செல்வம் புன்னுனிப் பனியென் றெண்ணி
முடிவிலாப் பேரா னந்த முத்திநீ விரும்ப லாலே
விடிவிலா மாயா கங்குல் விடியும்வீ டெய்தக் காட்டு
மடிகள்வே தாந்தம் போனோ ரருள்வர்நீ யஞ்ச லென்றான்.

70 வேதிய னஞ்ச லென்ற மெய்ம்மொழி விளக்கங் கேட்டுப்
பூதல முழுது மாளும் புண்ணியன் மகிழ்ச்சி தாங்கி
யோதுமெய் வேத வாணருறைவதெத் தலத்தி லன்னோர்
பாததா மரைக ணான்போய்ப் பணிவனீ பகர்வா யென்ன.

71 மன்னவர் பெருமான் கூற மாசறு செல்வ நம்பி
யென்னுமம் மெய்ம்மை யாள னியம்புவா னிலங்கு நீதித்
தென்னவ பூமி யெங்குந் திரிந்துநாங் காண்போ மென்றா
லன்னவர் வெளிவா ராரோ ருபாயமிட் டழைப்போ மென்றான்.

72 சென்றுநாந் தேடி யாடுந் தீர்த்தநின் னன்பி னாலே
யின்றெனி லாடி யய்யென் றெனக்குமீண் டெய்து மாகி
லொன்றதி னுறுதி யுண்டோ வுரைத்தியவ் வுபாய மென்றா
னன்றுகே ளென்று செல்வ நம்பியு நவில லுற்றான்.

73 ஆதியம் பரமன் மாயா வினோதத்தா லனந்த கோடி
நீதிகொள் சமைய மாக்கி நின்றன னதிற்றா னொன்றா
யோதிய சமையத் துள்ளோ ரொன்றையொன் றொவ்வா தென்பர்
வேதமு மவணஞ் சொல்ல விதித்தவம் மெய்ம்மை யாளன்.

74 அத்திரு வேத நீதிச சிரத்தினி லமரு மந்த
மெய்த்தவ னிலையைத் தாங்கும் வேதமு மறிய மாட்டா
வுத்தம குணத்தி னானே யோங்கிய பரம சோதிச்
சித்திர வருள்பெற் றோருங் திறத்தினர் தெளியக் காண்பர்.

75 அதுவலாற் சமையத் தோர்க ளவனருட் சமையந் தன்னை
யிதுவது வாகு மென்றே யெடுத்தெடுத் தியம்பா நிற்பர்
பொதுவென்பர் சிலர்க ளந்தப் பொய்ம்மையைத் தெரிக்க மாட்டா
துதுபதர் மணிபோற் றோன்றி யுறையுமம் மணியோ டொத்தே.

76 அன்றது காண வேண்டி லறைதரு வழிநே ராக்கி
நன்றுதீ திரண்டுங் காணு நன்மையர் தன்மை போல
வின்றுநாம் பரத்தின் மேன்மை யிதுவென வறிய வேண்டி
லொன்றிய மறையோ ராதி யுரைத்தபல் சமையத் தோரும்.

77 வருகவென் றழைத்து நின்பொன் வாயிலிற் கிழியைத் தூக்கி
யருமறை முடிவில் வைகு மாதியம் பரமீ தென்னப்
பொருவறு முறையால் வென்ற புண்ணியர் கொள்க வென்றா
லொருவரே யறுப்பர் வேண்டா ரெனினுமவ் வுண்மை காட்ட.

78 ஆதலா னினக்கு நீன்சீ ரவனியோர் தமக்கு மன்றே
யோதுமிப் பரமீ தென்ன வுணர்ந்ததை யடைத லாகு
மாதவத் தோரும் வாழ்வ ரென்றனன் மறைவ லாளன்
பூதலத் திறைவ் ஞேலே புரையறு பூமி யெங்கும்.

79 ஒன்றுகற் றோர்க ளாதி யோங்குநான் மறையு மோதிச்
சென்றதின் முடிவு கண்ட சின்மயத் தோர்க ளந்தம்
பொன்றலின் முத்தி நீதி புகலவல் லார்க ளெல்லா
நன்றிசேர் மதுரை நண்ணி நவிலுநுங் கட்வுண் மேன்மை.

80 இதுவென வருளி யென்னை யிலங்குநுங் கடவு ளார்த
மதுமலர்க் கமல பாத மன்னனுவத் தென்றுற் கட்டும்
பொதுவுறு கிழியுங் கொண்டு புகழ்கொண்டு போவா னின்றே
கதுமெனப் புகுவீ ரென்னும் வாசகங் கழறி விட்டான்.

81 தூதுவர் கையி னீதி தொடர்ந்தவா சகங்கொ ளோலை
மாதிர மெட்டு முட்ட மன்னவன் விடுத்த பின்னைப்
பூதல முழுதுங் காணும் பொற்கிழி பொருந்தச் சேர்த்துக்
கோதறு நெறியான் மன்னுங் கோமுனை வாயி றன்னில்.

82 கட்டினுன் றூத ரோலை காசினி யுள்ளோர்க் கெல்லா
மிட்டனர் தவத்து ளோரும் யாவரு மறிந்தா ரன்றே
வட்டமா மேரு வொத்த மணிமதிண் மதுரை தன்னி
லுட்டெளி வுடையா ரெல்லாந் தூதுவ ருடனே சென்றார்.

வேறு.

83 சித்தர் புகுந்தார் தேவர் மகிழ்ந்தா
ரத்திரம் வாழ்வெனு மந்தணர் வந்தார்
புத்த ரடைந்தார் சைவர் புகுந்தார்
மத்த முறும்மீ மாங்கிசர் வந்தார்.

84 மாயா வாதியர் வந்துபு குந்தா
ரோயா தேமது வுண்டு தமைத்தா
ஞயா வாமிகீ ளக்கணம் வந்தார்
தேயா வஞ்சவை சேடியர் சென்றார்.

85 ஆசறு சாங்கிய யோக ரணைந்தார்
பாசுப தத்தவ ரும்பதி யுற்றார்
மாசில ஞமெனு மாவிர தத்தார்
தேசுபெ றும்படி கூடல்செ றிந்தார்.

வேறு.

6 ஆருயிர் கொல்லோ மென்னு மருகரு மதுரை சாரந்தார்
தேருமெய் யுன்பில் காளா முகவருஞ் சென்று சேர்ந்தார்
பாருறு மின்ப மல்லாற் பரமெனல் பழுதா மென்றே
யோருல காய தத்தோ ரெனுமவ ருடனே சென்றார்.

87 நல்லியற் கூட றன்னி லிவரிவர் நண்ணு நாளில்
வில்லிபுத் தூரின் மாயன் விட்டுணு சித்த னென்பா
னெல்லியம் பொழுதிற் றுஞ்சு மிடத்தினி லொருநா ளெய்தி
யல்லியங் கண்ணா னோக்கி யருளளித் தன்பன் மாட்டில்.

88 இருந்தவர் திருப்பேர் சொல்லி யெழுப்பினா ரெழுப்புங் காலை
யருந்தவ முடையார் துண்ணென் றெழுந்திருந் தருகி னோக்கக்
கருந்தட முகில்போன் மேனிக் கருணையங் கடலைக் கண்டார்
குருந்துறைந் தவனே போற்றி யெனக்குழைந் தடியில் வீழ்ந்தார்.

## வேறு.

89 வையமுழு துண்டவர் பதங்களில் வணங்கி
நைவுறு மனத்தின னெழுந்துநவை யில்லாக்
கைதலை குவித்தெழில்கொள் கண்கள்புனல் சிந்தச
செய்திற மறந்துருகு சிந்தையரு நின்றார்.

90 நின்றநெறி யன்பனிலை கண்டுநிக ரில்லா
வொன்றுளது கேளென வுகந்திறை யுரைப்ப
மன்றல்கம ழுந்துளப மாலைபுனை மார்பா
வின்றறியும் வண்ணம தியம்பிடுக வென்றான்.

## வேறு.

91 நன்னெறி மதுரை தன்னின் னாற்பெருந் திசையுங் காணத்
தென்னவன் விகாரத் தாலே திரண்டபொற் கிழியொன் றாக்கி
மின்னவிர் முடியான் றன்சீர் விளங்கிய வாச றன்னின்
முன்னுறத தூக்கி வைத்தான் முகுந்தனார் மதலாய் நீபோய்.

92 அறுத்திவண் கொணர்வா யென்ன வச்சுத னருளிச் செய்ய
வெறுப்புடன் விருப்பொன் றில்லா விட்டுணு சித்தன் கூறுங்
கறுத்தமா முகிலே வாதில் வென்றவர் கைக்கொ ளன்றே
நிறுத்தினன் மன்னன் வாய்மை நீணில மதனிற் றொண்டன்.

93 எதுரைத் தறுப்பே னெந்தா யிருகையா லெடுத்து வெட்டு
நீதிமண் வெட்டிக் கோட்டா னிறைபெருந் தழும்பைக் காட்டி
வேதநிச் சயங்காட் டாதே விமலனை யறுக்க லாமோ
பூதல மாளு மன்னன் பொறுப்பனோ புகல்வா யென்றான்.

94 அன்பரிவ் வாறு கூற வச்சுத னவரை நோக்கித்
துன்பிலா மன்னன் கேட்ட சுருதியின் முடிவைக் காட்டி
லென்பரம் வாயி றன்னி லிலங்குபொற் கிழிகைக் கொள்ள
லுன்பர மேகா யென்றாங் குரைத்திட வுரைப்பார் தொண்டர்.

95 பூதல முழுதி லுள்ள புலவர்கள் சபையி னுள்ளே
மந்திரம் பொருந்து திண்டோண் மன்னவர் மன்னன் முன்னே
யோதுமோ ரெழுத்தும் போகா ஆத்தையே னுடலந் தாங்கி
நாதனே வெட்க மின்றி நண்ணுந னலனோ வென்றார்.

96 என்றிவா றுரையக் கேட்டங் கிறைபெரு முறுவல் செய்து
நன்றிகொள் வேத நான்கு நவிலுஞ்சாத் திரமோ ராறு
மின்றென துடைமை யாகு மென்னைநீ யுடைமை யாளு
லொன்றுனக் கரிய துண்டோ வுத்தம குணத்தி னோனே.

97 என்னமின் னவிரு நேமி யெம்பிரா னருளிச செய்யப்
பொன்னடித் தலத்தில் வீழ்ந்து புண்ணியக் கொழுந்தே யுன்னூர்
தென்னவன் மதுரை நன்னிற் றிருமக ளுதை வின்றே
மன்னுவான் விடைகொள் கின்றேன் வாழியென் றெழுந்து வாழ்த்தி

98 நின்றவர் தம்மை யேகு நீயென வனுப்பித் தாமுஞ்
சென்றுதங் கோயில் சேர்ந்தார் திருமறு மார்ப ரன்று
நன்றிகொள் பெரியாழ் வாரு நற்றவத் தோர்க டாங்கப்
பொன்றிகழ் சிவிகை யேறிப் பூபதி கூட னேக்கி.

99 எகினு ரன்பர் சூழ விமையவர் வணங்கி வாழ்த்த
மாகமீ திலங்குஞ் சோதி மதிக்குடை நீழற்றச சீர்கொள்
பூகமார் மருத வேலிப் புதுவைமா நகர நீங்கி
மேகமே காவா யென்னு விழிவழி யருவி சோர.

வேறு.

100 கற்குழைய மரங்குழையக் கானில்வளர் விலங்கினத்தின்
விற்குழையப் பறவைகளின் மெய்குழைய மேதினியிற
புற்குழைய வேதாந்தப் பொருள்குழைய மெய்ஞ்ஞானச்
சொற்குழைய வேகுமவர் துலங்குவனம் பலகடந்தே.

வேறு.

101 சென்றனர் மதுரை நோக்கித் தென்றிசை வாயில் சேர்ந்தங்
கன்றதி னுறையுங் கூட லழகிய பெருமா டன்னை
யொன்றிய மனத்த ராகி வணங்கினா ரோவா தன்பா
னின்றிருந் தவரை நோக்கி நிலவுசித் திரம தானார்.

102 இமைத்திலர் விழிகள் வாயா லிசைத்திலர் துதிக ணின்ற
தமைச்சில கடிகைப் போது முணர்ந்திலர் தரணி தாங்குங்
கமைப்பெரு முகின்மேற் சென்ற கருத்தினைத் திருத்தி வாக்கா
லமைத்தொடர்ந் தெடுத்தாட் கொள்வீ ரென்செய்கேன் கைம்மா றென்றார்.

103 அவணநின் ருழ்வார் கூற வண்டமுண் டண்டத் துள்ளே
யுவணமீ தேறி வீதி யுலாவுவா ரிசைப்பா ரந்தோ
விவணமோ ரன்பா னோக்கி லிகபரத் திலதென் றெண்ணி
மவணமற் றிவரே சென்றவ் வாதினை வெல்வீ ரென்றார்.

104 என்றிறை யருளிச் செய்ய விருதணீ ரருவி சோர
நின்றவ ரிருந்தார் தம்மை நீணிலத் திறைஞ்சி வாழ்த்திச்
சென்றனர் வீதி யூடே தென்னவன் செயலே தென்னிற்
குன்றென வுயர்ந்த நீதிக் கோமனை வாயி லெய்தி.

வேறு.

105 வாசம லர்த்திரு மங்கையும் வாணியும் வீரம டந்தையும்
நேசமு டன்புவி மங்கையு நேர்பெற நேமி தரித்தவன்
றேசுடை யானவர் கோனெனச் செல்வந மிகுந்துசி றந்தசிங்
காசன மீதிலி ருந்தன னண்டரும் விண்ணவ னெருங்கினர்.

106 நன்றித ருஞ்செல்வ நம்பியு நான்மறை யாளரு மன்பருஞ்
சென்றுயர் தென்னனி ருந்ததோர் சீரிய வாசன மாடுற
வன்றரு ளெய்தவி ருந்தன ராசரு மன்னர மைச்சரு
நின்றனர் முத்திவி ரும்பினோர் நேர்பெற வந்துநி றைந்தனர்.

107 பொக்குமி குத்துழல் புத்தரும் போதம கன்றவை சேடரு
நக்கனை நம்பிய சைவரு நன்றிகொள் சாங்கிய யோகருந்
தொக்குல காயத வீணருந் துன்புறு மாவிர தத்தரு
மெக்கரு மத்தினு மையுற வேயுறு மார்பிரு மெய்தினர்.

108 மாயைத ரும்பெரு வாதரும் வஞ்சம்வி டாவரு கோர்களு
மாய்வுறு வாமியர் கூட்டமு மாதிய வாதிய ரெய்தினு
ரேயுறு மவ்வவை யின்கணே யேழுல குண்டவர் தொண்டராய்த்
தூயது யத்தைவி ளக்கிய சுந்தர வந்தணர் தோன்றினர்.

109 தோன்றிய வன்பரை நோக்கினன் றேமறு வார்செல்வ நம்பியு
மூன்றுல குண்டவர் தொண்டனு ரெய்தின ரென்றுமொ ழிந்திட
வூன்றுமெய் யன்பின்மன் னோக்கின னுத்தம னூர்வண மாயனுய்த்
தோன்றினர் தென்னவன் கண்கணோர் துண்ணென வோடி யெழுந்தனன்.

வேறு.

110 எழுந்திருந்த வீறற்றென்னன் செல்வநம்பி யுடனேகிச்
செழுந்தவனை யடிவணங்கிச் சீரியநான் மறைக்குமொரு
கொழுந்தென்னத் திருவுருவங் கொண்டபெரி யாழ்வாரும்
விழுந்திறைஞ்சு மன்பர்களை விரைந்தெடுத்தா சீர்வதிப்ப.

111 கொடியகொடு வினைக்கிடாய்க் கூற்றுவன்கைப் பட்டுழலு
மடியனேற் கருணல்கி யாளவந்த திருவுருவோ
படிமீதின் மாமாயை பாறவந்த பரஞ்சோதி
வடிவிதுவோ வெனமன்னன் மகிழ்ந்துரைத்தாங் குடன்கொடுபோய்.

112 சீரியசிங் காசனத்திற் றேவவினி திருத்தியென்று
னேரியனுன் மறைவல்லா ரெழிலரியா சனத்திருந்தார்
கூரியமெய் யறிவில்லா வாதியர்கள் குழாத்திடையிற்
றேரிலுறு மிரவியெனச் சென்றவர்தே வர்கள்கண்டார்.

113 வாசவனு மதுகண்டு மற்றிவனுற் றென்னவனம்
ஈசனடி யறிந்தடைவ னிவையுலக்க வேண்டுமெனத்
தேசுபொலி சுரர்குருவைச் சென்றுசிங்கா சனத்திருந்த
மாசிலான் றனைவெல்க மானுடனு யெனவிட்டான்.

114 இந்திரன்சொற் பணியாலே யிருநிலத்தில் வியாழகுரு
வந்துமா னிடவடிவாய் மன்னவன்முன் றோன்றினு
னெந்தநா டெவ்வூர்சீர் யாவரதை யியம்புமெனச்
சந்திரன்சீர்க் குலத்துதித்த தார்வேந்தன் மகிழ்ந்துரைப்ப.

115 பொன்னுலகாள் பவன்கூற்றாற் போந்தவர்சென் றுங்கிருந்து
மன்னவநீ கிழிகட்டி வாதிடைநின் றவர்கொண்மி
னென்னவுரைத் தனைபார்ப்பா னேதுசெயித் தவன்றுளிற்
றென்னவிழுந் தனையாதைச் செப்புதிநா னெனைச்செப்ப.

116 என்றுரைத்த வவ்வேலை யிருந்தசம யத்தவர்க
ளொன்றுபட வியாழகுரு வுடன்கூடி முடிவேந்தை
யின்றெமது முன்னாக விருநிலத்தி லிறைஞ்சுவித்த
நன்றிதரும் வேதியரே கிழியறுக்க நாமுமென.

117 சன்னைசொல்லி யவன்பதத்திற் றாழ்ந்தமன்னை மிகவிகழத்
தென்னவனு மருகிருந்த செல்வநம்பி முகநோக்கி
யென்னையினிச் செய்வதென வியம்பியிடு மளவையினின்
மன்னவமற் றிவராவரை வெல்வர்வருந் தேலென்றான்

118 எனவியந்து செல்வநம்பி யுரைப்பவிற வியல்வேந்தன்
மனமகிழ்ந்தாங் கினிதிருந்தான் வானவர்கோன் விடுத்தவனு
மனவயல்சூழ் புதுவைநக ரசசுதனீர் விடுத்தவரும்
வினவரியபரசமைய தாக்கத்தின் மிகமூண்டனர்.

119 பரத்துவமே தறைந்துகிழி பற்றுமென்றான் வியாழமுனி
விரத்திநெறி நின்றவரும் விண்டுவென்றா ரண்டர்குரு
வுரத்துமல ரயனென்று ரேதைவண்ணர் தொண்டரவன்
சிரத்தையரின் கைக்கொடுத்த திறமறந்தா யோவென்றார்.

120 நன்றவ்வா றுணலு நாரணனன் றேபரமன்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பரென்றே கூறுதுநா
மென்றனன்வா னவர்குரவ னேழுலகு முண்டவனை
யொன்றியசீர் மனத்துள்வைத்த வுத்தமனார் நகைத்துரைப்பார்.

121 அறிவிலாய் முன்புகன்ற வயன்சிரத்தை யறுத்துரைத்த
மறியமருங் கரத்தரனார் மற்றவினை போக்கியிடு
நெறியறியார் பலியிரந்து நெடுங்காலந் துயருற
வெறியார்பூந் துழாய்முடியெம் விண்டுவென்றோ வதுதவிர்த்தான்.

122 இவ்வண்ண மிவர்கூற விமையவர்தங் குருவுரைக்கு
மெய்வண்ண முடைக்கால கற்பிதத்தில் விட்டதெனப்
பொய்வண்ணக் காலத்தைப் பரமென்றான் போக்கற்றான்
மைவண்ணப் பரஞ்சோதி தொண்டரிவை மறுத்துரைப்பார்.

123 காலமொரு மூன்றுமுடைக் கடவுளரார் கருத்தினிடை
மூலமுடி வறியாதாய் மொழிகவென வவன்மொழிவான்
ஞாலமிசை யிருணீக்கி நற்பொருளை விளக்குவிக்குங்
கோலவெழிற் கதிரொளியை யவன்பரமா மெனக்கொண்டே.

124 உரைத்தனனவ் வுரைகேட்ட வுத்தமனார் முறுவல்செய்து
வரைத்தடந்தோள் விறன்மன்னன் மாமுகத்தை நோக்கியிவன்
றிரைக்கடலுட் டினம்பிறந்துஞ் செத்துமுழல் கின்றவனை
யிரைக்குமறை காணாத பரமென்று விசைந்திடுமோ.

125 சொல்லாயென் றனராழ்வார் தொல்லுலகங் காத்தளிக்கு
மல்லார்திண புயத்தென்னன் மதிகெட்டா னெனவுரைத்தான்
கல்லாத சுரர்குருவுங் கட்டுரையற் றாங்கிருப்ப
வெல்லாருந் தங்கடங்க டெய்வமெழிற் பரமென்றார்.

126 அதுகேட்ட செல்வநம்பி யாழ்வார்த முகநோக்கி
யிதுவேணிப் புல்லருட னெம்பெருமான் விளையாடன்
முதுவேத முதற்பொருளை மொழிந்துவெளி யிடுகவென
வதுவேநங் கருமமென வாழ்வாராங் கெதிர்ந்தவரில்.

127 சைவர்களாங் கரித்திரட்கோர் சாற்றுசிங்க வேறனார்
பொய்யுடைய வாமிகளாம் புலையிருட்கா தவனனை
ரையமுறு புத்தர்களா மாட்டினத்துப் புலியானார்
மையலரு கப்பஞ்சின் மாகனலா னார்பிறராம்.

128 சற்பங்க டனைமாய்க்குங் கருடனெனத் தான்சமைந்தார்
நிற்பனசெல் வனவிரங்க நேமியான் றிருத்தொண்ட
ரற்புதமென் றமரர்குழா மிறைஞ்சவுரா ணத்தந்தச்
சிற்பரத்தை யுலகுய்யத் தென்னவன்முன் கட்டுரைத்தார்.

129 கட்டுரையைக் கேட்டுமெண்ணேர் கனன்மெழுகாய்க் கரைந்திடவிண்
ணெட்டுயர்ந்த மண்டபத்திற் றூக்கியசீர்க் கிழிதாழ
வெட்டெழுத்துக் குறைவிடமா மாழ்வார்த மிருதாளிற்
பட்டகிழி தனையறுத்துப் பாண்டியன்முன் பரிந்திட்டார்.

130 தென்னவன்ச செயல்கண்டு திருவடியி லுறவீழ்ந்தான்
முன்னவனை யிகழ்ந்துரைத்த முழுமூடச் சமையத்தார்
மன்னவனு முறுவல்செய வந்தாழ்வார் பதத்திறைஞ்சப்
பொன்னகரத் திறைபணியாற் போந்தவரும் போயினரால்.

## வேறு.

131 இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் குழாங்க ளார்ப்பப்
படிமுழு துடைய வாளும் பாண்டியன் பரிவி னேடும்
மடியனே னல்ல நீர வாளவந் தவரே யின்றிக்
கடிநகர் வலமாய் நண்ணிக் காட்சிதந் தருள்வீ ரென்றான்.

132 என்றசொற் கேட்ட போதி லீசனை நினைந்தாழ் வாரு
மொன்றதற் காமா காதென் றுரைத்தில ரொடுங்கி நின்றார்
சென்றெடுத் தவரை நீதித் தென்னவன் நீலக் கைக்குன்
றென்றென வுயர்ந்த யானை யெருத்தமீ துவப்போ டேற்ற.

133 பூதமோ ரைந்து மேத்தப் புரையறு மறங்க ளேத்த
வேதமோர் நான்கு மேத்த விண்ணவர் குழாங்க ளேத்த
வோதுமே ழுலகு மேத்த வோங்கிரு சுடரு மேத்த
மூதறி வுடைய மன்னன் சேனைகண் முழுது மேத்த.

134 அந்தணர் குழாங்க ளேத்த வருமுனிக் கணங்க ளேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதி தோறுஞ்
சந்தனக் குழம்பு சுண்ணந் தாதவிழ் மலர்கள் சிந்தி
யிந்திர விழாவ தென்ன விறைத்தனர் மணியும் பொன்னும்.

135 மதிக்குடை நிழற்றத் தெய்வ மங்கையர் கவரி வீசக்
கதிக்குநின் றிரங்கு வோருங் காசினி யோருங் கண்டு
துதித்தெழ வேகுங் காலைச் சுடரொளிப் பரலோ கத்திற்
பதித்தபே ரருளோ டோங்கும் பரவசா னந்த நாதன்.

136 அந்தமில் பேரின் பத்தா ரடியரோ டமைந்த சோதிச்
செந்திரு மார்ப ராழ்வார் சிறந்தசீர்ப் பவனி காண
வந்தனர் கருடன் மீதின் மான்மறிக் கரனும் வையந்
தந்தநான் முகனும் போற்றத் தாமரைச் செல்வி யோடும்.

137 மண்ணெலா மனிதர் செற்ற மறையவர் மறைகள் பாட
விண்ணெலா மிமையோர் செற்ற விரிஞ்சனு மரனும் போற்று
மண்ணலார் சித்தர் முத்த ரணியணி நிரைப்ப வாங்கே
கண்ணெலாங் களிப்ப வான வேந்தனுங் கசிந்து போற்ற.

138. கண்டயர் பெரியாழ் வாருங் கருத்தினி லிறுமாப் பற்பன்
கொண்டலர் கொண்டல் வண்ணன் குளிர்மதி வதனங் கண்டார்
புண்டரீ கத்தன் வைகும் பூவையை மார்பிற் கண்டார்
தொண்டர்கள் குழாத்தைக் கண்டார் துணைவிழி யருவி சோர்வார்.

139 கருதுவார் கருத வாகுங் கருணையங் கடலார் மேனி
மிருதுவை யிளமை தன்னை மெய்யுறு குழைவை மார்பில்
வருதிரு வருளைக் கண்டு மண்ணவர் கண்ணே றாலே
பொருவரு முருவில் மாசு புகுமெனத் துணுக்கென் றஞ்சி.

140 தன்னிரு விழிகள் சென்று சாரினும் பிழைக்கு மென்ன
முன்னுறப் பல்லாண் டென்று மொழிந்துகாப் பிட்டக் கோலம்
பின்னுறக் காண்போ மென்று பிரிந்தொரு திசையை நோக்கி
யென்னையாண் டருள்வார் பல்லாண் டெனுந்திருப் பதிகந் தன்னை.

141 ஆனைமே லிலங்கப் போட்ட வணிமணி தாள மாகத்
தேனையுந் தலங்க லான்றன் சேவடி செவ்வி மார்பிற்
கானையுந் தளத வல்லி கதிரொளித் திகிரி சங்க
மேனைய பிறவுங் காப்பென் றிசைத்தன ரிசைத்த பின்னர்.

142 நோக்கினார் திருக்கோ லத்தை நோற்றநோன் புடைய வன்பர்
வாக்கொடு மனமுங் கண்ணும் வள்ளற னுருவிற் பாயக்
கோக்கிளர் மதுரை யுள்ளோர் மன்னவன் கோதி லாத
பாக்கியச் செல்வ நம்பி யெனுமவர் பலருங் காண.

வேறு.

143 உளங்கருணைச் சடகோப னுரைத்ததிரு வாய்மொழியில்
விளங்கியசீர் நெறிப்படியே விமலனருட் கருடன்மிசைக்
கிளர்ந்துபிர மன்சிவனென் றிவர்வணங்கக் கிளரொளியா
யளந்தெவரு மறிவரிய வச்சுதனார் வீற்றிருந்தார்.

144 அவ்வண்ணம் வீற்றிருந்த வருளுருவை யாழ்வார்கண்
டெவ்வண்ணத் தவஞ்செய்தேன் யானந்தோ வென்வழுது
மவ்வண்ண மிலாதவரு மலர்க்கரங்கள் சிரங்குவித்து
மைவண்ணப் பரனைகைம் மாறில்லே னெனவாழ்த்தி.

145 காராருந் திருவுருவின் கருணையினா லுளமழிந்திட்
டாராத காதலினா லனுபவமுள் ளடங்காதே
கூராழி சங்கேந்துங் கொண்டலுக்குப் பாமாலை
சீராருஞ் சொற்றமிழாற் பாடவென்று சிந்தைசெய்தே.

146 மச்சமுதல் கற்கிவரை மண்ணிடையில் வந்துதித்த
வச்சுதனார் திருவுருவி லாயிர்மனை வளர்த்தவர்த
மெச்சுதிருக் கவியர்ண குணங்களுமெய் விளங்கியசீர்ப்
பச்சைமுகிற் பாலகனும் பருவத்தின் பலசெயலும்.

147 பாடுவான் சிந்தித்துப் பரிவோடு மிறைதிருத்தாள்
சூடுவா னினைந்தனரத் தோமில்லார் தஞ்சிரத்திற்
றேடுவார் தேடிநின்ற திருமால்சீ ரடிவைத்தா
னாடினார் வானவர்கண் மண்ணவர்க ளதிசயித்தார்.

148 சைவர்முதற் சமயத்தார் தத்தமக்காங் கடவுளரைக்
கைவிட்டா ரிங்கில்லா ரங்கில்லை யெனுங்கருத்தான்
மெய்வைத்தார், திருமால்சீ ரடியார்தம் விரைமலர்த்தா
ணைவுற்றான் பாண்டியனு நாரணன்சீர் நலந்தெரிந்தே.

149 நின்றனனக் காலத்து நெடுமேலுஞ் சமயிகளை
வென்றவரே யின்றுமுதல் வேதக்கோன் பட்டர்பிரா
னென்றிசைக்கு மெழினாம மியம்பினோ மெனவியம்பிச்
சென்றனர்வான் றேவருடன் றெளிவிசும்பிற் சேர்ந்தனரால்.

150 பட்டர்பிரா னாழ்வாரும் பரஞ்சோதித் தடங்கடலா
மெட்டெழுத்தின் றனிநாத னேகியபின் மாகரியை
விட்டிறங்கித் தோற்றவரை வியன்மதுரை மன்னவனை
மட்டவிழ்பூந் துழாய்முடியா னடியவராய் மன்னவைத்தே.

151 மனக்கருத்து மூற்றுவிப்பான் வடமதுரை பிறந்தவர்வாழ்
புனத்துளப வனஞ்சூழ்ந்த புதுவைநகர் தனிற்போந்து
தினந்தினமு மருள்விளங்குந் திருப்பல்லாண் டாதியாய்க்
கனத்தவருட் சென்னியோங் கந்தமாய்க் கலைதெரிந்தே.

152 நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்று நாற்பதையு
மின்னிசையா லெடுத்தோதி யேழுலகு முய்வித்தாங்
கன்னவயற் புத்தூரி லளவிறந்த பலகால
மின்னுமணி முடிமாயன் றிருவடிக்கீழ் வீற்றிருந்தார்.

ஸ்ரீ

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

குறையலூர்ப் பரகாலர் கோதில்பெரும் புகழ்விரிவை
யிறைவெளியிட் டடியேன்பா லிருந்தறைந்த படியியம்பி
மறையாய்ந்த திருமழிசைப் பிரானார்மாப் புகழுமர்ந்த
முறையாலே பகர்வனல்லோர் முனியாது கொளல்வேண்டும். (௧)

அப்படியே சிலநாள்க ளற்றதற்பி னங்கொருநா
ளொப்பரிய பார்க்கவனே முதலாக வுளமுனிவ
ரிப்படியிற் றிருமகள்கோ னின்பமுறக் கமலையொடு
மெப்பொழுதும் பிரியாம லினிதமரு மிடம்பலவும். (௨)

உண்டெனினு மோரிடத்தி லுற்றிருப்ப னத்தலத்தைக்
கண்டறிவ மெனினமக்குக் காண்பரிதா மதுகாட்டும்
புண்டரிகத் தயன்சென்றப் புனிதனைநாம் புகழ்ந்திறைஞ்சித்
தொண்டுசெய்து கேட்பதுவே கருமமெனத் துணிவினொடும். (௩)

சென்றார்க ளயனருகிற் செறிந்தார்கள் விழுந்திறைஞ்சி
நின்றார்க ணான்முகனு நீணிலத்தி லெப்பொழுதுங்
குன்றாத ஞானத்தின் கொழுந்தாய செழுந்தவரே
யென்றாசி பலகூறி யிருமினென விருந்ததற்பின். (௪)

வேறு.

பற்பல வுரையுங் கூறிப் பங்கயப் போதி னானு
மற்புத முனிவோர் தாமு மன்புசெய் திருந்த வேலை
முற்பக லுலக மெல்லா முதற்படைத் தருளு மாதிச்
சிற்பரா வெங்கட் கொன்று செப்பிட வேண்டு மென்றார். (௫)

ஆங்கவை யேது சொன்மி னென்றன னலருள் வேத
னோங்கிய தவத்தின் மிக்க வுத்தம முனிவர் சொல்வார்
தாங்கிய வுலக மெல்லாந் தன்னுளே யிருத்திக் காத்துப்
பூங்கம லத்தி லுன்னைப் புறப்பட விட்ட மாயன். (௬)

விண்மிசை யிருப்ப தன்றி வேதியர் துதிசெய் தேத்த
மண்மிசை நாளு நாளு மன்னிய விடங்க டம்மிற்
பண்ணமர் மறைகள் வல்லாய் பதுமையேர் கேள்வப் போது
நண்ணுமோ ரிடமுண் டென்றே நான்மறை நவிலக் கேட்டேம். (௭)

அத்தல மேது காட்டி யருளுதி யென்று போற்ற
வுத்தமப் பிரம னந்த முனிவரை யுவந்து நோக்கிச்
சித்தம தொருக்கிக் கேண்மின் றிருமழி சைக்கு நேரா
யொத்தவத் தலமொன் றில்லை யதிலுவந் துறைவ னும்பன். (௮)

என்றனன் பிரமன் கேட்ட முனிவர்க ளிசைப்ப ரெந்தாய்
நன்றதின் மேன்மை காட்டி யருளுதி நங்கட் கென்று
ரொன்றிய மலருள் வைகு மும்பனும் புவிமே லினறே
சென்றதிந் திடுவோ மென்னச் செறிந்தவம் முனிவ ரோடும். (௯)

விண்மிசை நின்று போந்து வினையெலாம் விளக்கும் வஞ்ச
மண்மிசை யிறங்கிச் சீரார் மழிசையம் பதியை மன்னிக்
கண்ணம ருலகைத் தூக்குந் தராசொன்று கடுப்பிற் பண்ணி
யெண்ணரு முனிவர் காண விசைத்தவத தராசு தன்னில். (௧0)

கூறிய வுலகை யெல்லாங் குறித்தொரு தட்டில் வைத்து
மாறிய தட்டின் மற்றை மழிசையை வைத்துத் தூக்க
வேறிய மழிசைத் தட்டாங் கெட்டனை யெழாத வாறும்
வேறுசெய் துலகம் வைத்த தட்டுவான் மேவு மாறும். (௧௧)

கண்டனர் முனிவர் விண்ணோ காசினி யோர்கள் செய்ய
புண்டரி கத்துள் வைகும் புனிதனை யிறைஞ்சி வாழ்த்தி
யுண்டிதிற் றெய்வ மென்ன வொடுங்கிமா தவங்கள் பண்ணி
யெண்டரு தினமும் வாழ்ந்தாங் கிருந்தன ரிருந்து ளாரில். (௧௨)

பார்க்கவ முனிவன் செய்ய பவளவாய்க் கமலச் செங்கட்
கார்க்கடல் வண்ண னுரைக் கருதியோர் யாகம் பண்ண
வார்ப்பொலி கொங்கைச் செங்கண் மலாமக ளோடும் வானோ
ரார்ப்பொடுந் தோன்றி யம்மா லவனுட னருளிச் செய்வான். (௧௩)

மாசறு தவத்தி னுனே மற்றுநீ யின்று செய்த
வாசறு மியாகந் தன்னு ளளவறு மின்ப முற்றேம்
பேசுநீ வேண்டு மின்பம் பெறுதிநா மீவே மென்றே
யீசனு ரருளிச் செய்ய விருடிநின் றிறைஞ்சிக் கூறும். (௧௪)

அருமறை முதல்வ நான்செய் மகத்தினி லன்பு கூர்ந்துன்
திருவுள மகிழ்ந்த தென்றாய் சிறியனேற் கதன்மேல் வேறோ
கருதிடும் பொருளு முண்டோ கண்ணனே நீயின் றென்பாற்
றருவது மடியேன் கொள்ளும் பொருளுமற் றவையே சாற்றில். (௧௫)

என்றன னிருடி மாயன் யாகத்தி லுவப்பிற் பார்ப்பா
னன்றுரைத் திட்ட சொல்லி லளவறு மன்பு கூர்ந்திட்
டின்றுன தருள லாதே யாவையும் வேண்டே னென்றாய்
நன்றுநின் னினைவா னுலு நானிவண் வந்து தோன்றி. (௧௬)

எப்பொரு ளெனினு மொன்றை யீந்துபின் னேகே னுகி
லப்பவென் னருண்மா சுன்னு மாதலா லென்பா லொன்றைத்
தப்பற வுரைத்தி யீவே னென்றிறை சாற்றப் பார்ப்பா
னொப்பிலா மணியே கேட்டி யெனத்தொழு துரைக்க லுற்றான். (௧௭)

விண்ணவா பதங்கள் பொன்றும் விடைவலான் பதமும் பொன்று
மண்ணவர் பதமும் பொன்று மலரயன் பதமும் பொன்றுங்
கண்ணமற் றதனு ளொன்றுங் கைக்கொளேன் காயா வன்ன
வண்ணவென் சிந்தை யுள்ளே மலர்மகள் பூமி நீளை. (கஅ)

அடிதொழு திறைஞ்சி யேத்த வல்லுநன் பகலு மாதி
முடிவிடை யிவைக ளில்லா முழுமுதற் சோதி நீயே
குடிபுகுந் தென்று நீங்கா திருத்தனன் கொள்வ தென்றுன்
படிமுத லுலக முண்ட பரம்பரன் பகர லுற்றுன். (கக)

அப்படி சிந்தை யுள்ளே யிருப்பனு னன்ப னின்பா
லொப்பிலாப் புதல்வ னிவ்வா றுருவனே யுவப்பி னேடு
மிப்படி தன்னி னல்கி யிடுகின்றே னிருததி யென்னச்
செப்பருந் திருவின் கோமான் சென்றுவை குண்டஞ் சேர்ந்தான். (உ0

## வேறு.

இறையிவண மகன்றதற்பி னிருநிலத்திற் பார்க்கவன்பான்
மறைபுகலுந் தைமகத்தில் வானவர்க ளுதிசெய்யப்
பிறையணியுஞ் சடையானும் பிரமனுங்கண் ணேமகிழத்
திறைகொணர்ந்து முனிவர்தொழத் திருமழிசைப் பிரானுபிறந்தான். (உக)

## வேறு.

அந்தமில் குணத்தான் பிறந்ததிற் பின்பு பார்க்கவ னவன்முக நோக்கி
யிந்தமா நிலத்திற் புத்திர னுடையார்க் கிறையுரு ரேமென் றெண்ணிச்
சிந்தையில் வெறுத்தப் புதல்வனைக் கொடுபோய்த் திருமக ணயகன் றணையாய்
விந்திய மணைந்தோர பிரம்படிக் கீழே விரித்தொரு சிறுதுணி மேலே. (உஉ)

இட்டுமீண் டேகித் தன்பதி யணைந்தாங் கிருந்தன னெழின்மலர் மிசையா
ளுட்டெளி வுடையாற் குணவளித் திடச்சென் றுகந்துதன் றிருமுலைப் பாலைக்
கட்டுற வூட்டுந் தேனிரு லாக்கிப் பிரப்பிலைக் கவட்டில்வைத் தருந்து
மட்டுமட் டாக வாய்க்கொளும் படிசெய் தேகினுள் வானவர் துதிப்ப. (உங)

## வேறு.

அங்கவ ரமரு நாளி லத்திரு நகரி லென்றுந்
தங்கிய மேதை யாரிற் சாற்றிய திருவாளற்கும்
பங்கய வல்லி யாக்கும் படியிலோர் பாலனின்றித்
தங்களி லழுது சோாவார் தத்துவ னருளி னுலே. (உச)

அருந்துநல் லுணவுக் காக வடுத்தன் றொழில்கள்செய்வார்
வருந்திநற் பிரப்பங் கூடை மாசற முடைந்து விற்பார்
பொருந்தினர் பிரப்பங் காட்டிற் பொருவிலா நிலையா ரங்கே
திருந்துமச் சேயைக் கண்டெஞ் செய்தவப் பயனே வென்ன. (உரு)

# திருமழிசைப்பிரானுழ்வார் பிரபந்தம்.

துதிசெய்தெவ் வுலகும் போற்றுந் துகளறு நிலையி னாரைப்
பதியினிற் கொணர்ந்தா ரன்னை பங்கய வல்லி யாரும்
விதிமுறை சுரந்து நல்கு மெய்ம்முலைப் பாலு மூட்டி
மதிசெயு மாவி யென்ன வளர்த்தனர் மாசி லாதார். (௨௬)

## வே று

அந்த மில்லாப் பெருங்கருணை யமுத வாரி யண்டர்தொழ
வந்து புவியில் வசுதேவர் மகனாய்ப் பிறந்து மாயத்தா
னந்த கோபர் திருமகனாய் ஞால மறிய வளர்ந்ததுபோற்
றந்தை தாய ரிவராகத் தன்னை யனையான் சகமனைத்தும். (௨௭)

வணங்க மழிசை வளம்பதியில் வந்து தோன்றி மேதையரி
னுணங்கு கேள்வி யுடையவர்முன் னோற்ற நோன்பின் பொருட்டிலவர்
கணங்கொ டிறைஞ்ச வளர்ந்தருளிக் கலித்த வினைக ளோரிரண்டுங்
குணங்கண் மூன்றுங் கரணங்க ணான்குங் கொடுமா புலனைந்தும். (௨௮)

ஒடுக்கிப் பிரம ரந்தரத்தி லுயிரை நிறுத்தி யோகத்தைக்
கொடுக்கு மொற்றை யெழுத்தாலே கூறும் வாச லொன்பதையு
மடுத்த கபாடந் தாட்பூட்டி யபான பிராண னசையறுத்திட்
டெடுக்கு மிறைசீ ரருணோக்கி யிருந்தா னாண்டோ ரெழுநூறும். (௨௯)

## வே று.

அப்படி யிருந்து கண்ட வட்டாங்க யோகந் தன்னிற்
செப்பரு நவயோ கத்திற் சீருறு மிறைக்கும் வஞ்சத்
தப்பறு முயிர்க்கு முள்ள சம்பந்தஞ் சதுரர் காணா
தொப்பிலா முந்நான் க்ரய சமயத்துக் குளனா யோங்கும். (௩0)

கடவுளர் மேன்மை கண்டக் கருத்தறிந் திடுவோ மென்னத்
திடமுட னவர வர்க்காய்ச் செப்புபன் னூலு மோதி
யுடலுயிர் பரத்தைச் சொல்லி யுபாயஞ்சொல் லாமை கண்டு
படவர வணையார் தொண்டர் பார்மிசைப் பதைக்கு நாளில். (௩௧)

துவரிதழ்ப் பவளச் செவ்வாய்த் துடியிடைக் கமலை கேள்வ
னவரவ ரிதயந் தோறு மந்தரி யாமி யாகக்
கவர்வற நின்று வீணே கழிப்பவர்க் கழுவ னென்று
லிவர்கதி விரும்பக் கண்டும் விடுவனோ வெடுப்ப தல்லால். (௩௨)

இரும்புண்ட வுதக மென்ன வியம்பரு முத்தி யெய்த
விரும்பிய மழிசைக் கோமான் மிகப்பதைத் திரங்கல் கண்டு
சுரும்பமர் துளபத் தாரான் றுகளறு மன்பர் தம்பாற்
பெருந்திரு வோடு மெய்திப் பேரருட் கருணை செய்தான். (௩௩)

## வேறு.

கானத் தெறித்தூ நிலாவென்னக் காண்பா ரன்றிக் கழியமெற்
கூனற் சங்கங் கைக்கொண்டார் சோதி லின்பங் கொளவேண்டி
ஞானக் கண்ணைக் கொடுத்தருளி நலனு ரந்தா மத்தணியைத்
தானுந் தோடும் வெளியிட்டுக்கொடுத்தார் மழிசைத் தலைவருக்கு. (௩௪)

## வேறு.

ஆங்கதனுட் பரஞ்சோதி யச்சுதனு ரருள்வடிவைப்
பாங்கிலனு பவ்வளத்திற் பதிந்தநித்தர் முத்தர்களை
யோங்குமருட் கலியாண குணங்கடமை யொழிவின்றித்
தாங்கியவைம் படையெழிலைச் சாத்துமணி கலப்பொலிவை. (௩௫)

இருநிலத்தின் கமர்க்கவிழ்த்த வின்னமுதென் றிசையாமற்
பொருவிறந்த மெய்ந்நலத்தைப் பூண்டுபுல்லி யனுபவிக்குந்
திருமகளே முதலாய பிராட்டிமார் பெருந்திரளை
யருமறையும் புகலரிய வானந்த லீலைகளை. (௩௬)

எண்ணிறந்த பெருவளத்தை யிருவகையாம் விபூதிசெறி
தண்ணளியைத் திருவுந்திக் கமலத்திற் சதுமுகனி
னண்ணியசீ ருருத்திரனை நான்மறையைப் பெரும்பாழை
விண்முதலாம் பூதந்தின் விரிவுகளை விளக்கத்தால். (௩௭)

முத்தொழிலுந் தானாகி மூவுலகு முண்டுலகின்
மத்தமுறு புத்தர்முதற் சமயத்தின் வகைவகுத்த
தொத்தவர்மிக் கவரில்லா வோதவண்ணர் விநோதமெனச்
சித்தமுறத் திருமழிசைப் பிரானாழ்வார் தெரிசித்தார். (௩௮)

செப்பரிய பெரும்பசியான் மிகவாடித் திரிந்துலகி
லுப்பகன்ற நீர்க்கூழுங் கிடையாதே யுழல்பவர்க்குத்
துப்புடைநற் பேரமுதந் தொல்லுலகிற் கிடைத்ததுபோற்
றப்பில்பூதிக் கிரங்கினருந் தலைவரைக்கண் டனுபவித்தார். (௩௯)

## வேறு.

இறந்த காலந் தனின்முத்தி யெய்த விரும்பிச் சாக்கியமு
மறந்த சமணர் தங்கலையு மங்கை பங்க னாகமமுந்
துறந்து கற்றேன் பனிநீராற் பாவை செய்யத் துணிந்தேன்பின்
சிறந்த செங்கட் கரியானைச் சேர்ந்தேன் வினைக டீர்ந்தேனே. (௪0)

ஆத லாலே யினியெனக்கோன் றரிய தில்லை யெனமகிழ்ந்தாங்
கோதி யோதி யனுசந்தித் துள்ளந் தன்னை யொருபோதும்
வேத நாத னகலாத விரகு செய்து விண்முதலாம்
பூத மைந்துந் தத்துவமு முணர்ந்தா ரிருந்து புரைதீர. (௪

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

## வேறு.

ஆறாறு மையைத்து மேலைந்து மகமுலவ
வேறாகி நின்றொளிரு மெய்ஞ்ஞான விளக்கின்மடை
மாறாத பத்தியொடு மழிசையர்கோ னனுபவித்துச்
சேறார்பூங் கமலவயற் றிருவல்லிக் கேணிநண்ணி. (௪௨)

இனிதமருந் திருமாலை யிறைஞ்சியெந்தா யாவருக்குந்
தனிமுதலே யெனவுருகிச் சங்கரனு நான்முகனு
நணியமரர் பெருமானு நான்மறையுங் காண்பரிய
புனிதனுட னங்கிருந்தாண் டெழுநூறும் போக்கினார் (௪௩)

எண்டருஞ்சீ ராண்டாங்கோ ரெழுநூறுஞ் சென்றதற்பி
னண்டமுண்ட பெருமானு மாழ்வாரை நோக்கிநாங்
கண்டுயிலும் வெஃகாவில் வருகவெனக் கட்டுரைப்பப்
புண்டரிகக் கண்ணெந்தாய் போற்றியெனப் புகழ்ந்திறையை. (௪௪)

அடிதொழுது திருவல்லிக் கேணிவிட்டங் கமரர்தொழப்
படிமீதி னடந்தழகார் பங்கயச்செந் தாள்சிவப்பக்
கடியார்பூம் பொழில்புடைசூழ் வெஃகாவைக் கண்டதனுட்
கொடியாடு மணிமாடக் கோபுரத்தைக் குறுகினார். (௪௫)

நிலஞ்செய்த விருந்தவத்தா னேமிமிசை மேதையர்தங்
குலஞ்செய்த புண்ணியத்தாற் கோதறமுன் வளர்ந்தவருஞ்
சலஞ்செய்யா வன்பர்தொழுந் தத்துவனை யுற்றிறைஞ்சி
வலஞ்செய்தாங் கதிலாண்டோ ரெழுநூறு மன்னினார். (௪௬)

அந்நாளிற் றிருமழிசைப் பிரானாழ்வா ரடியிணையிற்
பொன்னார்சீர்க் கவிவல்லான் கணிகண்ண னெனும்புலவோன்
பன்னாளுந் திருமாலைப் பாடியவர் பணிநின்று
தன்னாவி யாக்கைபொரு ளெனவொன்றுந் தனக்கின்றி. (௪௭)

பேறிழவி லிடரின்ப மெனுமிரண்டும் பிணியாதே
நாறுபூந் துழாய்முடியான் றிருத்தொண்டர் நற்புகழ்மே
லேறுசீர்ப் பாமாலை யிசைத்தேத்தி யாழ்வார்பா
லூறுபெருங் காதலரா யொருபொழுதும் பிரியாதே. (௪௮)

அந்நகரி லமர்ந்துறைவா ராங்கவரை யந்நாட்டின்
மன்னவனோர் கவியென்பாற் புகலவென மற்றவர்க்கு
மின்னுமணி முடிகடக மாதியாய் மிகுதனங்கள்
முன்னுறவோர் குன்றென்னச் சொரிந்துகவி மொழிகவென்றான். (௪௯)

கவியென்பான் மொழியென்னக் கழறுமுரை கணிகண்ணன்
செவியுறலு நாராசஞ் சேர்ந்ததெனத் தீதுறீஇ
புவிவேந்தன் முகநோக்கிப் பூபால வுனைநோக்கும்
குவிகையார் புலவருக்கே கூறுகமா னிடர்தம்மை. (௫௦)

## வேறு.

பாடும் புலவ னல்லேனான் பணமும் பொன்னு மீங்கெனக்கின்
றோடுங் கல்லும் போலாகு முலகை யாளு மன்னவரு
நாடு மெனக்கோர் துரும்பாகு நாரா யணன்சீர்க் கமலபதஞ்
சூடும் புலவ னுனக்கிச்சை சொல்லும் புலவ னல்லேனே. (௫௧)

என்று கூறி யெழுந்திருந்தாங் கெதிரே மன்ன னெடுத்திட்ட
குன்று போன்ற விருநிதியை நாக மென்னக் கொதித்தகன்று
நன்றி சேர்தம் பதிநோக்க ஞால மாளு மன்னவனு
மொன்று கேளு மெனக்கூவிக் கணிகண் ணேர்க்கன் றுரைக்கின்றான். (௫௨)

ஈசன் செய்யு முத்தொழிலும் யானே வல்லே னெனையின்று
நீச னாக்கி யெழுந்திருந்தீர் நெடுமால் புலவ ராயிடிலென்
றேசத் திருக்க வொட்டேனா னென்றான் மன்னன் சிலுகற்று
ராசு மிகுந்த வுன்னாட்டி லிருப்பார் புலைய ரெனவகன்று. (௫௩)

## வேறு.

தம்மையாட் கொண்டார் செய்ய தாடொழு தியம்பு மன்ன
னெம்மைநீ பாடன் றாகி லேகுதி பதிவிட் டென்றான்
மும்மையும் பாவி யோறே னென்றவர் மொழிய வாழ்வா
ரும்மைவிட் டிருப்பே னல்லே னேகுவ னுடனே யென்றார். (௫௪)

எனச்சொலிக் கணிகண் ணன்பின் னேகினா ராழ்வா ரேகி
வனப்புடைத் திருவெஃகாவில் வளரொளி யரவின் மன்னும்
புனத்துழா யானை யவ்வூர்ப் புறத்தினின் றிறைஞ்சி யாங்கே
கனத்தசீ ரன்பி னோடும் வலஞ்செய்து கழற லுற்றார். (௫௫)

கணிகணன் போகின் றானிக் கடிநகர் தன்னை விட்டுத்
துணியுடை நீச னேனு மவனுடன் றொடரு கின்றேன்
மணிவணா கிடக்க வேண்டாம் வருதியென் றறைந்தார் மாயன்
பணியணைப் படுக்கை யாய பாயலைச் சுருட்டிக் கொண்டான். (௫௬)

பங்கயச் செல்வி பூமி யென்றருள் பதியு மெய்ம்மை
மங்கைய ரிருவ ரோடும் வளநகர் வீதி யூடே
சங்குசக் கரமுந் தண்டுஞ் சாபமுந் தயங்கு சோதிச்
செங்கைக டோறுந் தாங்கித் திருமறு மார்பர் சென்றார். (௫௭)

கடிகமழ் துளபத் தாரோய் கணிகணன் போனான் பின்னே
கொடியனேன் றானும் போறேன் வருதிநீ யென்று கூறப்
படிமுத லுலக முண்ட பரஞ்சுடர் கட்க்தீ னம்மா
லடியவர் திறத்தை நம்மா லாயவும் படுமோ வம்மா. (௫௮)

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

## வேறு.

அந்தாம நீண்முடியு மாசின் மதிமுகமுஞ்
செந்தா மரைக்கண்ணுஞ் செவ்வாய்ச் சிறுநகையுஞ்
சந்தீர் தடம்புயங்க ளோர்நான்குந் தன்னளிசேர்
மந்தார நீல முகில்போல் வீறுமெழிலும். (௫௯)

செய்ய கமலத் திருவாழ் தடமார்பும்
வைய மனைத்து மொடுக்கு மணிவயிறும்
பொய்யில் சதுமுகனைப் பூத்தவுந்தி மாமடுவும்
வெய்யவொளி வீசி விளங்குதார பங்கயமும். (௬0)

பீதாம் பரமுங் களிறூர் பெருநடையுஞ்
சீதா ரவிந்தத் திருவடிக ளோரிரண்டும்
வேதா முதலாய விண்ணோர் தொழுதேத்த
நாதாந்த நாத னடந்தாழ்வார் பின்போனான். (௬௧)

முன்னே கணிகண்ண ரேகவந்த மூதறிவர்
பின்னே மழிசைப் பிரானார் தொடர்ந்தேகத்
தன்னே ரிலாதா னவர்பின்னே தான்போனா
னென்னே புலவ ரிவைகேட்டுந் தேறிலரே. (௬௨)

செஞ்சொற் கவிக்காய்த் திருமா லொருபுலவன்
பின்சென்றா னென்றவுரை பேசுவது கேட்டிருந்தும்
வஞ்சப் புலவர்கவி மானிடர்க்கே யாக்கியவர்
தஞ்சமென நின்றே முடித்தார் தமையந்தோ. (௬௩)

இட்டார்கண் முற்பிறப்பி லிட்டபுசிப் பெல்லாம்பின்
கட்டார் பிறப்பினிடைக் காட்டுமென வெண்ணாதே
மட்டார் துழாயானை மானிடனுக் கொப்பாக்கிக்
கெட்டார்கள் கேட்டினுமோர் கேடுமுள தோவம்மா. (௬௪)

மாமாய வஞ்ச மயக்கிற் படாதிருந்து
காமாதி யெண்மலையுங் கால்குலைத்து நாரணற்குப்
பாமாலை சேர்க்கவல்ல பாக்கியத்தா தம்பெருமை
நாமா ரறையவம்மா நான்முகற்குங் கூடுமதோ. (௬௫)

## வேறு.

ஓங்கிய கவிஞ ரென்போ ருறுதியை யுணர்ந்தோ ரல்லோர்
மூங்கரிற் கனவு கண்ட முறையென மொழிந்த நீச
ராங்கது கிடக்க முன்போ மண்பிரீ யணித்துக் கூவி
யேங்கிடைக் கமலை கேள்வ னேகிய தெதனா லென்றான். (௬௬)

கன்னனே யிறைவா மன்னன் கணிகணன் றன்னைக் கூவிப்
பண்ணமர் கவிக ளென்பாற் பாடெனப் பலவு மீந்தான்
விண்ணவர் தாதை யாய விண்டுவைப் பாடு நாவான்
மண்மிசை மனுவைப் பாடே னென்றிவர் மறுத்துக் கூற. (சுஎ)

நன்றெனைப் பாடா யேலென் னாட்டினி லிருக்க வொட்டே
னென்றனன் மன்னன் போறே னெனவிவ ரேகி யென்பா
னின்றதை மொழிந்து போந்தார் நின்னைவிட் டகன்ற வன்றே
பொன்றுவ னென்றார் யானும் பொருக்கென விவர்பின் போந்தேன். (சுஅ)

உன்னைவிட் டடிய னேனு மோரிமைப் பளவும் வாழே
னென்னுமிந் நிலையா னுன்னை வருதியென் றிசைத்தே னென்றாங்
கன்னம தூர்தி தாதை யடிதொழு தாழ்வார் கூறப்
பொன்னவிர் நேமி யானு மவருடன் புகல லுற்றான். (சுகூ)

பூதல முடைய மன்னெம் புலவனைப் போகென் றானே
லாதெனை யிகழ்ந்த தன்றோ வவனுடை நாட்டி லாழ்வீ
ரோதுமோ ரிடத்தும் வாழே னென்றுரைத் துடனம் மன்னன்
கோதறு நாட்டி லுள்ள கோயில்க டோறு மன்னி. (எ0)

இருந்தவர் கிடந்தார் நின்றார் யாவரு மறைந்தார் சென்றா
ரருந்தவத் தமரர போற்ற வேகினா ரந்த நாட்டிற்
பொருந்திய கோயி றோறும் பூவைப்பூ வணரைக் காணார்
திருந்துமர்ச் சகர்கண் மன்னன் றன்னொடுஞ் செப்ப லுற்றார். (எக)

மன்னவ நின்னாட் டுள்ள திருப்பதி தோறு மன்னு
மின்னவிர் நேமி யாய விண்டுவைக் காணே மந்தோ
வென்னமா யங்க டாமோ வென்றவர் பகர மன்னன்
றன்னறி வழிந்தான் கேட்டு மந்திரத் தலைவர் சார்ந்தார். (எஉ)

வந்தவர் தம்மை நோக்கி மன்னவ னதனைக் கூற
வெந்தைமுன் னுலக முண்டாற் கென்பிழைத் தனைகொ லென்றார்
சிந்தனை யருந்தி மன்னன் செப்புமத் தேவன் பானா
னந்தமில் குணத்தீ ரொன்றும் பிழைத்திலே னவனைப் பாடும். (எங)

கணிகனன் றன்னை யென்மேற் கவிசொலச் சொன்னே னன்னான்
மணிவணன் றன்னைப் பாடும் வாக்கினாற் பாடே னென்றென்
பணிமறுத் தேகி னானப் பத்தனைக் கூவி யானென்
னணிநக ரிருந்தா லுன்னை யாக்கினை யிடுவே னென்றேன். (எச)

அவ்வுரைக் கஞ்சிப் போன கணிகனி னகன்றான் கொல்லச்
செவ்வியோ னகலக் கண்ட.செங்கண்மால் பின்போ னான்கொ
லெவ்வினைப் பயனால் வந்த திதுவென வறியே னென்றான்
கவ்வையற் றவர்கண் மன்னா கேளெனக் கழற லுற்றார். (எரு)

# திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

## வேறு.

உன்னை யிகழ்ந்தா னுரமுனக்கு மேலொருவன்
றன்னை யுறக்கண்ட பின்னன்றோ தார்வேந்தே
யன்னை பித்ராவேறோ வடியார்க் கரியன்றி
மின்னைப் பிரிந்துமொளி மேதினியிற் றங்கிடுமோ. (௭௬)

காவலவா திண்ணங் கணிகணற்கா யிங்குன்றையுந்
தேவர்கடந் தேவன் றிருமாலும் போய்மறைந்தான்
பாவலவன் றாளிற் பணிந்தா லவன்மீள்வன்
சேவலமோ சொன்மாலை கேசவற்குச் சூட்டுதலே. (௭௭)

## வேறு.

என்றன ரமைச்சர் கேட்டாங் கிருநில முழுது மாளும்
வென்றிவேன் மன்ன னாழ்வார் வீற்றிருந் தருளு மூரிற்
சென்றன னவரும் போனா ரென்பதுந் தெளியக் கேட்டா
னின்றில னவர்கள் போன நெறியணைந் தவனும் போனான். (௭௮)

பேர்னமன் முன்னே போன புலவர்க ளிருவர் தம்மைக்
கானமர் துழாயி னானைக் கண்டிலன் வழியில் வானோ
கோனயன் முனிவோர் சித்தர் கொன்றையந் தாரா னாதி
யேனையர் பலரும் போற்ற விருக்கையம் பதியிற் கண்டான். (௭௯)

கண்டமன் னுருகி நைந்து கணிகணர் கமலத் தாளி
லண்டமுண் டுமிழ்ந்தா ராழ்வா ரம்புவி யோர்கள் வானோ
ரெண்டிசைக் கணங்கண் மிக்க யாவரு மிரங்க வீழ்ந்து
தொண்டனேன் பிழைத்த தெல்லாம் பொறுத்தரு டுணைவா வென்றான். (௮௦)

பொறிபுலன் வசத்தில் வீழ்ந்து புண்ணிய பாவ மென்னு
நெறியுறு வலையிற் பட்டு நெடும்பக லாவி வாடுஞ்
சிறியனேன் பிழைத்த தெல்லாஞ் செங்கணா யகனைப் பாடு
மறிவனே பொறுத்தி யென்றாங் கரசனின் றழுங்கக் கண்டு. (௮௧)

துணிவுடைப் புலவன் வேந்தன் றன்புற விரங்கித் தான்போ
யணிபொழின் மழிசைக் கோமா னடிதொழ வவருஞ் சென்று
மணிவணர் தாளில் வீழ்ந்து மன்னவன் பணிய வெந்தாய்
கணிகணன் மீண்டான் போய்நீ கண்டுயில் கொள்வா யென்றார். (௮௨)

என்றிவை யாழ்வார் கூற வேழுல குண்டா ராழ்வீர்
நன்றுநீர் முன்னே போநீ ருமதன் பின்னே யென்று
ரொன்றிய கருணை யெந்தா யோங்குசீர்க் கணிகண் ணன்முன்
சென்றிடிற் பின்னு னென்றான் றிருமழி சைக்கு நாதன். (௮௩)

ஆங்கது கேட்ட வேந்தன் கணிகண னருகு சார்ந்து
பூங்கழ றொழுதின் றெந்தாய் போதுநீ முன்னே யென்னத்
தாங்குபஃ றவத்தி னானுந் தடையற முன்னே போனா
னேங்கிய மன்னன் வாழ்ந்தே னினியென விறைஞ்சி யேத்த. (௮௪)

கணிகணர் பின்னே யாழ்வார் காசினி யிறைஞ்சச் சென்றார்
மணிவண ராழ்வார் பின்னே வானவர் வணங்கப் போனா
ரணிபொழிற் றிருவெஃகாவி லனைவரு மணைந்தார் மாயன்
பணியணைச் சுருளை நீக்கிப் படுத்ததிற் படுத்துக் கொண்டான். (௮௫)

கருமுகில் வண்ணனை மீண்டு கண்டுயில் கொள்ள வன்னான்
றிருவடி முடிமேற் சூட்டித் திங்கள்சேர் சடையான் போனா
னருமறை யயனும் போனா னமரர்கள் கோனும் போனான்
பொருவருஞ் சித்தா தேவர் பொருந்துதம் மிருக்கை சேர்ந்தார். (௮௬)

மன்னவன் கணிக னன்சீர் மலரடி யிறைஞ்சி யாழ்வார்
பொன்னடி வணங்கி மாயன் பூங்கழ றொழுது போனான்
பின்னதின் மழிசைக் கோமான் பேரருட் கடலின் மூழ்கிப்
பன்னெடும் பகலும் வைகி யிருந்தபின் பழனஞ் சூழ்ந்த. (௮௭)

குடந்தையம் பதியை மன்னிக் கோவலர் குட்டன் மேலே
தொடர்ந்தெழு காதலோடுந் துன்னியா டரவப் பள்ளிக்
கிடந்தவம் முகிலை வாழ்த்திக் கிளரொளி யோடு மொன்று
யிடம்பெறு மாண்டு மாங்கோ ரீரெழு நூறு வாழ்ந்தார். (௮௮)

வேறு.

மாசின் மழிசையர்கோ னிவ்வண்ணம் வாழ்ந்திடுநாட்
பேச வரிய பெரும்புலி யூரடிக
ளாசின் மகமொன் றியற்றினா னாழ்வாரு
மீசன் கழறொழுதாங் கெய்தினா ரப்பதியில். (௮௯)

வேறு.

நலஞ்செய்யும் யாகங் காண நண்ணினா ரவ்வூர் மாலை
வலஞ்செய்தார் வலஞ்செய் போதில் வளரொளி மாயன் மன்னும்
பொலஞ்செயும் விமான நீண்ட கோபுரம் பொன்னின் கம்ப
நிலஞ்செய்மா நகரஞ் சூழ்ந்த நெடுமதிள் பொழில்க ளாறும். (௯௦)

சீருறு மழிசைக் கோமான் செறிவனை திசைக டோறு
நேர்தர வலம தாகத் திரிவதை நின்று கண்ட
பாருளோ ரிவரா லிந்தப் படியென வுணரார் தம்மி
லார்வம்வந் திரங்கி யீதோ ரதிசய மென்ன வெண்ணி. (௯௧)

பொருந்தின ரந்த நாளிற் பெரும்புலி யூரிற் பார்ப்பான்
வரும்புன லாடி மீளும் வழியிலோர் மடந்தை யெய்தி
யிருந்துகா ணீட்டக் கண்டோர் யாகம்வல் லவாகாண் வர
கருங்குழல் வல்லி காலை வாங்கெனக் கழறுங் காலை. (கூஉ)

நக்கிரு கரங்க டட்டி நன்னுத னவிலுங் கேட்டேன்
மக்களிற் றேவ னாய மழிசையாழ் வாரைப் போற்றி
யக்கிர பூசை நல்க வறிவிலா யேகா யென்றாள்
வெட்கினான் யாக சாலை மேவினா னந்த ணாளன். (கூங)

செய்யிழை யுரைத்த நீதித் திருமழி சைக்கு வாழ்வா
மையனைத் தலத்தி லுள்ளா னெனப்பதைத் தந்த ணாள
னைவுறக் கனவி லிவ்வூர் தன்னிலந் நம்பி யென்னப்
பையர வணையா னாங்கோர் பனவனாய்ப் பகர்ந்து போனான். (கூச)

ஆதவ னெழுந்த போதி லந்தண னவ்வூர் தன்னி
லோதுபல் குலத்தில் யாரா யெய்தினான் கொல்லோ வொப்பின்
மாதவ னென்ன வெண்ணி மனிதரா னாரை யெல்லாம்
பேதம தறத்தா னோக்கித் திரிந்தனன் பிரம னொத்தான். (கூரு)

அப்படித் திரியு நாளி லருளுறு மழிசைக் கோமான்
செப்பிய பிரப்பங் கூடை சீர்பெற முடைந்து விற்று
மொப்பிலா விறையைப் போற்றி யொடுங்கியாங் கொருத்த னாகித்
தப்பறத் திரித னோக்கி யிவர்கொலத் தலைவ ரென்ன. (கூசு)

அருமக மியற்று நீதி யந்தணன் கண்டப் போதே
கருமுகிற் கினிய தொண்ட ரிவரெனக் கருத்து ளெண்ணித்
திருமழி சைக்கு நாதர் சேவடி யிறைஞ்சி யாங்கே
யிருவரு மாக யாக சாலையை யெய்தி னார்கள். (கூஎ)

எய்திய பொழுதே சம்பா வனையிவர்க் கீயக் கண்ட
வைதிக ரிகழ்ந்தார் தன்ம புத்திரர் மகத்தின் முன்னே
செய்கட னெற்ற மாலைச் சிசுபால னிகழ்ந்தாற் போலம்
மெய்யரு மினிநா நம்மை வெளியிட வேண்டு மென்ன. (கூஅ)

அலம்புபாற் கடலுண் மன்னு மராவணை யமலா வாழி
வலந்திக ழாழி யானே வள்ளலே வாழி பார்ப்பார்
குலம்பொலிலே னென்ன வென்னை மகத்தினிற் கூட்டோ மென்று
றிலங்கைசெற் றவனே நீயுன் னரவணை யோடு மெய்தி. (கூகூ)

எய்தியீண் டிருந்து தீமை யியம்பியுன் னருளைக் காத
வைதிக ரிகழ வென்னை வணங்கியம் மறையோ னன்பிற்
செய்மகங் கூட்டும் வண்ணந் திருவொடும் வருதி யென்றே
கைதலை குவித்தா ராழ்வார் கார்முகில் வண்ணர் சென்றார். (௧௦௦)

பங்கயத் தயனுஞ் சென்றான் பாகசா தனனுஞ் சென்றான்
கங்கைசேர் சடையான் சென்றான் கருதரு முனிவோர் சென்றார்
பொங்குமே முலகி லுள்ள புலவரும் பொருந்தி னார்கள்
சங்கையுந் திருந்த பார்ப்பா மழிசைமன் சரணந் தாழ்ந்தார். (௧௦௧)

பெரும்புலி யூரின் மன்னும் பேரரு ளடிக ளன்றே
திரும்பலின் மூர்த்தி நல்கச் செய்மக முடித்த போதில்
வருங்கரு முகிலும் வானோர் வேந்தனு மழுவ லானு
மருந்தவத் தயனும் புக்கோ ரனைவரும் போயி னார்கள். (௧௦௨)

கரமரு மலர்கள் சிந்திக் களிப்பொடந் தணர்கள் கண்ணன்
பரமென வடங்கி வாழும் பத்தரைப் பரிவி னோடும்
பிரமர தத்தி லேற்றிப் பிரானிவ னென்னத் தாங்கி
வரமருள் பதியை முக்கால் வலஞ்செய்து வாழ்த்தி னார்கள். (௧௦௩)

சிறுமைகண் டிகழ றானுஞ் சீரிய நெறியோர் தம்பாற்
றெறுமுறு பெருமை கண்டாற் சென்றடி வணங்கு மாறு
முறுநெறி யுலகி லென்று முள்ளதென் றுணர்ந்தோ மந்தோ
பெறுபயன் மதியா புல்லோர் பிழைபொறுத் தருளு மாறும். (௧௦௪)

ஆயதோ ரிலைபா லாழ்வா ரந்தணர் தம்மை யீன்ற
தாயினு மிகுந்தன் போடுந் தத்துவ முபதே சித்தத்
தூயவர் துதிசெய் தேத்தச் சுருதிக டொடர்ந்து போற்ற
மாயமால் குடந்தை தன்னின் மன்னியா டரவின் மன்னும். (௧௦௫)

வேறு.

காரார் முகிலிற் கமல மலர்ந்தொத்தச்
சீரார் திருவுருவிற் கலைகால் கரஞ்சிவந்த
வாரா வமுதை யனுபவித்த மெய்ந்நலத்தைப்
பாரோ ரறியும் படிபாட வெண்ணினார். (௧௦௬)

வேறு.

தேன்முகர் தளிகள் பாடுந் துருத்துழாய்க் கண்ணி யார்க்கு
வான்முக மதிகண் டஞ்சும் வளரொளி வதனத் தார்க்குக்
கூன்முகச் சங்க மாழி யேந்துகைக் கொண்ட லார்க்கு
நான்முகன் றிருவந் தாதி நலந்திகழ் நூறு மோதி. (௧௦௭)

சிறப்பினிற் சிறப்பு மிக்க திருச்சந்த விருத்த னூறே
டொப்புகு மிருப தென்றே யுரைதரு தொகையு மாங்கே
யறப்பொரு ளரிய வாரா வமுதடி பனவ ரேத்திப்
பிறப்பறும் வண்ண மோதிப் பேரருள் விரசை மூழ்கி. (௧0௮)

அன்றதன் றீர மன்னு மமானவ னுரை யேத்திச்
சென்றுவை குண்ட மெய்திச் செங்கண யூகன்முன் னாகி
நின்றவன் சாம வேத கீதங்க ணிகழ்த்தி மாலோ
டொன்றியம் மழிசைச் சோமா னொளிக்கொண்ட சோதி யானான். (௧0௯).

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபந்தம்.

மண்டல மெண்மூழி சைப்பதி மன்சீர்
கொண்டபெ ரும்புகழ் கூறியிம் மண்ணோ
டண்டரி றைஞ்சவ ரங்கம மர்ந்த
தொண்டர டிப்பொடி யைத்துதி செய்வாம். (௧)

வேறு.

எண்ணூர் திங்க ளீரா றி லீச னுருவா மார்கழியி
னண்ணுங் கேட்டை தனிற்சிறந்த நாற்பாற் குலத்தின் மேற்பாலாய்
மண்ணும் விண்ணுந் தொழுதேத்த மண்டங் குடியா மாநகரி
லண்ண றொண்ட ரடிப்பொடியார் பிறந்தா ரறந்தான் சிறந்தோங்க. (௨)

தூய ஞானச் சுடரொளியாய்ச் சுருதி முடிவில் வீற்றிருக்கு
மாய னருளாற் பரஞ்சோதி வடிவை மறைத்து மண்மிசையிற்
காயம் புனைத லாலந்தோ காமா தியர்சென் றுறத்தீண்டி
யாயு மறிவை யிருட்டறையி லடைத்தா ரவரு மடைபட்டார். (௩)

மண்ணில் வஞ்ச வலைப்பட்டு வருந்து முயிர்க ளிடர்நீக்க
விண்ணின் றிழிந்த முதல்வரையும் விரைந்து மாயை தீண்டுதலா
லெண்ணுங் காலிங் புவிமீதி லியமன் கயிற்று மனைவயிற்று
நண்ணி யுழலு மானிடர்சொன் ஞானந் தனக்கார் கடவம்மா. (௪)

வேறு.

சீரிய ஞானச் சோதித் திருவுரு வுடையா ரேனும்
பார்மிசை யுற்றான் மாயை படுக்குமென் றஞ்சி யன்றோ
சாரியார் மகனார் கண்க டிறந்திலர் கமல மன்ன
வேரியல் வாயா லொன்று மிசைத்திடா திருந்தா ரந்தோ. (௫)

அறந்தலை நின்ற நீதி யச்சுத னன்றி மண்ணிற்
பிறந்தவ ரயர்ந்தார் தம்மை யெனமறை பேசு கின்ற
திறந்தனை மறந்து கெட்டேன் மாயையின் சிணுக்கிற் பட்டுக்
சுறங்கெனச் சுழல்வோர் ஞானங் காயமோ டடங்கிற் றன்றே. (௬)

வேறு.

முன்னை வினையின் றொடர்பாலே மோட்டுப் புலனா லிருநீர்தோய்ந்
தன்னை யுதரக் குழிவீழ்ந்தங் கவனுழ் வருந்தப் புவியுற்ற
பின்னை விருப்பு வெறுப்புன்றிப் பிறிதொன் றறியா தவர்ஞானந்
தன்னை யடியே னெடுத்துரைக்கத் தகுமோ தாமோ தாராதகுமோ. (௭)

வேறு.

படுக்கையின் மலசலம் பரிய வைகுவார்
கடுப்பிணி னுலகெலாங் காண்பூனென்பபோற்
றடுக்கரு மாயையின் சர்ட்டி லாடுவோ
னொடுக்கமின் ஞானம துரைத்து மாய்தலே. (௮)

வேறு.

பொறிவழிப் பொருந்தி மேயும் புலன்வழிப் போக்கு மாற்றார்
செறிபெருமனத்தி செய்யுந் தீமைக ளடக்கார் காம
வெறியுறு வெகுளி மாயை யாணவம் விலங்க வாழா
ரறிவெனக் குருவ மென்றே யழிபவர்க் கறைவ தென்மனமே. (கூ)

அத்திறங் கிடக்க மண்டங் குடியில்வந் தாசி லாத
மெய்த்தவ முடையார் தம்பால் விண்டுவின் பணியாற் போந்த
வுத்தம குணத்தார் காம னுருவினிற் சிறப்போ டேரங்குஞ்
சித்திர வடிவிற் றோன்றித் திருவவ தரித்த பின்னர். (க0).

வேறு.

அன்ன மென்னடை யந்தணர் மங்கையர்
பொன்னி னன்மணிக் காப்புறப் பூட்டினர்
செங்கெ லின்னடி சில்லொடுந் தேன்கனி
மன்னு மின்னமு தும்மகிழ்ந் தூட்டினார். (கக)

எண்ட யங்கு பதங்க ளிரண்டினும்
தண்டை தண்டு சதங்கை யணிந்தனர்
கெண்டை யங்கண் மடந்தையர் கேடிலா
மண்ட யங்க வயங்கு மருங்கினில். (கஉ)

இரைத்த கிண்கிணி பன்மணி யேயுற
நிரைத்த ணிந்தனர் நீண்டக ரங்களி
னுரைத்த பொன்வளை யோங்கவ ணிந்தனர்
விரைக்கொள் பூங்குழன் மெல்லிய லார்களே. (கங)

செய்ய வாயமு தின்றிரை தத்திடு
மையன் மார்பினி லாரம ணிந்தனா
துய்ய நற்களத் தைம்படை சூட்டினர்
மையி லங்கொளி வாள்விழி மாதரே. (கச)

கோதி லாத குழைகளிற் றோடணிந்
தோது கண்களின் மையுமிட் டொப்பிலா
மாத ரார்களம் மைந்தர்த நெற்றியின்
மீது பட்டமுஞ் சுட்டியும் வீக்கினா. (கரு)

வேறு.

இப்படி பலபல விலங்கு பொற்கலன்
றப்பற வணிந்துறத் தவழ்ந்த பின்னவன்
முற்பகற் செய்தவ முதல்வர் போற்றிட
வொப்பிலார் தெருவிற்றே ருருட்டி வாழுநாள். (கசா)

வேறு.

விதிவழிச் சவுளஞ் செய்து வேதியர் குழாத்துண் மிக்க
முதியவர் சடங்கிற் றோன்று முப்புரி நூலுஞ் சாத்தித்
துதிசெய்வே தங்க ளோதுந் துகளற வோதி யின்பக்
கதிவழிச் செல்வா ராங்கே களிப்புடன் வளரு நாளில். (கஎ)

அந்தணர் பலருங் கூடி யாசறு குணத்தி னோர்க்கோர்
செந்துவர் வாயி னாளைத் திருமணம் புணர்த்த வெண்ணி
வந்தமெய் மரபி லாங்கோர் மறையவன் மகளைப் பேசும்
பந்தணை விரலார் மைந்தர் பலருமப் பதியைச் சார்ந்தார். (கஅ)

காமனுக் கழகு நல்குங் கதிர்மணி வடிவி னோர்க்காந்
தேமலர்க் குழலைப் பெற்ற தந்தைதாய் தமக்குச் செப்ப
மாமனை யழைத்தார் பிள்ளை மரபினை வழங்கக் கேட்டா
ராமதற் கிசைந்தோ மென்றுங் கணைந்தவர்க் கடைக்கா யீந்தார். (க௯)

ஆங்கவ ரிசைந்த மாற்ற மன்பரைப் பயந்து செல்வத்
தோங்கிய தந்தை தாயர்க் குரைப்பவப் பொழுதே யன்னார்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தனம்பல நல்க வந்தப்
பூங்குழ றன்னை வேட்டார் பூவைப்பூ வண்ணர் தொண்டர். (உ0)

## வேறு.

சீருறு திருமணஞ் செய்த பின்பல
வாருறு தனத்தியர் வசந்த ராயவர்
காருறு குழல்களிற் கமலம் போன்றொளி
ரேருறு முகங்களி லிலங்கச் சேர்ந்தரோ. (உக)

சிறுபிறை நுதலினிற் சிலையி ரண்டென
வுறுபுரு வங்களி லொளிகொள் வேலெனக்
கறுவுறு விழிகளிற் கவினும் பொற்பணி
மறுவறு குழைகளின் மாசி லாததோர். (உஉ)

திலமலர் குமிழெனச் செப்பு நாசியி
லிலவவாய் முறுவலி லிலங்கு பன்மணி
நலமுறு களத்தினி னவைவி றோள்களின்
மலமறு வீணையின் மதுர வாக்கினில். (உங)

செப்பெனக் கிரியெனத் திரண்டு விம்மிய
வொப்பறு தனங்களி லுதர வாலினிற்
றுப்புறு தளிரெனத் துலங்கு மேனியிற்
றப்பறு துடியினைத் தள்ளு மொள்ளிய. (உச)

இடையினி லல்குலி லிலங்க ரம்பையந்
துடைகளி னூபுரந் துலங்கு தாள்களில்
விடைமுதிர் பெடைகளில் விளங்கு சூலன
நடைகளின் மனம்பதித் தாவி நைந்தனர். (உரு)

## வேறு.

அத்திறத் தமைந்தார் திருவுருக் கண்ட வரிவைய ரலமர லவர்கள்
சித்திர வுருக்கண் டிவருமப் படியே இலட்சு லனுபவித் தொழுகப்
பத்தர்கட் கினிய பரஞ்சுட ரரங்கன் பார்மிசைப் பிறந்தது பொருட்டா
லித்திற மெமதா மின்பவீட் டிருந்தா ரிடர்ப்படத் தகாதென விரங்கி. (உசு)

வஞ்சமா மடவா ரவயவத் தமர்ந்த மனத்தினைத் திரித்துத்தன் மாசில்
பொன்செய்நீண் முடியிற் கமலவா னனத்திற் பொருவறு மிருகுழைப் பொலிவிற்
கஞ்சமா மலர்க்கண் ணிணைகளிற் புருவக் கால்வளை யிருசிலைக் கறுப்பி
லெஞ்சலி லொளிசேர் நாசியிற் பதும மலர்ந்தன விலங்குசெவ் வாயில் (உஎ)

அண்டமுண் டுமிழ்ந்த வழகிய மிடற்றி லஞ்சன நிறத்தினி லழகார்
வண்டடங் கிரியொத் தோங்கிரு புயத்தில் வளரொளி திகழ்திரு மார்பில்
விண்டலத் திலங்குஞ் சுடரிரண் டென்ன விளங்குகைச் சங்குசக் கரத்தி
லெண்டரு முலகம் யாவையு மடக்கி யெழிறிகழ் திருவுத ரத்தில். (உஅ)

உந்திமா மடுவி லுதரபந் தனத்தி லொடுங்கெழின் மருங்கினி லொளிகொ
ளந்திமா முகிலொத் திலங்கிய செம்பொ னுடையி லழகுறு குறங்கின்
முந்திய புவிவா னளந்திட வளர்ந்த முளரியந் தாள்களின் முறையே
சிந்தைபாய்ந் தாழ்வா ருளமகிழ்ந் துருகித் திருக்கண்வைத் தவர்முனே சென்றான்.

சென்றவன் றொண்ட ரடிப்பொடி யெதிரே தீதறு திருமக ளோடு
நின்றன னந்தத் திருவுருக் கண்ட நிகரிலா வன்பர்நீ ணிலத்தின்
மன்றல்சேர் குழலா ருருவையு மாயன் வடிவையு மதித்துற நோக்கி
யின்றிவ ரெழிலுக் கரிவைய ருருவ மிசைந்திடா தென்றதை யிகழ்ந்தார். (௩0)

இன்னமு திருக்க நஞ்சினை யருந்த லினித்தகா தெனமுன மறைந்த
வன்னமென் னடையா ரவயவத் தமைத்த மனத்தினை வாங்கியச் சுதனா
மின்னவிர் மவுலி யாதியா யலர்ந்த மென்மலாத் திருவடி வரையி
னன்னலத் துறப்பிற் பதித்தனர் திரும்பா திரும்புநீட நாரம தெனவே. (௩௧)

ஆதியம் பரம பதத்தினிற் றமுன் பிருந்தது மச்சுதன் பணியா
லோதிய வுலகிற் பிறந்ததும் வினைவந் துற்றெடுத் தொடுக்கிய பரிசும்
வேதியர் வணங்குந் திருவரங் கத்தான் விரைந்தவர் தவ்வினை கெடுத்த
நீதியு மறிந்தங் கிறைவனை வணங்கி நின்றுநின் றிவையிவை நிரப்பும். (௩௨)

அண்டர்கோன் பிரம னுருத்திரன் வணங்க வரங்கமா நகரமர்ந் தரவிற்
கண்டுயில் கொள்ளுங் கருணைமா முகிலே கண்ணனே கள்வனேன் பொருட்டாற்
புண்டரீ கச்சீர்த் திருவடி வருந்தப் பூமிசை நடந்தனை புலையேன்
கண்டிலேன் கைம்மா றிதற்கெனப் பணிந்தான் கலந்தமா மாயையைக் கடந்தான்.

## வேறு.

மெய்யன்ப ரிவைகூறி விரைமலர்த்தா டொழுதேத்தப்
பொய்யன்புக் கெட்டாத புனலரங்கத் தரவணைமேல்
வையம்புக் குண்டுறங்கு மணிவண்ணச் செழுஞ்சோதி
யையன்செங் கனிவாயா லகங்குழைந்து கட்டுரைப்பான். (௩௪)

## வேறு.

அப்பாவென் சூழ்ச்சியிடை யங்குரித்த மாமாயை
எப்பா ரெவரெனினு மேழே முலகினிடைக்
குப்பாயத் தாக்கையுறக் கொண்டார் தமைத்தீண்ட
றப்பா தவைதடுப்பச் சங்கரற்குங் கூடாதால். (௩௫)

புண்டரிகப் போதயனும் பொன்னுலகை யாள்பவனு
மண்டர்களு முக்கணனு மாசின் முனிவர்களு
மெண்டருஞ்சீர்ப் பூதங்க ளைந்து மிருசுடருங்
கண்டபொருண் முற்றுமதின் கைவசமாய் வைகிடுமால். (௩௬)

## வேறு.

எலையறு பாவை தனையொரு தாம்பி லிணைத்தொளித் தாட்டுவான் போல
நிலையிலே ழேழா முலகங்க டமையோர் நெடுங்கொடும் பாசத்திற் பிணைத்தாங்
கலைவுறு தொழிலிற் படுத்தியோ வீரகா லாட்டுமென் மாயைமற் றதற்குத்
தலைவனுய்ச் சொன்ன விரண்டினும் படாதே தங்குவ தெனக்கலாற் றகுமோ. (௩௭)

ஓங்குமம் மாயை வசத்தினிற் சரிக்கு முலகிடை நீயும்வந் துறலாற்
பூங்குழன் மடவா ரவயவத் துனையும் பூட்டிநின் றூட்டுதல் கண்டே
னாங்கது தடுப்பான் றிருவொடும் புகுந்தே னணியரங் கத்தினி லனந்தன்
றாங்கவெப் பொழுதுந் துயிலமர்ந் துறைவோ மெனவுரைத் தவர்தலை தடவி. (௩௮)

ஏகினு னீயும் வருதியென் றியம்பி யிமையவ ரடிதொழ விலங்கும்
பூகமார் பொழில்சூழ் திருவரங் கத்திற் பொன்வரை மீதினிற் பொருந்து
மேகமா மிதுவென் றியாவரும் புகழ விளங்கொளி யனந்தன்மேற் படுத்தான்
மாகமான் மண்டங் குடியுறை பவரும் வந்தனர் திருவரங் கத்தில். (௩௯)

அண்டர்கள் புகழு மணியரங் கத்தி லணைந்தவ ரத்திரு நகர்வாழ்
தொண்டரை யிறைஞ்சி யவரரு ளோடுந் துலங்குபல் வீதிகள் கடந்து
விண்டல மளப்ப வுயர்ந்தமா மதிள்கள் விளங்கொளி தயங்குகோ புரங்கள்
கண்டவை யிறைஞ்சி யனந்தன்மேற் றுயிலுங் கருணைமா முகிலினைக் கண்டார்.

நோக்கிய விழியான் மனத்தினு லவைசேர் நுண்ணுணர் வாகிய வுயிரால்
வாக்கினு லன்பா லன்புறு வழியான் மாசறு வடிவொடு மமைந்த
வாக்கையான் மண்டங் குடியுறை பவரு மச்சுத னுயவின் னமுதைத்
தேக்கினர் தேக்கி யிறையொடு தமையுஞ் சிறிதுபோ தயர்ந்துபின் றெளிந்தார். (௪௧)

நின்றனர் விழிக ளிரண்டினு மொழுகு நெடும்புன லருவிக ளிழியுங்
குன்றெனக் குன்றாப் பச்சைமா மலைபோற் கோவிந்தன் கிடக்கையைக் குறித்தாங்
கொன்றிய வன்பிற் றந்தைதாய் தமக்கன் றுரைத்தபேர் மாற்றியப் பொழுதே
யன்றிறை பணிசெய் தடிதொழுந் தொண்ட ரடிப்பொடி யெனும்பெய ரமைத்து.

வஞ்சமா மடவார் கலவியிற் படிந்து வருந்திடுந் தமையெடுத் தாண்டு
தஞ்சமா யாவி யுறக்கலந் திருந்த தலைவனுக் குறுபணி செய்ய
நெஞ்சினி னினைந்தார் நினைந்தவப் பொழுதே நேமியான் செய்யவாய் திறந்து
கஞ்சமா மலர்க்கண் விழித்தவர் செய்யுங் கயிங்கரி யங்கள்கற் பிப்பான். (௪௩)

## வேறு.

அந்தமில் குணத்தி னுனே யவனியி லியாவ ரேனுந்
தந்தமக் கியன்ற தென்பாற் றரப்பணி விடைகள் செய்யச்
சிந்தையி னினைந்தா லன்றே செய்தன ரென்று கொள்வேம்
பந்தமு மறுப்பே மேலைப் பரமமாம் வீடு மீவேம். (௪௪)

திலத்தினைக் கோடி கூறு செய்ததி லொருகூ றென்பா
னலத்துறு நேயத் தாலே நல்குயா சிந்தித் தானேற்
புலப்படா நிலையாய் கேட்டி பொன்வரை. துணினு மிந்த
நிலத்தினும் விரிவோ டோங்கு நீணிதி யெனவுட் கொள்வேம். (சரு)

சீருறு மன்ப கேட்டி சகத்திலென் பணிமேற் செல்வா
னோரடி யெடுத்திட் டான்பின் னெழுந்தனன் போக்கென் றூனும்
பாரிடை விண்ணின் முன்னு ளவன்செய்பா தகங்க ளங்கி
சேருற் பஞ்சிற் றீயு நீணர கவர்கட் கில்லை. (சசு)

மலையெனப் பெரியார் செய்யு மாப்பொரு ளுவந்தும் யாக்கை
நிலையினிற் சிறியார் செய்யு நேர்மையை யிகழ்ந்தும் வாழ்த
விலையெமக் கிரண்டு மொக்கு மென்பதை யன்ப யூக
மலையடைத் துகந்த நாளி லணிலுயர்ந் ததனிற் காணாய். (சஎ)

அத்திறங் கிடப்ப வஞ்சத் தழுந்துமின் னுயிர்க ளென்னை
யெத்திறத் தானு முன்னி யெய்துமா றியற்றி யன்போ
டித்திறத் தாலிம் மண்ணோ ரிறைஞ்சவீற் றிருந்தேன் யானென்
மெய்த்திற முணர்ந்து நோக்கில் விரிஞ்சனால் விதிக்கப் பட்ட. (சஅ)

அண்டங்க ளனைத்து மந்த விரிஞ்சனு மரனுங் கோத்த
வெண்டங்கு பூத மைந்து மென்னிலோ ரிடத்தி னுள்ளே
விண்டங்கோ ரணுவை மான விளங்கிடு மதனா லென்னைக்
கண்டெங்கே யாவ ரன்ப கயிங்கரி யங்கள் செய்வார். (சகூ)

வேறு.

உற்றநெறி யிருவகையு முரைத்தோமிவ் வுலகிலெமைப்
பற்றினர்செய் கயிங்கரியம் பலவுமுவப் போமெனினுஞ்
சொற்றமிழென் பாற்பாடுந் துணிவுடையோர் மனக்கோயின்
மற்றெமக்குப் பரமபதம் வடதடம்பாற் கடன்மைந்தா. (ருo)

அன்பதிரு மஞ்சனமு மர்ச்சனையும் பாட்டேயாம்
பொன்பொருந்து சாந்துகலன் பூம்பட்டும் பாட்டேயா
மின்பமுற யாமருந்து மின்னமுதும் பாட்டேயாந்
துன்பகற்று மணிவிளக்குந் தூபமும்பாட் டெனத்துணிவாய். (ருக)

வேறு.

ஆங்கதற் கூடா தாகி லன்பபூ மாலை கட்டி
யோங்குநம் வசத்தி னல்கி யொன்றினு மிச்சி யாதே
தாங்கிய மகிழ்ச்சி யோடெந் தமர்களுக் கெளிதா யன்னார்
பூங்கழ றொழுவார் தாமும் பொருந்துவ ரென்னை யன்பா. (ருஉ)

வேறு.

ஆத லாலைய பாமாலை பூமாலை யிவையில்
காத லோடுரைத் திட்டுறக் கட்டலுங் கடன்முன்
வேதி வாணர்வாழ் புதுவைமன் விட்டுணு சித்த
னோது நீதியன் செய்தது மிதுபிறர்க் குறுமோ. (ருங)

என்று சீரரங் கத்துறை யெம்பிரா னியம்ப
நின்று கேட்டவ னிறையரு ளிருந்ததை நினைந்து
சென்று தாழ்ந்தனன் றிருவடி யருளெனத் திருமா
லன்று சென்னியிற் பதித்தெனைப் பாடென வறைந்தான். (௫௪)

வேறு.

மூதறி வுடைய வன்பர் முதல்வரை வணங்கி யெந்தாய்
வேதனு மரனும் வந்தார் விண்ணவர் முனிவோர் வந்தா
ராதவன் குணபால் வந்தா னவர்க்கருள் புரிவா யென்னத்
தீதகன் றுலகு முய்யத் திருப்பள்ளி யெழுச்சி செய்தார். (௫௫)

வேறு.

மரமோ ரேழுந் துளைத்துவந்த வடிவங் கிலதே லடியேற்குப்
பரம பதத்தி லென்கரும மென்னப் படிசே ரனுமனைப்போ
லரவத் தணையாய் நீயல்லா லமராக் கரசா யவராலும்
பரவப் படுமச் சுவைபெறினும் வேண்டே னென்னும் பாவகத்தால். (௫௬)

கடிசேர் துளவத் திருத்தாரான் கழல்பெற் றுடையே னமன்றமர்கண்
முடிமேன் மிதிப்பேன் பாகவதர் முளரி யென்னச் சிறந்திலங்கு
மடிமே லென்றன் முடியிடுவே னடியேன் றொண்டரடிப்பொடியென்
றொடியா வின்பத் தலைநின்று மோங்கு மரங்க னுருவன்றி. (௫௭)

அறியேன் வேறோ ருருவினையு மகலேன் வேறோர் திருப்பதியிற்
செறியே னிவனே யங்கங்கே யிருந்தா னெனினுந் தீவினையேன்
பொறிசோ புலனா லுற்றிறைஞ்சேன் போதத் தாலும் போற்றுகிலேன்
குறிசேர் கற்பி லருந்ததியுங் கூசக் குறித்தே னெனக்கொண்டு. (௫௮)

வேறு.

கருமாலை கடந்திவ் வையங் காகுத்த வேட மாகி
வருமாலை மூவர் காணா மாமாலை யளவி லின்பந்
தருமாலை யடையும் வண்ணஞ் சதுமறைச் சொல்லிற் கோத்த
திருமாலை நாற்பத் தைந்துஞ் செப்பினா ரொப்பி லாதார். (௫௯)

ஆகத் தொண்ட ரடிப்பொடியார் பாட லைம்பத் தைந்துரைத்து
மாக மேத்தும் புண்டரிகர் மாலா காரர் தமைப்போல
மேக வண்ண ரெடுத்துரைத்த விதியா னந்த வனங்கள்பல
பூக வேலி மருதநிலத் தாக்கிப் புவன முண்டவர்க்கு. (௬0)

கோலத் துளவு மல்லிகையுங் குளிர்சண் பகமு மிருவேலி
மூலத் தொடருங் கழுநீரு முதலாய் மூக்குப் புதைத்தெடுத்துச்
சால வெழிலார் பூமாலை தாமே சமைத்துக் கடற்பிறந்த
வால மிடற்றன் றுயர்கடிந்த வரங்கத் தம்மான் றனக்களித்து. (௬௧)

### வேறு.

வைகிடு நாளி லோர்நாண் மாசறு சவுனர் சொல்ல
மெய்யுறு சதானி மேலாம் விண்டுவி னுமங் கேட்டு
நைவுசெய், திருவோ ரொன்றாய் நண்ணிய வாறு போலப்
பையர வணையா ராழ்வார் பங்கய வதன நோக்கி. (௬௨)

மாசிலா நிலையீ ராழ்வீர் வம்மினீர் நம்பாற் சொன்ன
வாசறு தமிழ்மா ரைந்து மைம்பது மடைவே யோதிப்
பேசுமப் பயனைக் கேட்க விரும்பினோம் பெருக வென்று
னீசனவ் வுரைகேட் டாழ்வா ரிணையடி யிறைஞ்சி நின்று. (௬௩)

திருமகள் விரும்பு மார்ப சிறியனே னிழைத்த புன்சொற்
றரும்பயன் விரும்பிக் கேட்பான் றடையறு மாசை யுண்டே
லருமறை முதல்வ சொல்வா னடியனேன் றனக்கு மாசை
பெருகவுண் டதனாற் கேணீ பேசுவ னென்று சொல்வார். (௬௪)

### வேறு.

சீராருந் திருப்பள்ளி யெழுச்சி பத்துஞ் செப்பியதிற் றெளிவுறுநற் பொருளுஞ் செப்பி
யாராயும் வேதங்க ளொருநான் காலு மயனாலு மரனாலு மறியொ ணாத
நாராய ணன்சொரூப ரூப மாதி நலந்திகழும் விபூதியருட் குணங்க டங்கு
மோராருந் திருமாலை நாற்பத் தைந்து மிலங்குசரா சரமுருக விசைப்பா ராவி. (௬௫)

காயமொடு கரைந்துநீ ராள மாதல் கண்டனந்தன் மீதிலுறை கமலச் செங்கண்
மாயவனார் பூவிலுறை மங்கை யோடு மனமகிழ்ந்து தொண்டரடிப் பொடியார தம்மைப்
போயெடுத்துத் திருமார்போ டழுந்தப் புல்கப் புறம்பொசிந்த திலையாழ்வார்பூண்டயாக்கை
தோயமொடு தோயமுறக் கலந்த தொத்தார் சுடராழிக் கையனுமத் தொண்டர் தாமும்.

என்புநரம் புரோமநீர் மூளை மச்சை யிவையாலே திரண்டிலங்கும் யாக்கை கெட்டென்
மின்பொருவுஞ் சுடராழித் திருமா லெம்மான் மெய்ம்மையினோ டுறக்கலந்த பரிசு தன்னை
யன்பரருட் பாகவத ரறையக் கேட்டு மச்சுதற்கா ளாகாதே யவனி யோர்க
டுன்பவலை வசத்துழன்றும் பிறந்துஞ் செத்துந் தொல்லைநமன் பாசத்தாற் சுழலு மாறே.

திரும்புண்ட கதியாழுந் தேவா காணத் திருவுந்தி மடுவினிடைச் சிறந்து தோன்றி
வரும்புண்ட ரீகத்தி லயனுங் காண வானவர்கள் கோன்காண மண்ணுங் காண
விரும்புண்ட நீர்பொங்ல வரங்கத் தம்மா னிணையடிக்கீ ழடைந்தார்சொல் லிசைநன் மாலை
தருந்தொண் டரடிப்பொடிசெய் தவத்தின் வாழ்வைச் சதுமறைக்கு மெடுத்துரைக்கத் தகு
[மோ வம்மா.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

ஆசிலாத் தொண்டர் தொண்ட ரடிப்பொடி யரங்க மன்னு
னீசனைப் பாடி யாட்செய் திணையடி யடைந்த வாற்றைத்
தேசிக னருளா னாயேன் சிறிதறிந் தளவுஞ் செப்பி
மாசிலாக் கொல்லிக் கோமான் செய்கையும் வழுத்த லுற்றேன். (க)

பொருவரும் வஞ்சி வேந்தர் பூண்டமா தவத்தி னாலே
திருவளர் கூடற் றன்னிற் சிறந்ததோர் மாசித் திங்க
டருபுனர் பூச நாளிற் சங்கரன் மகிழ்ந்து வாழ்த்த
வருமறை நாலும் வாழ்த்த வமரர்கள் குழாங்கள் வாழ்த்த. (உ)

காருறு முருவச் செய்ய பவளவாய்க் கமலச் செங்க
ணேருறு திருமா லேவ விருந்தவை குண்ட னீங்கிப்
பாருறு தவங்க ளோத்தப் பங்கயச் செல்வி காக்கச்
சீருறு கொல்லிக் கோமான் றிருவவ தாரஞ் செய்தான். (ங)

## வேறு.

ஆர்த்தன சராசுர மண்டர் பூமழை
தூர்த்தனர் முனிவர்க ளாசி சொல்லினர்
போர்த்தனர் சித்தர்கள் விசும்பிற் புன்மைகள்
வேர்த்தன தருமமு மெய்யு மோங்கின. (ச)

ஆடின ரந்தண ராயு நான்மறை
பாடின ரிருடிகள் படியில் வஞ்சகம்
வீடின வுவப்பொடும் விரிஞ்சன் வாழ்த்தின
னோடின ரொன்னல ருலக மோங்கின. (ரு)

அப்படி நன்மைக ளன்பு கூரவும்
பொய்ப்படு தீமைகள் புரண்டு சாயவு
மிப்படி யுற்றசே யிலங்கு சீரரு
ளொப்பரு மேனிகண் டுலகர் கூறுவார். (சு)

அருமறைக் கொழுந்திது வென்ப ரந்தணர்
திருவருண் மெய்யிது வென்பர் சித்தர்கள்
பொருவரு ஞானியர் போத மென்பர்க
டருமமென் பார்படி தாங்கு மன்னவர். (எ)

பொறையொரு பாலனாய்ப் புகுந்த தென்னவு
மறைதரு சாமந்தி யாக மென்னவு
மறைகளோ டயனரன் வாழ்த்தி யேத்தரு
மிறையருண் மதலையா யெய்திற் றென்னவும். (அ)

தோன்றிய மதலையைச் சுருதி நீதியி
னீன்றவள்.களிப்புற வெடுத்திம் மண்முதன்
மூன்றுல குயத்தமிழ் முறையி னல்கென
வூன்றிய திருமுலைப் பாலு மூட்டினாள். (௯)

வேறு.

திருவவ தாரஞ் செய்த தினத்தினுக் கேழா நாளிற்
பொருவறு மதலை கையிற் பொருந்திபொற் காப்பும் பூட்டி
யருமறை விதியா லாறுந் திங்களி லமுது மூட்டி
வருகலன் பலவுஞ் சாத்தி மாசற வளர்க்கு நாளில். (௧௦)

வேறு.

அல்லிப் போதயன் றன்னையை யன்பினாற்
புல்லிப் பூண்டு புணரு மதலையைக்
கொல்லிக் கோன்குல சேகர னென்றுபேர்
சொல்லி வாழ்த்தித் துதித்தன ரந்தணர். (௧௧)

தென்னர் செம்பிய ராதியர் திக்குறை
மன்ன ரன்பின் வருமணித் தொட்டிலின்
மின்னு சோதி மதலையை மேவுவித்
தன்ன மன்னவர் பாட்டொடு மாட்டினார். (௧௨)

கிடந்தி ருந்து தவழ்ந்துபொற் கிண்கிணி
யிடங்கொ டண்டைத் தொனியு மிரைந்தெழ
நடந்து பேதையர் சிற்றிலை நாடொறுந்
தொடர்ந்த ழித்து வளர்ந்தனன் றோமிலான். (௧௩)

வேறு.

மறுவறு முகுந்த மாலை வழங்கிடு மதுர வாயினின்
றுறுபெரு மமுதந் தத்த வுடன்வளர் பேதை யார்பாற்
குறுநடைக் குறும்பு செய்து குவலயத் தரசர் போற்றச்
சிறுநெறி யுறுதே ரோட்டித் தீதற வளர்ந்த மன்னா. (௧௪)

மறையவர் வகுத்த மெய்ம்மை வளர்தரு மனுநூ னீதி
முறையினிற் சவுளஞ் செய்து முப்புரி நூலுஞ் சாத்தி
யறைதரு கலைக ளெட்டெட் டாசற வாய்ந்திம் மண்ணிற்
றிறைகொணர்ந் தரசர் போற்றத் திருமணம் புணர்ந்த பின்னர். (௧௫)

ஒருவரு மிருவர் தாமு மும்பரு மகிழ்ச்சி யெய்த
திருபர்க ளமைச்சர் கூடி நீணிலங் காத்தற் கிந்தப்
பொருவரு மைந்தற் கின்றே பொன்முடி புனைவோ மென்று
திருவபி டேகஞ் சூட்டச் சிறந்தர சாளு நாளில். (௧௬)

வேறு.

விரைசெய்தார் மணிமுடி வேந்த னாகியே
தரைமிசை யுயிர்க்கெல்லாந் தானொ ராக்கையாய்ப்
புரையறு மதிக்குடை நிழற்றும் பூபதி
யரசியல் பதனையு மறைகு வாமரோ. (கஎ)

வேறு.

பொங்கோத வேலை புடைசூழ மன்னு புவிமன்ன னாப ன்னு புகழான்
வெங்கோப மிக்க வசுரேசா சேனை விறலோடு வென்ற விமல
னெங்கோனி ராம னுயிர்காவல் செய்த படியென்ன லன்றி யிறைவன்
செங்கோல்செ லுத்தி வருநீதி தன்னை யெவரோ சகத்தி லறைவார். (கஅ)

புலிபால்சு ரப்ப விளமானு மிக்கள் புரைதீர வுண்டு பொருமு
மெலிபால ருந்து சிறுகுஞ்சு பூசை முலையூடு மின்ப முறுமால்
வலிபான்மி குத்த கொலிகாவ லற்கு வருநீதி மானி னுயிர்கொள்
விலிபாலி ருந்த தெனலாவ தன்றி யெவரான டக்கும் வினையே. (ககூ)

மறைவாண ராலு முனிவோர்க ளாலும் வளர்வான வாக்கி னுணவாங்
குறையாத செல்வ முறுமாறு மன்னு கொடையான டத்தி யவராற்
பொறையார்பு விக்க ணுறுதிங்க டோறு முயாமாரி மூன்று பொழிய
விறையாறி லொன்று படிமேன்ம கிழ்ந்து குடிநல்க வின்ப முறுவான். (உ0)

கூசாது வேத நெறியிற் றொடுத்த குலநாலு நீதி குலைய
மாசான்ம யக்கி வருமாய வஞ்ச வலைவேர றுத்து மதியை
யூசாடு ஞான வுருவிற்பி றந்தி வுலகேழின் மன்னி யொளிரு
மாசார முற்று மொருமேனி கொண்ட திதுவென்ன மன்னு மறிவோன். (உக)

படையால்வி ரிந்த புகழாலி லங்கு படிவானம் வேலை முழுது
முடையான ரக்கர் குலம்வேர றுத்த வுரவோனை யுற்ற நெறியான்
கொடையாலெ டுத்த கரமீதி லங்கு குணஞான தான முடையா
னடையாரி டத்து முறநோய்பொ ருமலருண் மாரி பொங்கும் விழியான். (உஉ)

பூதால மென்று புகழட்டி லுற்ற பரதார மாசில் புகழான்
மாதாவெ னக்கு மெனவேயொ டுங்கு மனமாதி மூன்று முடையான்
பாதார விந்த மலராலி லங்கு படிவான ளந்த பரனார்
வேதாக மங்கண் மனுநூல்பு ராண மிகுகேள்வி மன்னு செவியான். (உங)

செய்யாளி லங்கு புவிநாத னான திருமால்சி றந்த வடிவா
மையாய சோதி யுருவைப்பி ரிந்து மதியாக வொன்றை யெனினு
மெய்யாய காதன் மகவொன்று பேணி யுடன்வாழ வீறு பெறுவோன்
பொய்யாத வாய்மை யுடையான டைந்த புலனைந்தும் வென்ற பொறியான். (உச)

நெறியாலி றந்த புவியோர்க ளுக்கு கிரியாதி துன்ப வினைகள்
செறியாத விச்சை யவைசெய்தி மன்னு செவியாதி யாகி வளரும்
பொறிவாயி னுற்ற புலன்மேவு தீமை பொடிசெய்யு நீதி யறிவை
யறியாத வர்க்கு மறிவார்த மக்கு மகல்வான ளிக்கு முரவோன். (உரு)

# குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

குருநாடர் சேரழா மகதேசர் தென்னர் குருநாட ராதி யரசர்,
வருவார்நெ ருங்கி யிருபானி ரைத்து மலர்தூவி நின்று தொழுதெந்
திருவாள வஞ்சி நகராள வென்று செறிமன்னர் பன்னி யடைவே
தருபாகு டங்கண் மலைபோலு யர்ந்த தலைவாசன் முன்றி லுடையான். (உசு)

வாயாலொ ருத்தர் கெடுமாறு ரைத்தவன் மனதாலு மெண்ண லறியான்
காயாநி றத்தன் மகனுர்வ குத்த சகனுதி பூத மிடையி
லோயாது மன்னு முயிரான வைக்கு முறுதந்தை யோடு தமராய்த்
தாயாகி யன்பு புரிவானு யர்ந்த தனையேத னக்கு நிகரான். (உஎ)

## வேறு

இந்தவகை யாலவனி யின்பமுற வென்றே
வந்தகுல சேகரா வழங்கிவரு நாளின்
முந்தைமறை தந்தபிர மற்குமுனி வாக்கும்
தந்தையவர் கண்டுயி றலத்தினி லமர்ந்தார். (உஅ)

செய்யமலர் மங்கைதிரு மார்பினி லிருப்பக்
கையமரு மாழிவளை காரமுகின் மருங்கின்
வெய்யவொளி வீசுகதி ரிந்துவின் விளங்கப்
பையரவு தன்னுயர் பணங்கொடு கவிப்ப. (உகூ)

கோடிகதிர் மின்மினியின் மங்கியொளி குன்ற
நீடுமவு லிக்கிரண நேமியில் விளங்க
வேடவிழ் மலர்ப்பதும நான்முகனெ ருடன்
பாடமறை வானவர் பரிந்துருட மாட. (௩0)

கற்பக நிழற்கடவுள் காமனெ டமரந்தே
யற்புத மதிக்குடை யடுத்துமற நிழற்ற
விற்புருவ மென்கொடிகள் வெண்கவரி வீசச்
சிற்பரம சோதிபெறு சித்தாமலா சிந்த. (௩க)

இருந்தன னனந்தன்மிசை யெந்தையரு ளாலே
திருந்தவுல காளுமுயர் சேரர்பெரு மானும்
பொருந்துமணி தங்கியொளிர் பூவணையி லின்பந்
தருந்துயிலில் வேதவொலி தானுற வெழுந்தான். (௩உ)

## வேறு.

எழுந்தவர் பரமா னந்த னிருக்கையைத் திருந்த நோக்கி
யழுந்துறும் புவியிற் றுழ்ந்தார் மச்சுத னுசி லாத
செழுந்தவ முடையார் தம்பாற் றிருவருட் கருணை செய்தோ
ருழுந்துருள் பொழுதி லேகி யொளிவளர் விசும்பி லானன். (௩௩)

மண்ணுறப் பணிந்த வன்பர் மாயனை யருகிற் காணார்
விண்மிசைக் கருடன் றோண்மேல் விளங்கிவீற் றிருப்பக் கண்டா
ரெண்ணரும் பரம சோதி யெழிறிகழ் சொரூப ரூப
நண்ணுமெய்க் குணவி பூதி ஞானவா னந்த லீலை. (௩௪)

அனைத்தையுந் திருந்த நோக்கி யரசர்கள் பெருமா னென்னே
வினைக்கட னடுவண் வைகி வெறுமையுற் றடியே னுன்னை
நினைத்திலே னமலா வென்று நெடுங்கணீ ரருவி சோரத்
தனைக்கரைத் துருகி நின்றார் தலைவர்த மிருக்கை சார்ந்தார். (௩௫)

மன்றல்சேர் துளவத் தாரான் மறைதலு முனைநா ளின்ற
கன்றுபோய் மறைய நெஞ்சங் கரைந்திடுந் துருகு மான்போ
னின்றுநின் றிரங்கி வாழே னீணிலத் தினியென் றெண்ணி
வென்றிவேன் மன்ன னின்றான் விடிந்தது பொழுது மாதோ. (௩௬)

ஆதவ னெழுந்த போதி லரசர்க ளமைச்சர் நீதி
வேதியர் கவிஞர் பாணர் வீணையாழ் முழவம் வல்லோர்
மூதறி வுடையோர் கால மூன்றையு முணர்ந்து வைகு
மாதவ ராதி மன்னன் வாயிலின் மன்னி னார்கள். (௩௭)

இருட்பொழு தகன்ற வாறு மியாவருந் தன்பா லெய்திப்
பொருட்பெற நின்ற வாறு முணர்ந்திலன் பூவை வண்ணத்
தருட்கட றனக்கன் றந்த வனுபவத் தொழுகி மன்னன்
மருட்கொளு முலக வாழ்வை மறந்திருந் துருகி னைந்தான். (௩௮)

உய்வுற வாயி லுற்றோ ருத்தம னணையக் காணார்
வைகறை யெழுந்து நாளும் வந்தருள் புரியு மன்னன்
வெய்யவ னுதித்தோர் சாமஞ் சென்றது விறல்கொள் வேலான்
செய்திற மறியோ மின்னுஞ் செறிந்தில னென்று சிந்தை. (௩௯)

வருந்தினா வாயி லோனை வருகநீ யென்று கூவித்
திருந்திய மன்ன னின்னுஞ் செறிந்திலன் சீர்கொள் கோயில்
பொருந்தியத் திறத்தை யோர்ந்து பொருக்கென வுரைப்பா யென்றா
ரருந்தவ முடையான் சென்று தாதியர் தம்மோ டாய்ந்தான். (௪0)

தாதியர் மன்னர் மன்னன் றங்கிய மாடஞ் சேர்ந்தாங்
கோதினா வணங்கி நின்றோ ரோங்குபொன் வாயி றன்னில்
வேதிய ரமைச்சர் மன்னர் வேந்தநின் வரவு காணா
மாதுய ருற்றா ரென்ன வாயிலோன் வந்தா னென்றே. (௪௧)

கூறினார் மடவார் கூறக் கொழுஞ்சுடர் மவுலி மீது
நாறுபூந் துழாய்சேர் மாமா னல்குமா னந்த மன்னி
யூறிய வறிவை மீட்டுப் புலன்படு மொழுங்கிற் சேர்த்து
மாறிலாத் தன்பொற் கோயில் வாயில்சென் றடைந்தான் மன்னன். (௪௨)

மன்னவன் வாயி னண்ணி மறையவ ரரசர் வேந்த
னுன்னிய துணரு நீதி யமைச்சர்க ளுவந்து போற்ற
மின்னவிர் மணியிற் பொன்னில் விளங்குமா சனத்தி லேறி
யென்னையாண் முகிலே யென்னி லிருந்தன னிருந்த காலை. (௪௩)

மன்னவ ரமைச்சர் நீதி மறையவர் தம்மை நோக்கி
மின்னவிர் மவுலி வேந்தன் விளம்புவான் வேதாந் தத்தி
னுன்னரும் பொருள்கண் டுள்ள மோங்கினே னுடன்வா ழேனை
லென்னைநான் வேண்டே னிந்த விருநிலத் தின்ப மென்ன. (௪௪)

பின்னைமன் னவரை நோக்கான் பிரகிரு திக்கு மீடா
மின்னையே யனைய செல்வம் விரும்பினார் குழாத்து ளின்றே
னன்னையே யத்தா வீதை யரியணை யாகு மென்றே
யென்னையிக் கழுமேல் வைத்தா ரியாவரென் றிரங்கி நைந்தான். (௪௫)

அத்திறங் கண்ட மன்ன ரமைச்சர்க ளாவி வாடி
மெய்த்திறத் தின்ப நல்கும் விண்டுவுக் கடிமை யாய
சித்திர நிலையார் தம்மைச் சென்றழைத் திறைமுன் னுய்க்கி
யித்திறந் தேர்மி னென்ன யாவரு மிறைஞ்சி நின்றார். (௪௬)

கமலநான் முகத்தோன் செல்வ நரகெனக் கண்டு மெய்ம்மை
யமலவீ டறிந்து மன்னு மச்சுத னடியா ர தம்மை
முமலமு மில்லா மன்னன் முன்னுறக் கண்ட போதி
லெமலமுங் கடிவீர் வம்மி னிருமினென் றிறைஞ்சித் தானும். (௪௭)

இருந்தன னிலத்திற் கண்டீ ரிருந்தவத் தோர்கள் மன்னு
திருந்துபார் முழுதுஞ் செங்கோல் செலுத்தியாள் கின்ற செல்வா
பொருந்துமா சனத்தின் முன்போற் போயிருந் தருள்வா யென்றே
கருந்தட முகின்மேற் சென்ற கருத்தினர் கழற மன்னன். (௪௮)

மாசிலா நிலையீ ருங்கள் மலரடித் துகளே யின்றென்
பாசமார் பிறவி நோய்க்கு மருந்தெனப் பணிந்தேன் பின்னே
ராசனத் திருந்தா னன்றெ னறிவென வழுதான் மன்னன்
றேசுடைத் திருமா றொண்டர் சென்றவ னடியிற் றாழ்ந்தார். (௪௯)

திருமகள் கொழுநற் கன்பு தினையின தளவு மின்றி
யிருநில மிறைஞ்ச யானை யெருத்தமுற் றிருமாப் பெய்தி
யருவினை வசத்தி லாடு மடியனை யிதுநீ ர செய்தாற்
பொருவினன் னிலையீ ரந்தோ பொறுக்குமோ வென்று போற்றி. (௫௦)

பின்னுமாங் கவர்பொற் றாளைப் பிடித்துயர் முடிமேல் வைத்தா
னன்னெறி யன்ப ரோடு நான்மறை முடிவின் மன்னி
யுன்னரும் பொருளை யுன்னி யுவந்தரி யருளாற் றன்னின்
முன்னெடும் புவியிற் போந்த முத்தர்கண் மூவர் நால்வர். (௫௧)

ஏனவிசைத் தருளும் பொய்கை பூதம்பே யிசைத்த பாட்டு
மனவயற் புதுவைக் கோமா னவதரித் தரசன் முன்னே
வினவருஞ் சமயத் தாரை வென்றதும் வேதக் கோன்பின்
மனமகிழ்ந் தருளிச் செய்த தமிழுமா மாய னூர்பால். (௫௨)

மந்திரங் கேட்ட தீரன் றமிழுமா மழிசைக் கோமா
னந்தரத் தமரர் நாணு வரியைவீ வென்று கூவப்
பந்தணை விரலாள் பூமி பதுமையோ டெம்மா னேகி
யிந்திரன் வணங்கச் சென்றங் கிருக்கையூர் புக்க வாறும். (௫௩)

ஓங்குசீர் மழிசைக் கோமா னுரைத்தநற் றமிழு மன்போ
டாங்கதற் பின்பு தொண்ட ரடிப்பொடி யாழ்வார் தோன்றிப்
பாங்குட னுரைத்த பாட்டும் பரமனை யடைந்த வாறும்
தேங்கமழ் மாலை மார்பன் றிருந்துற விருந்து கேட்டு. (௫௪)

செங்குமு யகனூர் மீதிற் றிருவரு ளிருந்த தன்றிப்
பங்கயின் முந்த ரிந்தப் படிமிசை வந்து தோன்றிப்
பொங்குமே மூலகி னீங்காப் பொறிபுல னோடு மாடு
மெங்களுக் கின்ப நல்கு மிருந்தயி ழிருந்த வாறே. (௫௫)

என்றுரைத் துருகி நைந்தாங் கிருந்தமன் றிருந்து நீதி
யொன்றிய பகவற் பத்த ருடனிவை யுரைக்குந் தொண்ட
னின்றுநீ புகலு மிந்த வெம்பெரு மக்க டம்பாற்
சென்றுநா னவாக்காட் செய்யுந் தினமெனக் குறுமோ வென்றும். (௫௬)

ஆங்கவா தமக்காட் செய்வா ருடனமர் காலந் தானு
மோங்குசீ ரரங்க மாகி யுளதிருப் பதியின் மாயன்
பூங்கழல் வணங்கு நாளு மென்றுகொல் புகுமேன் றெண்ணி
யேங்கிமன் னிருந்தான் மண்மீ தியாவரு மிறைஞ்சி யேத்த. (௫௭)

## வேறு.

அப்படியே யகம்புறத்து மச்சுதன்சே ரடியருட
னிப்படியிற் சிலகாலங் கடத்துநா ளிகல்வேந்த
ளொப்பரிய கருகூலந் தாரத்தி லொன்றுகெட
வெப்படியீ தரைப்பதெனக் காவலவ ரிடருற்று. (௫௮)

மந்திரிக ளுடனுரைப்ப மன்னவரே டம்மொழியைத்
தந்திரிந்தார் மந்திரிக டார்வேந்த னதுகேட்டு
வந்திருந்தா ரார்வேற்று மானிடராய் மனையிலென
நொந்திறைஞ்சிக் காவலவர் பாகவத ரெனநுவன்றார். (௫௯)

## வேறு.

அவ்வுரை மன்னர் மன்னன் செவியுற வாவி வாடி
வெவ்விடங் குடித்தார் சென்னை விம்மினன் மனத்தி னுள்ளே
யெவ்வகை செய்தாற் றீரு மிப்பழி யென்ன வெண்ணிக்
கவ்வையில் குடப்பாம் பின்றே கதுமெனக் கொணர்வீ ரென்றான். (௬0)

அடுத்துநின் றவர்க ளேகி யராக்குடங் கொணர்ந்து வைத்தார்
கடுப்பினின் மன்னன் பொற்பண் டாரியைக் கண்ணு னோக்கி
யெடுத்தா ரயிர்த்த தாரை யியம்புகை யிடவு மென்று
குடத்தரு கணைந்தான் கேட்டோர் கோவொடு முரைப்ப தானார். (சுக)

மண்டல முழுது மாளு மன்னவர் மன்ன கேட்டி
யண்டமுண் டுமிழ்ந்த சோதி யச்சுத னுசி லாத
தொண்டர்க ளன்றி யாருந் துன்னின ரில்லை யென்று
ருண்டுமற் றியாங்க ளல்லா லுட்புகுந் தவர்க ளில்லை. (சுஉ)

எனவுரைத் தையந் தீர்வேம் யாமெனக் குடத்தி னேரே
மனமகிழ்ந் தன்பர் சென்றார் வையக மன்ன னின்மி
னெனவவர் முன்ன மெய்தி யேழுல குண்ட சோதிப்
புனைமலர்த் துழாயான் றொண்ட ரெடுத்திலர் பொற்பண் டாரம். (சுங)

என்றுசென் றிருந்த பாம்பின் குடத்தினில் யாருங் காண
வென்றிவேன் மன்னர் மன்னன் றிருக்கையை விரைவி னிட்டாங்
கன்றுதன் பொற்பண் டாரம் போக்கினு ரிட்ட வாழி
யொன்றெடுத் தரச னின்று னும்பர்பூ மாரி பெய்தார். (சுச)

மந்திரித் தலைவர் தாமு மன்னவ னடியிற் றாழ்ந்தா
ரிந்திரன் பிரம னக்க ணுதிப ரெவருந் தந்தஞ்
சிந்தையின் மகிழ்ந்தா ராழ்வா ரரசியற் சிலுகை விட்டாங்
கெந்தா ளரங்கத் தானை யாமனு பவிப்ப தென்ன. (சுரு)

வேறு.

எம்பெருமான் சொன்மாலை யிருளிரியச் சுடர்மணிக ளென்று பத்து
நம்பெருமா டிருவுளமு நான்மறையு மயனரனு நலத்தோ டோங்கு
மும்பருமா முனிவாகளு முலகேழு முருகிரீ ராள மாக
வம்பவிழ்பூந் துழாயானை யனுபவிப்ப தென்றெனவும் வகுத்துக் கூறி. (சுசு)

சீராருந் திருவரங்க நகருறையும் பாகவதா சேடந் துய்த்தவ்
வாராத காதலர்கள் குழாங்களுட னடியேனு மமர்ந்து வைகி
யேராரும் பேரின்ப மென்றுகொலோ வுண்பதென வெடுத்தோர் பத்துங்
காராரும் பொழில்வஞ்சி காவலவன் கட்டுரைத்தான் ககனம் வாழ்த்த. (சுஎ)

ஆங்கதற்குப் பின்வஞ்ச வுலகத்தின் வாழ்க்கையையா தரியே னென்றே
யோங்கியசீ ரரங்கத்தி லுற்றனந்தன் மீதேறி யொழிவில் காலம்
பூங்கமலக் கண்வளரும் புனிதனன்றி யெனும்பத்தும் பொருந்த வோதித்
தேங்கமழ்பூந் தார்வேந்தன் றிருமனத்தாற் றிருவரங்கஞ் சென்று சேர்ந்தான். ()

அந்நகரிற் பாகவத ரனைவர்களு மெதிர்கொண்டாங் காழ்வார் செய்ய
பொன்னடியிற் புக்கிறைஞ்சப் பூபதியா யாழ்வாரர்ப் போற்று மன்பர்க்
கின்னமுதாம் பெருமாளுந் திருத்தொண்டர் தாளிணைக ளிறைஞ்சி வாழ்த்தி
முன்னுறநா னினைத்ததின்றே முடிந்ததென வணியரங்கன் முற்றத் துற்றார். (சுகூ)

அணியரங்கன் திருமுற்றத் தன்பர்களோ டினிதமரு மாழ்வார் சோதிப்
பணியணைமே லமரர்தொழப் பங்கயக்கண் வளர்ந்தருளும் பரனைக் கண்டெம்
மணிவண்ணா சரணமென மண்மீதிற் பணிந்திறைஞ்சி முகுந்த மாலை
தணியாமா றணிந்துலகஞ் சுகமடைய வடமொழியாற் சாற்றி மாமால். (௭௦)

அருகணைந்து திருவுருவை யுற்றிறைஞ்சித் திருக்கண்வள ரரங்கத் தம்மா
னுருகுபெருங் காதலரைத் திருக்கண்விழித் துறநோக்கி யொப்பி லாதீர்
திருமகளோ டியாமுறையும் வேங்கடத்தில் வருதியென்றான் செகங்கட் கெல்லா
மொருவனென நின்றவரு மணிவண்ணனார் செயனோக்கி யுருகி னைந்தார். (௭௧)

நைந்துருகித் திருவரங்கத் தம்மானை யன்பர்பெறு ஞான வாழ்வை
யைந்துதலை யர்டரவை யலர்கமலத் துள்ளுறையு மன்னை தன்னைச்
சிந்தையுறப் பதிவித்துத் திருவரங்க நகர்நீங்கித் தேவர் வாழ்த்த
முந்தைமறை தொழுங்கச்சி யருளாளர் தமைவணங்கி முதல்வர் கூறும். (௭௨)

சீராரும் வேங்கடத்திற் சென்றடைந்தார் திருமலையைத் திருந்த நோக்கி
யேராரும் புவிமீதிற் பரமபத மிதுவென்றே யெண்ணி நின்று
காராரித் திருமலைமே லேதேனு மாவேனான் ககனத் தோடிப்
பாராரும் பதம்வேண்டே னென்றுரைத்தா ரங்கிருந்தோர் பத்து மன்பர். (௭௩)

அந்நெறிமெய் யன்பினொடுந் திருமலையை வலஞ்செய்தாங் கதன்மேல் வைகும்
பொன்னவிர்சே மிப்பெருமான் பூங்கழற்கீழ் வானவரும் புகழ வைகி
யென்னமுதே சரணமெனச் சிலகால மிருடிகளு மிறைஞ்ச வாழ்ந்து
பின்னொருநாள் விற்றுவக்கோட் டம்மானை யடிதொழுவான் பெயர்ந்து போனார்.

அண்டர்தொழும் விற்றுவக்கோட் டம்மானை யடிவணங்கி யதனுள் வைகுந்
தொண்டர்களை யடிதொழுது சுருதிமுதல் வானவருந் துதிசெய் தேத்த
வொண்டமிழோர் பத்துநீ யெனைவேண்டா யாயினுநா னுன்னை யல்லாற்
புண்டரிகக் கண்ணனெந்தாய் பற்றிலேன் மற்றெனவும் புவனம் போற்ற. (௭௫)

கட்டுரைத்துக் கொல்லிநகர்க் காவலவன் செங்கமலக் கண்ணன் வைகு
மெட்டெழுத்தே துணையாக விருநிலமும் வானகமு மிறைஞ்சு மவ்வூர்
விட்டெழுந்து வசுதேவர் திருமகனா ராய்ப்பாடி சென்று மேவி
மட்டவிழுந் துழாய்முடியான் வரவுணரு மாய்மகளிர் வசன மாக. (௭௬)

ஊடலுடை யொருபத்து மெடுத்துரைத்து வான்முதலா முலகம் போற்ற
மாடமிசை மதிதவழும் வடமதுரை நகர்மன்னி யதில்வாழ் மாமா
றுடொழுது தேவகியார் தஞ்சிறுவன் மழலைச்சொற் றுங்கே ளாதே
யீடுபட்ட சொற்றொகையோர் பத்துரைத்துக் கண்ணபுரத் தெய்தி னாரால். (௭௭)

அந்நகரத் தினிதமரு மச்சுதனைத் தயரதனா ராவி யாய
யென்னமுதா மிராகவனாய்த் திருவுளத்தி லெண்ணியவன் றன்னை யீன்ற
தன்னிகரா ளௌசலையா ளிராகவனைத் தாலாட்டுந் தாலாட் டாக
வின்னிசையாற் பத்துரைத்துத் தயரதனா ரிராகவனார் காணி லேக. (௭௮)

வருத்துமுற்றுப் புலம்பியசொற் றொகையாலே யொருபத்தும் வகுத்துக் கூறித்
திருத்திகழுர் தில்லைநகர்ச் சித்திரகூ டஞ்செறிந்து தேவர் வாழ்த்த
வுருத்திரனும் மடிவணங்க வுலகனைத்து முண்டுறங்கு மொருவன் றன்னைக்
கருத்திலுறப் பதிவித்தக் கருணைமுகி லயோத்தியெய்திக் ககனம் வாழ. (எக)

வேறு.

வல்லரக்கர் குலமுழுது மறுத்த வாற்றை வான்மீகி விரித்ததனைத் தொகுத்து ஞானச்
சொல்லமைந்த தமிழ்பத்தி லருளிச் செய்து சுருதிதொடாந் தறிவரிய சோதி யாகி
மல்லடர்த்த மாமால்வை குந்தம் புக்கு மாமணிமண் டபஞ்செறிந்து கொல்லிக் கோமா
னெல்லையில்பேரின்பவெள்ளச் சுழியின் மூழ்கி யிருந்தநித்தாமுத்தருடனிருந்துவாழ்ந்தார்.

குலசேகரப்பெருமாளாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

காராரும் பொழில்வஞ்சி காவலவன் கதிர்மவுலிக்
கூராருஞ் சுடர்வேற்கைக் குலசேக ரன்றிறமு
மோராரும் பாகவத ரின்னருளாற் சிறிதியம்பிச்
சீராருந் திருப்பாணாழ் வார்திறமுஞ் செப்புவாம். (௧)

மாணார்ந்த திறலரங்க மணிவணனைக் கண்டகண்கள்
காணாமற் றொன்றினையு மெனக்கரைந்து கட்டுரைத்த
பாணாழ்வா ரனுபவத்தைப் பாடவெனப் பத்தர்கண்மு
னாணாதே யொருப்பட்டே னிதின்வேறு நகையுளதோ. (௨)

மனுமகனுக் கயன்கொடுத்த மரகதமா மணிக்குன்ற
மெனுமரங்கத் தம்மானை யிதயமல ரணைக்கிடத்தி
யனுபவிக்குந் திறமுணரிற் றிருமகளுஞ் சும்மடியேன்
பனுவலுக்கோ வெளியாவர் பாணாழ்வா ரல்லரோ. (௩)

என்றாற்பொய் யடியேனுக் கெளிதோமற் றவன்கீர்த்தி
நின்றாங்கே யதுநிற்க நாயினேன் புன்சொலினு
மொன்றாமா தென்னென்னி லுரைதோறுந் திருப்பாணன்
குன்றாத திருநாமம் வரலான்மெய் குறித்தோரே. (௪)

ஆங்கவையே துணையாக வறைவேன்மெய் விண்ணின்று
பூங்கமலக் கண்ணெம்மான் றிருவருளாற் புவியின்மறை
யோங்குதிரு வுறையூரிற் றிருக்குலத்தா ருறுதவத்தின்
பாங்கதனாற் கார்த்திகைமா தத்தில்வளர் பக்கத்தில். (௫)

செய்யநெறி யுரோகணியிற் றேவர்களுந் திருமறையும்
வையகமா முனிவர்களு மாதவரு மகிழ்ந்தேத்தப்
பையரவத் தணைக்கிடந்தான் பத்தர்குழாம் பரிந்தோங்க
வையனெனை யாளவந்த திருப்பாண னவதரித்தான். (௬)

ஈன்றாரு மறியாதே யிலைமறைகா யெனமண்ணிற்
றோன்றாதே வளர்ந்தருளிச் சுருதிதொழ வுலகுய்ய
மூன்றாறு திருவயதிற் கைசிகநா ரதமுனிவர்
போன்றாரு மிவர்க்கொவ்வா ரெனுமிசையிற் பொதுவின்றி. (௭)

சூழ்விசும்பு மதிலமரர் தொல்லுலகு மம்புவியு
மாழ்கடலு மெண்கிரியு மயனரனு மசுரர்களும்
வாழுமுயிர்ச் சராசரமு நீராள் மயமாக
வேழிசையும் பாண்பெருமா னம்பெருமா ளிடத்திசைத்தார. (௮)

தென்னாற்றங் கரைநின்று திருப்பாண னிவைபயில
வந்நாட்டார் திருக்குலத்தி லவதரித்தா னிவர்யாரோ
பொன்னாட்டி லுள்ளவரோ வெனப்புகலப் புண்ணியரும்
பன்னாளுந் திருவரங்கத் தம்மானைப் பணிந்தேத்தி (௯)

அப்படியே பலகால மந்தரங்க சேவைபண்ணி
யொப்பிலார் சங்கீதம் பயின்றிடுநா ளுயர்வானு
மிப்படியு மளந்தபிரான் றிருமார்பி லினிதமருஞ்
செப்பென்னுங் கனதனத்தா டிருமங்கை மனமகிழ்ந்தே. (௧0)

வேறு.

திருவ ரங்கநக ரெம்பி ரானொடிவை செப்பும் வாணிலுறை தேவரு
மருவ ரும்பொருவில் வீட தாதியுல கேழி னும்மிசை வழுத்துவோ
ரொருவ ரிங்கிவரை யொத்து ளார்கள்பிற ருண்டு கொல்லுரைசெ யும்பவிப்
பெருகு காதலர்பு றம்பு நிற்றல்பழு தென்று செங்கமலை பேசலும். (௧௧)

அண்ட ரண்டமு ளடங்க வுண்டுதுயில் கொண்ட மாலணி யரங்கனா
புண்ட ரீகமலர் மங்கை கட்டுரைசெய் போதி லங்கவளி னைந்துநந்
தொண்ட ரைக்கொணர்மி னென்று செம்பவள வாய்தி றந்திறைவர் சொல்லவக்
கொண்டல் கோயிறிரு வாயில் காவலவ ரேகி னார்குழுவொ டேகியே. (௧௨)

வீதி பற்பல கடந்து சென்றவர்க டிருமு கத்துறையை மேவிநின்
றோதி நாதனரு ளச்சு தன்னணி யரங்க னின்றுனை யழைத்தனன்
போதி யெங்களொடு மென்று செப்பியவா பொற்ப தங்களி லிறைஞ்சலுஞ்
சாதி யிற்கடைய னென்று பாணரது தக்க தன்றென வணங்கினார். (௧௩)

வணங்கி நின்றவ ருரைப்ப மற்றவர்கண் மாசி லாநெறி யரங்கர்முக்
குணங்க டந்தவர்மு னெய்தி யிம்மொழிகள் கூறு வோமெனவு மேகிநற்
பணங்க ளாயிர மிலங்க னந்தன்மிசை மன்ன வோவினிய பத்தனா
ரிணங்கு கின்றிலர் குணங்க ளெண்ணியவ ணெய்து வாரென விறைஞ்சினார். (௧௪)

வேறு.

அந்தவுரை சிந்தைபுக வாதியவ ரோடு
முந்தைமறை நீதிகுல முற்றும்வரு வித்த
வெந்தமுறு தொல்குல மியம்பிலெம தன்பா
வந்தகுல மேகுலம் வரச்சொலுமி னென்றார். (௧௫)

நன்றிவை யுரைத்திடுவ நாதனென நால்வர்
சென்றுவிரை விற்றிரு முகத்துறை செறிந்தே
நின்றிசை வழுத்துநிம லர்க்கிவை நிகழ்த்த
வொன்றுளது கேண்மினென மற்றவ ருரைப்பார். (௧௬)

மின்னைமிளிர் நேமியுடை விண்டுவுரை மெய்யப்
பின்னைமண வாளனை யடைந்துபிறி தற்றுந்
தன்னையற விட்டதலை வாக்கது தகுங்கொ
லென்னையிவ ரோடுமிறை யெண்ணிடவு மென்றே. (கஎ)

செப்பியடி யேன்முடிவி றீவினைசெய் நீச
னெப்பரிய சோதிவள ருத்தம தலத்தி
லெப்படி மிதிப்பதிரு கிரல்கொடெனை யாளு
மப்பனுறு கட்டுரைமி னன்பரென வாழ்வார். (கஅ)

கூறவிறை யேவலொடு சென்றவர்கள் கோவே
மாறிடி லுமைக்கொடுசெல் வோம்வலியி லென்றே
யேறியெதிர் செல்லவவ ரோடியவ னெட்டா
தாறுவரு காவிரியி னக்கரையி லானார். (கக)

இத்திற மரங்கரோ டியம்பிடுவ மென்றே
மெய்த்திற முணர்ந்தநெறி நால்வர்களு மீண்டாங்
கத்திறமு மாயனு டறைந்தனாக ளம்மா
னெத்திற மியற்றிலிவ னெய்துமென வெண்ணி. (உ0)

வேறு.

அலகி லாத மாமாயை யரங்கன் றனையாச் சனைசெய்யு
முலக சாரங்க மாமுனியை யுவந்து கூவி யுத்தமபோய்ப்
பலருங் காண நின்றேறுளிற் பாணாழ் வானைப் பரிந்தேற்றி
நிலவும் பதியை வலஞ்செய்து கொணாக வென்று னிகரில்லான். (உக)

வேறு.

மாசிலா முனிவன் மாயன் மலரடி வணங்கி யேக
வாசிலா வனைத்துக் கொத்து மவனுடன் சென்மி னென்றே
யீசனு மருளிச் செய்ய யாவரு மெழுந்து சென்றத்
தேசினு னின்று பாடுந் திருமுகத் துறையை மன்னி. (உஉ)

சுற்றுற வளைந்து கொண்டு தொழுதனா திருப்பா ணாழ்வா
ருற்றவா தாள்க டம்மி லுடன்பணிந் துருக வீசற்
கற்றமா முனிவ னுழ்வீ ரருளிப்பா டெமக்கின் றென்று
னற்றவ முடைய பத்தா நானது செய்யே னென்றார். (உங)

ஏடவிழ் துளபத் தாரா னெடுத்துமைக் கொணரச் சொன்ன
னேடவு மொட்டோ மாழ்வீ ரென்றன னுவந்து சென்றார்
மாடுநின் றவரை நோக்கார் மற்றொரு திசையை நோக்கிக்
கூடுமோ நீசன் மாசில் குலத்தொடு மென்று கூறி. (உச)

# திருப்பாணாழ்வார் பிரபந்தம்.

கடிப்பிணி லாழ்வா ரோடக் காத்துற வனைந்து நின்றார்
தடுத்தன ரோட றன்னைச் சரணென வணங்கி மண்ணிற்
படுத்தனர் திருப்பா ணாழ்வார் பங்கயத் தயனும் போற்ற
வெடுத்துற முனிவ னேந்தி யிருத்தினான் திருத்தோ டன்னில். (௨௫)

நண்ணரு மிலங்கை வேந்தை நாளைவா வென்ற வந்நாட்
கண்ணனைத் தோண்மேற் கொண்டு களித்தமா ருதியை மானப்
பண்ணமர் கவிவ லானைத் தாங்கிய பஷீவன் பெற்ற
வுண்ணிறை மகிழ்ச்சி யேழே ழுலகினி லொருவர்க் குண்டோ. (௨௬)

இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் முனிவர் சித்தர்
கடிமலர் சிந்தி யார்ப்பக் காசினி யோர்கள் போற்றிப்
படிமிசை யிறைஞ்சி வாழ்த்தப் பத்தர்கள் குழாங்க ளாடு
மடிதொறுஞ் சேறு பாயு மானந்த வருவி நீரால் (௨௭)

அணியரங் கத்தை முக்கா லவ்வணம் வலஞ்செய் தேகப்
பணியணைக் கிடந்த மாமால் பாணர்மெய் விழிக ணோமுன்
கணிகணன் பின்னே போன கஞ்சமா மலர்த்தா ளாதி
முணிமுடி வரையுங் காட்டி மாசிலா மகிழ்ச்சி யீந்தார். (௨௮)

முமலமு மற்ற நீதி முனிவரன் திருத்தோண் மன்னி
யெமலமுங் கடிவார் வீதி யூடவ ரேகுங் காலை
யமலனெம் மாதி நீதி யணியரங் கத்து ளெம்மான்
கமலபா தங்கள் வந்தென் கண்ணுளொக் கின்ற வென்றும். (௨௯)

நின்றதாள் போய தாளா னிலம்விசும் பளந்து நீண்ட
வென்றிவே லரக்கர் துஞ்ச வெங்கணை துரந்த வேந்தன்
மன்றல்சேர் துளபத் தாரான் வளர்திரு வரையிற் கண்டு
சென்றதாஞ் சிவந்த செம்பொ னுடையிற் சிந்தை யென்றும். (௩௦)

## வேறு.

மந்திபாய் வேங்கட மலையை மன்னியு
மிந்தியங் கடிந்தவ ரிதயப் போதினுஞ்
சிந்தியா தடிதொழுந் திருவ ரங்கனு
ருந்திமே லெனதுயி ரொடுங்கிற் றெனவும். (௩௧)

கலகமா ரிலங்கையர் வேந்தன் காட்டிய
வலகிலா வாற்றலை யுறுத்த மாயனு
ருலகெலா முண்டொடுக் குதரபந்தன
நிலவுமென் னுளத்தென நெகிழ்ந்து கூறியும். (௩௨)

## வேறு.

தந்தைதாய் சுற்ற முற்ற தமியனே னுயிரு மாகி
முந்தைநாள் விரும்பிச் செய்து மொய்த்தவல் வினையுந் தீர்த்தென்
சிந்தையே கோயில் கொண்டு திருவரங் கத்துண் மன்னு
மெந்தையார் திருமாா பன்றோ வென்னையாட் கொண்ட தென்றும். (௩௩)

வண்டட ரிதழித் தாரோன் வல்வினை முழுதுந் தீர்த்துக்
கொண்டல்வந் தமருஞ் சோலைக் குளிர்புன லரங்க மன்னி
யண்டரண் டங்க ளாதி யனைத்துள பொருளுந் தண்டா
துண்டமர் மிடறு கண்டு ருயக்கொண்ட தென்னை யென்றும். (௩௪)

கையம ராழி சங்கங் கதிாமதி யிருபான் மன்னு
மையமர் கிரியி தென்ன வளர்வதாங் கருணைக் குன்றம்
பையர வணையுண் மன்னு மரங்கனார் பதுமம் போன்ற
செய்யவா யையோ வின்றென் சிந்தனை கவர்ந்த தென்றும். (௩௫)

பரியவா ளவுண னாகம் படிமிசை மடிமே விட்டே
யரியவா னாகிராற் கீண்ட வரியென தரங்கத் தம்மா
னுரியமா முகத்தி னீண்டு செவ்வரி யோடி வாடாப்
பெரியவான் கண்க ளென்னைப் பேதைமை செய்த வென்றும். (௩௬)

பாலனாய் ஞால முண்டு பங்கயச் செல்வி தன்னோ
டாலமா மரத்தி லோர்சிற் றிலையம ரரங்கத் தம்மான்
கோலமா மணிக ளாரங் குறுநகை முடிவில் சோதி
நீலமா மேனி நெஞ்சை நிறைகொண்ட தையோ வென்றும். (௩௭)

கொண்டல்போ லுருவத் தானைக் கோவல னாகி நெய்பா
லுண்டசெவ் வாயி னானை யுளம்புகுந் துருக்கு வானை
யண்டாகள் பெருமான் றன்னை யமுதினை யரங்கத் தானைக்
கண்டவென் கண்க ளாற்பின் காண்கிலே னொன்றை யென்றும். (௩௮)

## வேறு.

அப்படியே திருமொழியோர் பத்துரைத்தாங் கணியரங்கன் றிருமுற் றத்தி
லொப்பரிய முனிவரனோ டெய்தியவன் றிருத்தோணின் றும்பர் வாழ்த்தச்
செப்பரிய பாண்பெருமா ணம்பெருமாள் சரணமெனச் சென்று தாழ்ந்தா
ரிப்படியே யிறையருளின் செயலிருக்கு மென்றொருவர்க் கியம்ப லாமே. (௩௯)

சரணமெனத் திருவடிக்கீழ்ச் சென்றிறைஞ்சும் பாண்பெருமா டன்னை நோக்கிக்
கரணவொழுங் குறும்வஞ்சப் பொய்யன்புக் கெட்டாத கமலச் செவ்வாய்ப்
புரணனெழுந் திணையடியை மெய்யன்பர் சென்னிமிசைப் பொருந்தப் பூட்ட
வரணிதுவே புகலிடமென் றக்கமலத் திருவடியி லடங்கி னாரால். (௪0)

## வேறு.

இன்பவீ டடைவீர் துலைமா முடல்விட் டெழிறிகழ் சூக்குமங் கழற்றித்
துன்பவா தனையும் விரசையிற் போக்கிச் செறிவர்க டேளாறு பாண
ரென்புதோ லுரோமத் துலமு மரங்க ணிணையடி யெய்திய தென்று
லன்பினு லன்றி யொன்றினு லுய்யு மு[illegible]வ் வண்டத்தி லுளதே.

திருப்பாணாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

1 பாதக்கோ ருளம்பிரியா மதுரகவி திறங்கூறிச்
சீதக்கோ மளத்துளபந் திருத்தாயாய் வில்லிபுத்தூர்
வேதக்கோன் றந்தையாய் வந்துதித்த மெய்ஞ்ஞான
போதக்கோ மளக்கோதை திறமறிந்த படிபுகல்வாம்.

வேறு

2 வையமோ ரேழும் வயிற்றிடை யடக்கு மாயனை யாயர்கண் மணியைச்
செய்யவாய் கமலங் கண்கைகா லுந்தி திகழ்தரு திருமகள் கோனைப்
பொய்யிலா மெய்யா மெய்யுளே தோன்றிப் போக்கொடு வரவிலாப் பொருளைத்
துய்யகார் முகிலைப் பழித்தமா நீலச் சோதியைச சுருதிநா யகனை.

3 பூதநா யகனைப் புவனகா ரணனைப் பொருவிலாப் பொருள்களை விளக்கும்
வேதநா யகனை விதிசிவன் சனகன் விரும்பிநின் றேத்துநா யகனைப்
போதநா யகனை யமரர்நா யகனைப் புலையனே னாவிநா யகனைத்
தூதநா யகனை யைவர்கட் கலையார் தொடுகடற் கிடந்தநா யகனை.

4 மண்ணவர் துணையை மறையவர் துணையை மாசறு மன்பினால் வணங்கும்
விண்ணவர் துணையைவிடைவலான் றுணையைவிரிஞ்சனே முதன்முனிவோரென்
றெண்ணவர் துணையை யேழையேன் றுணையை யிராப்பக லிடைவிடா தேத்தும்
பண்ணவர் துணையைப் பத்தர்க டுணையைப் பங்கயச செல்விநற் றுணையை.

5 ஆழியுஞ் சங்குந் தரித்தமா முகிலை யண்டமுண் டுமிழ்ந்தவா ரமுதைப்
பாழிசா லனந்தன் மீமிசைத் துலங்கும் பாற்கடற் கிடந்துபற் பலவா
மூழியா யிரங்க ளொருகண மாக யோகநித் திரைபுரி வானை
வாழியென் றேத்தி யொருபக லிலங்கு மண்மகண் மலர்மகண் முதலாம்.

6 மங்கையர் சேனை முதல்வன்வா ளனந்தன் வளரொளி திகழ்சிறைக் கருடன்
பொங்குமூ வுலகின் முனிவர்க ளமரர் பொன்னுல காள்பவன் விரிஞ்சன்
சங்குசக் கரம்வா டண்டுவில் லாதி தனித்தனி யடிதொழு திறைஞ்சி
யங்கவன் றுயிலு மழகினுக் கிரங்கி யிருந்தன ரலைகடற் றுயின்றான்.

7 கண்டுயி னீங்கி யிணையடி விளக்கிக் கருணைமாத் திருமுகம் விளக்கித்
தண்டர ளப்பூந் தவிசின்மே லேறித் தாமரைச் செல்விபூ மடந்தை
யொண்டொடி நீளை யடிதொழ மற்றை யனைவரு முளங்குளிர்ந் திறைஞ்சப்
புண்டரீ கக்கட் கருமுகி லிருந்தா னிருந்துழிப் புவிமக டொழுதாள்.

8 அப்பொழு திறைவ னவண்முக நோக்கி நினைந்ததென் னாரமு தனையாய்
செப்புதி யென்ன நித்தரே யாதி செகத்துள பல்லுயிர்த் தொகையி
லொப்பிலா யார்க்கு நல்லைநீ யென்ன வோங்குபா மாலைபூ மாலை
தப்பற வெமக்கு நல்குவோ ரிடத்திற் றங்குவேன் சந்ததந் தையல்.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

9 என்றுரைத் தருள மண்மகள் வணங்கி யேழையேன் றானுமப் பணியி
லொன்றிநின் றுன்னை யுகப்பிப்ப தன்றோ வுடம்பெடுத் துளபல னதனா
லின்றடியேன்போய்மண்மிசையதற்காயெடுக்கின்றேன்யாக்கையென்றிசைத்து
மன்றல்சேர் குழலா டுதித்துநின் றிறைஞ்ச மாயவன் மற்றவட் குரைப்பான்.

10 ஆயினம் பத்தன் வில்லிபுத் தூரி லரசறும் விட்டுணு சித்தன்
றூயவப் பணிசெய் தினிதமர் கின்றா னங்கவன் புதல்வியாய்த் தோன்றி
யேயுநின் மனத்தி னினைத்ததை முடித்தி யானுமத் தலத்துளே னென்றா
னாயக னதுகேட் டன்னமென் னடையா ளன்றென மகிழ்ந்திவை நவிலும்.

11 என்னையாண் முகிலே வில்லிபுத் தூர்முன் யாவராற் றோன்றிய ததையு
முன்னைநான் மறைக்கு மரியநீ யிதனுட் புகுந்தமை தன்னையு மொழிந்து
பின்னையத் தலத்தில் விட்டுணு சித்த னென்னுமப் பெரியவன் பணிக
டன்னையு முள்ள வாறுநீ கூறி யருளுதி தலைவவென் றிசைத்தாள்.

12 நன்றது கேட்டி மண்மிசை யணங்கே நாவல வன்பெருந் தீவிற்
றென்றிசை யரசன் பாண்டிய னென்போன் சிறந்தசெங் கோல்புரி நாட்டில்
வென்றிசேர் சேதுக் குமரிமா மலைய மேடத்தி னடுத்தவெற் பகத்தி
னின்றன பரியந் தத்தினிற் கீழ்பா னெறியிலோர் காதத்தி னளவில்.

13 மாதல மொன்றுண் டத்தலந் தனினும் வராகமா யுருவெடுத் துன்னை
வேதனை செய்த விரணியாக் கனைமுன் வென்றுபஃ றருமமு முனக்கே
யோதிடக் கேட்டன் றென்னைநீ நோக்கி யோங்குபல் லுயிர்களுக் குதவிக்
காதலோ டிருத்தி யீங்கென வுரைத்தாய் கண்ணினு மெனக்கினி யவளே.

14 மன்னுசீர் வராக கேத்திர மென்றே மறைபுகன் றிடும்படி பண்ணி
யுன்னுடன் வாழ்ந்தே னனந்தகற் பங்க ளதன்பிற கோருக முடிவி
லன்னமென் னடையா யடைவியாய்ப் பல்லாண் டமரரு முனிவரு மிங்கத்
துன்னுபல் விலங்கின் கணங்கள்சஞ் சரித்துத் தொழுதெழக் கிடந்தது முளதால்

வேறு.

15 அத்தலத்திற் பிருகுமாற் கண்டன்முத லருந்தவத்தி லன்பு பூண்ட
வுத்தமமா முனிக்கணங்க ணெடுங்கால மிருந்துலையாத் தவங்கள் பண்ணிச்
சித்தமொருப் படுத்தியென்பா லன்பிருத்தி யுறவாழ்ந்து செல்லு நாளி
லெத்தலமும் புடைத்தழிக்குங் கொடுங்கால நேமியென்றோ ரிரக்க மில்லான்.

16 கடுவினைய நிசாசரனா லீடுபெட்டுக் கலங்கிமுனிக் கணங்க ளிந்தத்
தொடுகடலிற் கிடந்தவெமைத் துயிலெழுப்பி யவன்செய்த துயரங் கூற
விடுவிடெனப் புள்ளேறி யக்கணத்தி லத்தலத்தில் விரைந்து சென்று
முடுகிடலு மட்டலவுண னமர்குறித்துச் சேனையொடென் னோடே மூண்டான்.

17 பூமியே சேனையொடும் புவனம்வெரு வுறப்பூண்டு பொருத கால
நேமியையென் னேமியினா னேமியிடை யறுத்திடவந் நீசன் சோரி
நாமினிதின் வலத்தேந்துஞ் சக்கரத்திற் றோய்ந்திடவந் நவைக டீர்ப்பான்
காமியமா னவமாயை கைவிட்டு வருணனுமக் களத்தி லெய்த.

18 ஆங்கவனைச் சக்கரத்தை நீராட்டி விடுதியென வவனா நக்கன்
றாங்குபுனற் கங்கையினை யமுனையினைச் சரஸ்வதியைத் தாணி மாதே
பாங்குடனே கொணர்ந்தாழி நீராட்ட வம்மூன்றும் படியி லாக
வோங்குதிரு முக்குளமென் றக்குளத்துக் கும்பர்திரு நாம மிட்டார்.

19 அத்தலத்தி னின்றவட லரக்கனா லலம்வந்தங் காவி சோர்ந்த
வுத்தமர்கள் பட்டதுயர்க் கிரங்கினா னோவியமே யுருக நஞ்சீர்ப்
பத்தர்களு முனிவர்களும் விண்ணவரும் வந்துதிருப் பல்லாண் டோதிச்
சித்தமுறப் பணிந்தேத்தி நின்றென்பா லொருவார்த்தை செப்பு கின்றார்.

20 ஆங்கவைதா னேதென்னி லன்னநடை மின்னிடையா யாதி நாதா
வோங்குதிற னேமியைநீ யெங்களுக்கா யுயிர்மாய்த்த துலகிற் றோன்றப்
பாங்குடனே பாற்கடலிற் கண்வளர்ந்த படிபோலிப் படிமேற் சேடன்
றாங்கிடவின் றித்தலத்திற் கண்வளர வேண்டுமென்றென் சரணந் தாழ்ந்தார்.

21 திரண்டவர்க ளவைமொழிய நன்றென்று நாணிந்தத் தேக நீள
மிரண்டுநா றாயிரத்தோ டைம்பதினா யிரமென்றே யிசைக்கப் பட்ட
வரண்டருஞ்சீ ரோசனைக ளளவிலடி முடியினையோ ரற்ப மாக்கி
முரண்டவிர்ந்த வனந்தனையு மதுக்களவாய்ச் செய்தந்த முனிவோர் காண.

22 அத்தலத்தி லொருகோயி லமைத்ததனுட் படுத்தனா னவைகண் டோங்கு
முத்தமர்கள் பாற்கடலிற் கிடந்ததிரு வுருப்பரப்பை யொடுக்கி மாய
னெத்திறத்தாற் கிடந்தனனென் றனைவியந்திட் டுளமுருகி யிரங்கி யிந்தச்
சித்திரந்தா னுனக்கல்லா லெவர்க்கியலு மென்றேத்தித் தெளிந்து நின்றே.

23 அண்டமெல்லாந் திருவுதரத் தொடுக்கியொரு பாலகனா மாக்கை தன்னைக்
கொண்டுவட தடத்திலைமேற் கிடந்ததெனக் கிடந்தனனக் குறியா லிந்தப்
புண்டரிகக் கண்ணனுக்கிங் குயர்வடவேச் சுரனென்றே பொருந்து நாமந்
தொண்டர்மகிழ்ந் தேத்தவென முனிக்கணங்கள்கட்டுரைத்தார்தொல்லைநாளில்.

24 அந்நகருக் குறுபெயரு நல்வடவேச் சுரபுரமென் றருளிப் பல்கா
லென்னைவலம் வந்தேத்தி யிமையவரு முனிவர்களு மிறைஞ்சிப் போனார்
மின்னனைய நுண்ணிடையா யெட்டெட்டுச் சதுரயுகம் வேத மேத்த
நின்னையுமக் கமலையையு மடிமுடியி லுறவிருத்தி நெடுநாள் வாழ்ந்தேன்.

25 தேனமரும் பூங்குழலா யெட்டெட்டுச் சதுரயுகஞ் சென்ற தற்பின்
வானவர்கண் மகிழ்ந்துரைத்த மாவடவேச் சுரபுரம்போய் மடங்கல் வாழுங்
கானகமாய்க் கரடிபுலி மதயானை பகையின்றிக் களித்து வாழப்
போனயுக மனந்தங்க ளாங்கதற்பி னதன்மருங்கோர் புத்தூர் தோன்றி.

26 கந்தநறும் பூங்குழலாய் வேதமுதற் பலகலையுங் கருத்தி லோரு
மந்தணர்கள் பலர்வாழ வதன்மருங்கே வேடர்குடி யனந்த மேற
நந்தலில்லா வத்தலத்தில் வேடர்களே வேந்தர்களாய் நண்ணி வாழ்ந்தார்
பந்தமில்லா தவர்குலத்தில் *வில்லிகண்டன் மல்லியென்னும் பாவை தன்பால்.

27 ஆங்கிருவ ருடன்பிறந்து பாலர்களாம் பருவம்போ யரசா ளுளி
லோங்கிடநாங் கண்டுயிலுங் கானகத்து வேட்டைக்கென் றொருநாட் போந்தார்
தேங்கமழ்பூங் குழலணங்கே யிருவர்களிற் பின்பிறந்த கண்டன் சென்று
தாங்கியகை வேலினொடு மவ்வனத்தில் வாழுமொரு சார்த்தூ லத்தை.

28 தொடர்ந்தோட வதுசெடியாய்த் தோன்றுமை கண்டுசுவ டெடுத்து வாழு
மிடந்தேடி யிவன்றிரிய வயர்பிலம்பி லிருந்திவனுக் கெதிரே பாய்ந்து
நடந்தேறி மார்பிடந்து செங்குருதி யுண்டுசெடி நண்ணுங் காலை
யுடன்றேடித் தம்பியெங்கே யென்றுவில்லி தடமெடுத்தங் கோடி வந்தான்.

வேறு.

29 வந்தவன் றம்பியி றந்தமை கண்டு மயங்கி மண்ணி
லெந்துணை போயினை யோவென வேங்கி யிரங்கி வீழ்ந்து
நந்தின ளுமென மோகம டைந்தன னுன தற்பின்
செந்துவர் வாய்மட மாமயி லேதுயில் செய்யும் வண்ணம்.

30 எண்ணிய வன்றுயில் போதினில் யானுமெ ழுந்துசென்று
புண்ணிய சிந்தைகொ டுத்தவ ளோடு புகல லுற்றே
னண்ணினை யென்பதி யின்றுபு துக்கிடி னுளு நாளும்
பண்ணிய தீவினை முற்றும றும்பிது பண்ணி யென்ன.

வேறு.

31 அப்பொழுது சொர்பனத்தி லாங்கவனு மென்னோடே யறைவ னீதீ
யிப்பொழுதென் பின்பிறந்தான் வேட்டைக்கு வந்தவனி றந்து விட்டான்
கைப்பொருளு மீகவேண்டு மித்தலத்தை நவமாகக் காண வேண்டி
லெப்படிநீ கற்பித்தா யப்படியே செய்கின்றே னிறைவா வென்றான்.

32 மாசிலா னிதுமொழிய மானனையா யவனோடு மறுத்துஞ் சொல்வ
னூசிலா வும்பின்யுய மெழுப்புவே னவன்குருதி தன்னை வாயாற்
கூசிடா துண்டிடுஞ்சார்த் தூலத்தை யிக்கணத்திற் கொல்வேன் மற்றப்
பேசரிய தனம்வேண்டி லதன்குகையிற் காட்டுகின்றேன் பெறுதி யென்ன.

33 செப்பினே னவன்கனவிற் றனுக்கென்ன வெழுந்திருந்தான் றேனே வில்லி
யிப்பொழுது கண்டகனு வீதென்கொ லதிசெயமென் றிருந்தா னக்க
ணொப்பரிய கண்டனுயி ருடன்மேவி யோடியெழுந் திருப்பக் கண்டு
தப்பிலது கண்டகனு முய்ந்தனனு மெனவவனைத் தழுவிக் கொண்டான்.

34 என்னுடைய கண்மணியே யெனத்தழுவி யணைத்தருகி லிருத்திக் கொண்டு
தன்னுடைய சொர்பனத்தில் யான்றனக்குப் பகர்ந்ததெல்லாந் தம்பிக் கோதி
மின்னிடையா யிருவர்களு மெழுந்திருந்தாங் கிருகவடு மேவ வில்லி
பின்னவனைக் கொன்றபுலி யம்போடுங் கிடப்பதனைப் பிரிந்து பார்த்தான்.

35 கண்டனையோ கண்டாவிப் புலியிறந்து கிடந்ததுமென் கனவு தன்னிற்
கொண்டல்வண்ணன் கட்டுரைத்த பரிசினையுமெனத்தம்பிக் குவந்து கூறிப்
புண்டரிகங் கிடந்தபெரும் பிலம்பிடையிற் கிடந்தொளிரும்பொருளைக்கண்டா
னுண்டிவிடந் தனிலெனக்குக் கனுக்காட்டியுயக்கொண்ட வொருவனென்ன.

வேறு.

36 அத்தலத்தி லெனைத்தேடித் திரிந்தனனாங் கவ்வனத்திற்
சித்தமுறக் கேட்டிமுன்னாட் சிறப்போடு மெனக்கினிய
பத்தர்கணஞ் சமைத்தளித்த கோயிலறப் பழகவதி
லுத்தமமாம் வடமுன்னு ளுயர்ந்தோங்கி நமைத்தாங்கும்

37 சேடன்முத னித்தர்களைத் திருமகளை யெனைநின்னை
யேடவிழ்தன் சினையாலு மெழுந்தோங்கு முயர்வாலும்
பீடுபெறப் பொதிந்துநிற்கும் பெரும்பூட்டி னதிசயத்தை
வேடனுங்கண் டெனதருளால் விரைந்தாங்கே யருகணைந்தான்.

38 வந்தவில்லி சிறந்தோங்கும் வடவதனின் றிறநோக்கி
யிந்தவிதி லுளன்கனவி லெமக்கருளு மிறைவனெனச்
சிந்தையுறப் பணிந்ததனை வலம்வரவோர் சினையூடே
முந்துறநம் மனந்தாழ்வான் பணுமகுட மூன்றிரண்டும்.

39 கண்டனன்மற் றதற்பின்னே கரியவிழிச் செங்கனிவா
யொணடொடியே யெனைக்கமலை தனையுன்னை யுற்றுறையுந்
தொண்டர்களைத் தனிததனியே யாலமுட்டிற் றுணைவனொடு
மண்டமுணட செவ்வாயா சரணமென்றெ னடிவீழ்ந்தான்.

40 உடனெழுந்தென் னவையவங்க ளுறநோக்கி யன்பினைந்து
படவரவத் தணையானே யெனப்பலகாற் பணிந்தேத்தி
மடமயிலே நான்கனவில் வகுத்தபணி செய்யுநம்மை
விடவடிக்க மாட்டாமல் விம்மிவிம்மி யிருந்திரங்கி.

41 அத்தலத்திற் சிலகடிகைப் போதிருந்த வடல்வில்லி
யித்தலத்தி லிவற்கிசையுந் திருக்கோயி லெடுத்திவற்காம்
பத்தர்களும் பலசனமும் பரிந்தினிதி னுறையவிதை
யுத்தமமாந் திருநகர மொன்றிடென வும்பர்தினம்.

42 கட்டுரைப்பக் குடியேற்றி யிடுவேனு னெனக்கருதி
வட்டமதி முகத்தணங்கே மாசிலா னத்தலத்தை
விட்டெழுந்து புத்தூரில் வேதியரை யழைத்தவரோ
டெட்டெளிவா லிவையனைத்து முரைத்ததனிற் குடியேற.

43 வேண்டுமென்றான் விறல்வில்லி வேதியர்க ளப்பதிக்கு
மாண்டகையெம் மூர்ப்பெயரே யாக்குதியே லதுசெய்வான்
கூண்டுடனே வருகின்றோ மென்னவுரைத்தார் குலமறையோர்
நீண்டபுக ழுறுவில்லி யதற்கிசைந்து நின்றவரை.

44 உடன்கொடுபோய்க் குடியேற்றி யுத்தமமா மப்பதிக்குத்
தடம்புடைசூழ் புத்தூர்ப்பேர் தன்பெரென் றிரண்டொன்றாய்த்
திடம்படவுள் ளுணர்ந்திதன்பேர் சீவிலிபுத் தூரென்றே
யடங்கிடவோ ரூர்க்கிருபே ராக்கினா னாரமுதே.

45 அல்லிநாண் மலர்வதனத் தணங்கேயந் நாட்டின்பேர்
மல்லிநா டெனத்தன்னைப் பெற்றாள்பேர் மகிழ்ந்திட்டான்
வில்லிநான் மறைவாணர் வேதத்தின் விதித்தநெறி
சொல்லினாற் றனையிறையும் பிரியாத துணைவனொடும்.

46 ஆங்கதற்பி னனந்தாழ்வான் றனையென்னை யழகோடு
மோங்கியசீர்த் திருமகளை நினைமற்றாங் குள்ளவரைப்
பாங்குடனே திறல்வில்லி பரிவோடுங் கோயின்முதற்
பூங்குழலாய் முனகண்ட தனமெடுத்துப் புதுக்குவித்தான்.

47 பதுமமுகத் தணங்கரசே பழகினதைப் புதுக்குதலாற்
புதுவையென்று மப்பதிக்கோர் பெயரிட்டான் புகழ்வில்லி
மதுமலர்ப்பூங் காக்கள்பல வைத்தனந்த மோடைகண்டா
னதுகிடப்பத் திருவிழா வாதியாய் மறையறைந்த.

வேறு.

48 வாரார் முலையாய்கேள் கீதங்கள் வாசியங்க
ளாரா தனைகட் களவிறந்த பல்வளங்க
ளோரோரு நாடகங்க ளேழுலகுங் கண்டுவப்பச்
சீரார் திறல்வில்லி மற்றெமக்குச் செய்வித்தான்.

49 அன்பினா லிவ்வாறு செய்துபல காலமவன்
றன்பினான் கண்டனொடு மத்தலத்திற் றான்வாழ்ந்து
பின்புரா மேவப் பிரமனான் காணாவென்
னின்பநா டெய்தினா னீரே ழுலகேத்த.

50 முன்னாள் நிகழ்ந்த கதையுமந்த மூதூர்க்குப்
பின்னாய பேரும் பிரமனா ரனைத்த
வந்நாணா மத்தலத்தின் மேவியது மாரணங்கே
யிந்நா ளுரைத்தோ மிதுவன்றிப் பட்டர்பிரான்.

51 செப்ப முடைய திருநகரிற் சென்றுதித்தங்
கொப்பிலான் பூமாலை பாமாலை யுண்மகிழ்வா
லெப்பொழுதுஞ் செய்துவரு மென்றேன்முன் னத்திரமுந்
தப்பறநீ கேளா யுரைக்கின்றேன் றார்குழலே.

52 மையத் துயிர்க ளனையுணர மாட்டாமற்
பொய்யி லுதித்தவமே போவதுகண் டவ்வுயிர்க்
னுய்யும்வகை யெண்ணியென தார்தியினை யோவியமே
மெய்யைவிளக் கென்றுரைத்து மேதினியின் மேவுவித்தேன்.

53 மற்றவனு மானியினிற் சோதிதனின் மண்ணின்முனாஞ்
சொற்றவில்லி புத்தூரிற் றொல்புகழ்சேர் வேதியரி
லுற்ற முகுந்தருக்கும் பற்புமைக்கு மோர்மகவாய்ச்
சிற்றிடையாய் தோன்றினான் றேசஞ் சிறந்தோங்க.

54 அஞ்சு வயதி லளவிறந்த பூம்பொழில்கள்
கஞ்சங் கழுநீர் கலித்திலங்கு மோடைபல
நெஞ்சு நெகிழ்ந்த நினைவோடுங் கண்டெமையே
தஞ்ச மெனநின்று பூமாலை சமைத்தளித்தான்.

55 அந்நாளிற் கூட னகராளு மீனவர்கோன்
மின்னார் முடிவேந்தன் வேதாந்தத் துட்பொருளைத்
தன்னா லறியச் சமையிகளைத் தான்கூட்டிப்
பொன்னார் கிழியொன்று தூக்கினான் பொற்றொடியே.

56 வேண்டிய வாறுசில வேதாந்தம் போற்கூறிக்
கூண்டணைந்து சென்றுகிழி கொள்வான் சமையிகடாந்
தீண்டி யறுக்குநெறி செல்லா தலமருநாட்
பாண்டியன்முன் னெய்திக் கிழியறுத்தான் பட்டர்பிரான்.

57 தண்டிபா வித்த சமையத்தார் தார்வேந்தன்
கண்டிருப்பச சென்றேநம் பத்தன் கழல்வீழ்ந்தார்
திண்டிறல்சேர் மன்னவனுந் தேவர்குழாம் போற்றிடவப்
பண்டிதனை யானைக் கழுத்திற் பரிந்தேற்றி.

58 கூடற் பதியை வலமாகக் கொண்டுவர
வாடற் பறவைமே லேறியவன் கண்டிடநா
னேடுற்ற தாரா யெதிர்செல்லப் பல்லாண்டைப்
பாடிப் பரிந்தெனக்குக் காப்பிட்டான் பட்டர்பிரான்.

59 ஆங்கதற்பின் வில்லிபுத்தூ ரெய்தியநா மாயரிடைப்
பாங்குடனே தோன்றி வளர்ந்திடுநாட் பாலகனா
யோங்கு பருவத் தசோதை யுரையாகப்
பூங்குழலாய் பாமாலை பாடியென்னைப் பூசித்தான்.

60 என்று மரங்க மெழின்மா லிருஞ்சோலைக்
குன்ற மிலங்குங் குளிர்வேங் கடப்பொருப்பு
நன்றிதருஞ் சீவில்லி புத்தூரிந் நான்கினிலு
மொன்றிய சிந்தையனா யோவியமே வாழ்கின்றேன்.

61 மடமயிலே வைகுந்த மாநகரி லிந்தப்
படவரவ மேந்தவளர் பாற்கடலிற் பண்டை
வடவிலையிற் பட்டன் மனமே யெனக்கா
மிடவகையாய்க் கொண்டாங்கே யெப்பொழுதும் வாழ்வேன்.

### வேறு.

62 என்றிறைவன் முன்னிகழ்ந்த கதையெலா மெடுத்தியம்ப
மன்றல்கமழ் பூங்குழலாண் மணமடந்தை யுணர்ந்துமனத்
தோன்றியசீ ரன்பினளா யுலகளந்த வொருமுதலைச்
சென்றுபணிந் துவந்தேத்திச் சீவில்லிபுத் தூர்நகரில்.

63 இப்பொழுதே யேகின்றேன் விடையருள்க விறைவவென
வொப்பரிய திருமாலு முவந்துவிடை கொடுத்தருளச்
செப்பமுடை யுலகேழுஞ் சீர்பெறவத் தேவன்மன
மப்பொழுதே பின்றொடர வமரர்குழா மடிபணிய.

64 வேதங்க டொழுதேத்த விரிஞ்சனா னகமகிழப்
பூதங்க டொழுதேத்தப் பூசுரர்க ளம்மடந்தை
பாதங்க டொழுதேத்தப் பட்டார்பிரான் குலம்வாழப்
போதங்கொ ணெறிவில்லி புத்தூரின் புகழோங்க.

65 அருந்தவத்தோ ரின்பமுற வசசுதற்கா ளாயுலகந்
திருந்தவரு முனிக்கணங்க டேசுபெறச் சித்தர்குழாம்
பொருந்துமது மலர்தூவிப் போகாத பிறவியறு
மருந்திதெனப் பணிந்தேத்த வசுக்கடிரு வடிபரவ.

66 எராரு நாரதனுந் தும்புருவு மிசைபாட
வாராரும் பூண்முலையாள் வளர்திருப்பாற் கடனீங்கிக்
கூராழி சங்கேந்துங் கொண்டலமர் புத்தூரிற்
சீராருந் திருவாடிப் பூரத்திற் சிறப்பினொடும்.

67 பட்டர்பிரான் பயிர்செய்து பலநாளும் பூவெடுக்கு
மட்டவிழ்பூம் பொழினந்தா வனத்திடையின் மதுப்பொங்க
விட்டிலங்கும் பசுந்துளப மென்பூட்டின் மேலான
சிட்டர்தொழப் புவிமடந்தை திருவவதா ரஞ்செய்தாள்.

### வேறு.

68 மண்ணோங் கினமா னிடரோங் கினசீர்
விண்ணோங் கினவே தியரோங் கினரேழ்
பண்ணோங் கினபா டல்களோங் கினதேர்
கண்ணோங் கினகற் றவரோங் கினரால்.

### வேறு.

69 மடிந்தது தீமை யாவி மயக்கிய மாயாக் கங்குல்
விடிந்தது ஞால மெங்கும் விளங்கின களங்க நீங்கி
யொடிந்தது வஞ்சர் வஞ்ச மோய்ந்தது கொடுமை யன்றே
படிந்தது வாது பேசும் பாதகச் சமைய மெல்லாம்.

### வேறு.

70 பொய்யி றந்தன போதம் பிறந்தன
மெய்சி றந்தன வேக மெலிந்தன
வைய மெய்தும் வருத்த மயக்கமுங்
கைக ழன்றன காம மிரிந்தன.

### வேறு.

71 அடைபட் டதுநீ வழியல் லலொடுந்
தடைபட் டதுசத் தமுதற் புலனே
யுடைபட் டதநீ தியிலோ டுமுளங்
கிடைபட் டதுகீழ் மையவா யவெலாம்.

72 வண்ணந் திகழ்மண் மகளும் வளர்வா
னண்ணுந் திருநந் தவனப் பொழிலும்
விண்ணின் றலைமே கமுமின் னுமெனு
வெண்ணுந் திறமா கியிலங் கினவே.

### வேறு.

73 வாவியி னலர்ந்த செந்தா மரைதிரு விளக்கே யாகக்
காவிகள் விழித்து நோக்கக் களிவண்டு கானம் பாட
மேவிய மயில்க ளாட விண்முகின் முழவி னார்ப்பத்
தேவியுந் தன்னை யீன்ற திருத்துழாய் மடியில் வாழ்ந்தாள்.

### வேறு.

74 இசசென்ற காலத் தெனையொப்பார் யார்புவிமா
னசசொன் றெடுத்துவரப் பெற்றேனென் றன்புருகி
வெசசென்ற வெந்நீரும் வேண்டாத் துழாயன்னை
பசசென்ற கொங்கைப் பசுநறவப் பாலளித்தாள்.

75 அன்னைத் துளப மருட்பால் சுரந்தளிப்பப்
பின்னைநின்ற பூமரங்க ளெல்லாம் பிராட்டிதனக்
கென்னபணி செய்வதினி யாமென் றெழின்மரங்க
டன்னையுறத் தூவ வரிக்குயில்க டாலாட்ட.

76 செய்ய பசுங்கிளிகள் சென்றுங் குரைபயிற்ற
மையலறு மன்னம் வளர்சிறகால் வந்தணைப்பப்
பையவிளந் தென்றல் பசுமேனி மேற்றடவ
வுய்யவருட் பூவை யுறங்கக் குறங்குதட்ட.

### வேறு.

77 பூவெலா மதுக்கள் சிந்தப் பொழிலெலாங் கனிகள் சிந்தக்
காவெலாம் பரந்த மந்தி கடுவனோ டெழுந்து செந்தே
னாவலா லருந்தி யாடி யன்னையின் றெமக்கு முன்போ
லேவலா னவைக ளுண்டேற் பணியென விறைஞ்சி யேத்த.

78 சாதிக ணெறியில் வைகச் சதுமறை யவர்க டங்கும்
வீதிக டோறு ஞான விழாவொலி மேவி யார்ப்ப
வேதிய கலைக்கு முன்னே யுணர்வுபேசன் றருளின் வைக
நீதிகள் யாவர் மாட்டு நிலைதிறம் பாது நிற்க.

வேறு.

79 கானில் வைகும் விலங்கினமுங் கரிச னீங்கி யருளெய்த
வானில் வைகுந் தேவர்களும் வந்து மலர்மா மழைபொழியத்
தேனுண் டளிசேர் பூமரத்திற் செறியும் வெறியும் பறவைகளு
மூனு முயிரு முடன்கரைய வுணருந் திருவெட் டெழுத்தோத.

வேறு.

80 மன்னுசரா சரமோங்க வானோங்க மறையோங்க
வன்னநடை மின்னிடையா ளிவ்வணண மாங்கமர
முன்னைவினைத் தொடர்வாலே முகுந்தனுர் திருமகளு
ரென்னுமெழிற் பட்டர்பிரா னெப்போதும் போலிறைக்கு.

வேறு.

81 கடிமலர் கொய்து நாளுங் கணிப்பரு மாலை கட்டி
யடிகளுக் களிப்ப ரென்று மாடிப்பூ ரத்தி னன்றும்
படிமுழு துலக முண்ட பரஞ்சுட ரருளி னாலே
விடிவதன் முன்னஞ் சென்று மென்மலர்க் காவைச சேர்ந்தார்.

82 ஆதவ னெழுந்த போதி லகலிடத திருள்க ளெல்லா
மோதுமக் காவில் வைகி யுறையுமற் றதுநா னந்நாட்
போதமாக் கதிர்கொள் பூமி நங்கையும் பொருந்த லாலே
சோதிமேற் சோதி யாகித் துலங்குத றொண்டர் கண்டார்.

வேறு.

83 அதுகண்டு மகிழ்ச்சி தாங்கி யந்தணர் கோனு நந்தா
மதுமலர்க் காவு ளெய்தித் வளரொளி மூல நாடிப்
புதுமதுப் பொங்கும் பசசைப் பசுந்துழாய்ப் பூட்டி னூடே
கதுமென விழியா னேக்கிக் கருணையின் கொழுந்தைக் கண்டார்.

84 கண்டவப் பொழுதே கண்ணு முள்ளமுங் களிப்பச் சென்ற
தொண்டரப் பெண்ணை நோக்கித் தோமறு மன்பு கூர்ந்திவ்
வொண்டொடி யார்கொ லென்ன வுரைத்தன ரதையென் மாசு
கொண்டபுன் சொல்லா னுயே னறிந்தவா கூற லுற்றேன்.

வேறு.

85 பூதாதி யெல்லாப் பொருட்கு மனைத்துயிர்க்கு
மாதாவோ விண்ணவர்கள் வைப்போ மறுவறுசீர்
வேதாந்தந் தானோ விரிஞ்சனரன் செய்தவமோ
வோதாச் சுகோததியின் வித்தோ வொளிமணியோ.

86 செந்தா மரைமலரிற் றோன்றிச் செகமெல்லாந்
தந்தாள வந்த திருமகளோ தாரணிசேர்
நந்தா விளக்கோ ஞானத்தி னற்கொழுந்தோ
சிந்தா மணியோ திருப்பாற் கடலமுதோ.

87 கற்றவர்கள் கண்ணின் மணியோ கலைமகளோ
வுற்றுணரு மன்ப ருயிரோ வுயிர்த்துணையோ
முற்றப் புவன முழுது முறையாலே
பெற்று வளர்க்கும் பெரும்பார் மடமகளோ.

88 புண்ணியமோ வேதப் பொருளோவிப் பூதலத்தோர்
நண்ணிமுனஞ் செய்த தவமோவென் னுகணையான்
கண்ணின்மணி தானோ கலைப்பொருளோ காரணத்தா
லெண்ணரிய நீதிக் கொழுந்தோ விளந்தளிரோ.

89 பாலோ செழுங்கனியோ தேனோநற் பாகவதர்
நூலோ வதன்பயனோ நொய்தினெனை யாண்டதிரு
மாலோ மடப்பிணையோ மாசறுசீர் வேதமொரு
நாலோ வதின்முதலோ நம்மா லறிவரிதால்.

90 எல்லா மறிவித்தெ னின்னுயிர்க்கு வாழ்வருளு
மல்லாண்ட திண்டோண் மணிவண்ணன் முன்பிலிந்த
வில்லார் நுதலாளைக் கொண்டுசென்று மேவினாற்
சொல்லா திரானெமக்கித் தோகைவர லாறென்ன.

91 எண்ணிப் பெரியாழ்வா ரின்னமுத மீதென்ன
மண்ணிற் கிடந்த மடமயிலைச் சென்றெடுத்துப்
பண்ணிற் சிறந்தமறை பாடப் பசுந்துளபக்
கண்ணிக் கருமுகிற்கோர் காணிக்கை யீதென்ன.

92 கொண்டுசென்ற வன்பர் வடபெருங் கோயிலர்முன்
றொண்டர்குழாஞ் சூழக் கிடத்தித் தொழுதேத்திப்
பண்டுலக முண்ட பரனேயிப் பாவைதனைக்
கண்டனனின் னந்தா வனத்தடியேன் கண்களிப்ப.

93 மஞ்சுலவுஞ் சோலை வளர்பூந் தடவனத்திற்
பஞ்சவர்க டோவிப் பச்சைப் பசுங்குழவி
தஞ்சமெவ ராகவந்து தங்கிற்று ரீன்றவர்கள்
முன்செய் வினையொன்று மறியேன் மொழிகவென.

94 வேதியர்கோன் கூறவில்லி புத்தூரிற் கண்டுயிலு
மாதி மணிவண்ணனாழ்வார் முகநோக்கி
யோதியிவ ளிந்நா ளுதித்த கருமத்தி
னீதியையும் பின்னை யுரைக்கின்றே னீயிவளை.

95 இப்போ தகத்திற் கொடுபோயிவ் வேந்திழையை
முப்போதும் போற்றி மகளா முறைபொருந்த
வெப்போதும் பேணி வளர்ப்பா யிவ்விள்பெயருஞ்
செப்போங்குங் கோதையெனச் செப்பென்றான் றேவர்பிரான்.

96 இன்றுநா மேறுஞ் சிவிகையினி லேற்றியிந்த
மன்றல் கமழு மடமயிலோ டாழ்வார்பின்
சென்றனைத்துக் கொத்துந் திரும்புகவென் றன்றிருமா
லன்றவர்க ளெல்லா மதற்கொருப்பட் டாங்கணைந்தார்.

97 மாணிக்க முத்து வயிர முதன்மணிகள்
பேணிப் பதித்தடங்காப் பேரொளியி னுல்விளங்கு
மாணிப்பொற் பல்லக்கி லாழ்வார் திருமகளை
வாணித திலநகையார் வாழ்த்தி மகிழ்ந்தேத்தி.

வேறு.

98 பேரிகை யெக்காளங் கொம்பொடு பேர்நவுரி
சீரிய நற்றாளஞ் சின்ன முழவதிர
வேரியல் பல்வளமு மெங்கணு மாகியெழக்
கூரிய மெய்ஞ்ஞானக் கொம்பினை யந்தணர்கோன்.

99 தன்றிரு மாளிகையிற் றாரணி யோர்கடொழ
வொன்றிய வன்பினொடு முத்தம னுள்புகவு
மன்றயன் மாளிகைவா ழாயிழை யார்மறையோ
சென்றனர் யாவிர்களு நின்றிவை செப்பினரால்.

வேறு.

100 தெள்ளமு தத்தைத் திரட்டித் திருமேனியைச செய்த தென்பார்
வெள்ளமி டத்திற் செனித்த மலர்மங்கையின் மிக்க தென்பா
ருள்ள முடைத்துக் களித்துச் சிலரோவியப் பாவை யென்பார்
மெள்ள வெடுத்துப் படுத்துச் சிலர்மென்முலை யூட்டு மென்பார்.

வேறு.

101 மாசறு சோதி நீதி வளரொளிக் கருணை யென்பா
ராசறு குணங்கண் மூன்றுங் கடந்தவ ளாவி யென்பார்
வாசவ னக்கன் மிக்க வானவர் செல்வ மென்பா
ரீசனுக் கினிய நீளை யெடுத்ததோர் வடிவ மென்பார்.

102 அண்டங்க ளனைத்தி னுள்ள வழகெலா மெடுத்துச் சேர்த்துப்
பூண்டார் கதத்துள் வேதன் பூமசை வுயுதத மதனபார்
கண்டிடி லயனுற் செய்யுங் கன்னியோ விவடா னென்பா
ருண்டுகொல் லுலகி லிந்த வுருவினுக் குவமை யென்பார்.

103 உலகிரு ளகற்ற வந்த வொண்சுடர் விளக்கி தென்பார்
பலகலை பகரும் வாக்கி னங்கையிப் பாவை யென்பா
ரலகிலா ஞான வாரி யாரமு தாகு மென்பார்
நிலமக ளிவளே யென்பார் நேமியா னுயிரி தென்பார்.

104 சனகனி லுதித்த சீதை பின்னுமித் தரணி மீதிப்
பணவனில் வந்து தோன்றும் படியிது வாகு மென்பார்
மனமகிழ்ந் தவளே யாகின் மற்றுநாம் வாழ்ந்தோ மென்பா
ரனகனு மாழ்வார்க் கீதை யறிவித்தா னிலனோ வென்பார்.

105 அன்னையு முளளோ விந்த வழுதினுக் கறைமி னென்பார்
முன்னைநான் மறையி னந்த முதற்பொருள் பெண்ணோ வென்பார்
தன்னையே நிகரா மாழ்வார் தவந்திரண் டதுகொ லென்பார்
மின்னையே யனையா டோன்றி மேதினி விளங்கிற் றென்பார்.

106 ஆசறு பெரியாழ் வார்த மகத்துக்குத் திரியு நெய்யுந்
தேசுறத் தேட வேண்டாந் திருவிளக் கிவளே போது
மாசறு புதுவை யுள்ள மானிடத் தவர்தம் வாழ்வைப்
பேசிலார் பெறுவா ரிந்தப் பெருநிலத் திடையி லென்பார்.

107 கற்றவ ருவமை சொல்ல வல்லரோ கமல நேரோ
சிற்றடி யிரண்டுக் கென்பார் சிறுவிரற் காண்மி னென்பா
ருற்றநற் புறந்தாள் கட்கிங் குவமையு முளதோ வென்பார்
பொற்றொடி கணைக்கால் கட்குப் பொருவிலை யுலகி லென்பார்.

108 இருகுறங் கெழிலை வேத மிசைக்கவும் வலதோ வென்பார்
பொருவரு மருங்கிற் கொப்பிப் பூதலத் துளதோ வென்பார்
ஒருபொரு ளுளதோ பேதை யுதரத்துக் குவமை யென்பார்
வருதன மிரண்டுந் தோன்று மார்பினுக் கிணையே தென்பார்.

109 வேயையோ தோளுக் கொப்பு விளம்புவ திவளுக் கென்பா
ராயசீர்க் கழுத்துக் கொப்பிங் கறைவதா ரந்தோ வென்பார்
தேயுமா மதியோ விந்தத் திருமுகந் தனக்கொப் பென்பார்
வாய்தனக் கிணையுங் கூற வல்லரோ மனித ரென்பார்.

110 சீரிய பேதை மூக்குக் கிணையெது செப்பு மென்பார்
கூரிய விழிகட் கொப்புக் குவலயத் துளதோ வென்பா
ரோரியல் வள்ளை யொப்போ விருகுழை யிணைகட் கென்பார்
நேரிய பிறையோ மாதி னெற்றியை நிகர்ப்ப தென்பார்.

111 கருங்குழ றனக்கோ ரொப்புக் காட்டவு முளதோ வென்பார்
பெருந்திரு மங்கை யிந்தப் பெண்ணினுக் கிணையோ வென்பார்
திருந்தின் மாற் கன்றி யார்க்கித் திருமண மேற்கு மென்பா
ரருந்தவ முனமிப் புத்தூர் செய்ததற் களவே தென்பார்.

112 இப்படி சென்று கண்டா ரிவையிவை யெண்ணி வாழ்த்த
வொப்பறு கோதை பேதைப் பருவமா யொழுகி வாழ்ந்து
தப்பறவதனுக் கேற்ற வணிகலன் பலவுஞ் சாத்திச்
செப்பமாய் வளர்ந்து பின்னப் பெதும்பையாம் பருவஞ் சேர்ந்தாள்.

வேறு.

113 சீரார் கமலத் திருவடிக்குச் செம்பஞ்சு
மோரார் புறந்தாளி லிட்டிலங்கும் பொற்சிலம்பு
நேராக வங்குலிக டோறு நிரைநிரையே
போரா தமைத்துப் பிறங்கும் பணிபலவும்.

114 எண்ணிய நூபுரங்கண் மீதே யிசைந்திலங்கப்
பண்ணிய பாடகமும் பைம்பொ னொளிவீச
நண்ணி யதின்மேலே தண்டை நலந்திகழப்
புண்ணிய மாதினல்லார் பூட்டி யுவந்தனரால்.

115 உற்றார நோக்கி லுளதா யொளிர்மருங்கிற்
சிற்றாடை சாத்தித் திருமடிதா ரங்கமைத்துப்
பற்றா விடையிற் பசும்பொனரை ஞாணணிந்தார்
முற்றாக் கருணைக் கொழுந்தா முகிணகைக்கே.

116 தூயமலர்க் காந்தட் டுணைக்கா ததி லங்குலிகட்
காயதிரு வாழி யிலைச்சினைக ளன்னமனு
ளேயதிரு முன்கைக் கெழிற்சரிகள் சூடகங்கள்
வேயனைய தோள்கட்குந் தோள்வளைகள் விஞ்சொளிசேர்.

117 சீரமருங் கெசச மணிந்து திருக்களத்துக்
கேரமரும் பொற்பட்டக் காறை யிலங்கொளிசே
ராரம் பவள்நிரை யாணிப் பசும்பொன்மணி
வாரமரும் பூண்முலையார் மண்மகட்குச் சூட்டினர்.

118 செய்யகனி வாயுந் திருப்புன் குறுநகையுந்
துய்ய குமிழிற் றுலங்குந் திருமூக்கு
மையமரும் வேல்விழியும் வார்காதும் பொற்றோடும்
வெய்யவொளி வீசி விளங்குதிருக் கொப்பினையும்.

119 வட்ட மதிமுகத்தில் வார்புருவப் பொற்சிலையூ
டிட்டதிரு மண்காப்பினையார் பிறைநுதன்மேன்
மட்டு மலிகுழலிற் சூழியமும் வாழ்திருவும்
பட்டந் திருப்பூப் பரிளை பலவணிந்தார்.

120 ஆழிநீர் வண்ண னருளாற் பெரியாழ்வார்
வாழியருட் கோதையெனு மங்கலச சாதனத்தா
லேழுலகு மீன்றா ளெழுந்து நடைப்பயின்று
தோழியர்க ளோடுவிளை யாடத் தொடங்கினள்

### வேறு.

121 அந்நாளிற் பரமபத்தி தலையெடுத்தாங் கலைக்கிடந்த
பொன்னாழிக் கையாற்குப் புகுந்துபணி செய்துவருந்
தன்னாவித் தாதையைப்போற் றக்கபணி தான்செய்வான்
பன்னாளு மலர்க்காவிற் பட்டர்பிரா னுடனடந்தே.

122 சென்றுசிறுப் பொற்கும்பஞ் சிற்றிடைசசீ ராக்கலைமேன்
மன்றல்கமழ் மலர்க்கோதை வாசநறும் புனல்கோரிக்
குன்றெடுத்தா னிரைகாத்தான் மனமகிழக் கொண்டணைந்தவ
கன்றுமுதற் பயிர்க்குதகம் பரிமாறி யன்பினொடும்.

### வேறு.

123 சிலபகல் செல்லு நாளிற் சீரிய பெரியாழ் வாரும்
பலநறு மலருங் கொய்து பரிந்துபூ மாலை சேர்த்து
மலமறு மன்பி னோடும் வைத்துபா தானம் பண்ண
நலமுற வேகுங் காலை நாரண னருளிற் போந்த.

### வேறு.

124 பெண்ணிற் பொலிந்த வருட்கோதை பெருமாற் கமைத்த வித்தாமம்
விண்ணிற் றூமந் தனக்கிணையாய் வருமோ காண வேண்டுமென
நண்ணித் திருப்பூக் கூடையின்முன் ஞான மிக்கார் வைத்தநறுங்
கண்ணித் தொடரி லொன்றெடுத்து மூக்கில் வைத்துக் கந்தித்தாள்.

125 துய்ய வாச முறநோக்கித் தோகை நினையுந் துகளறுநம்
மையர் திருக்கை வாசியினா லான பணமீ தாதலினால்
வையத் துள்ள மலரெல்லா மென்னும் வானின் மலர்க்கிதுநஞ்
செய்ய கமலக் கண்ணற்குச் சேரா தென்னச் சிந்தித்தே.

### வேறு.

126 என்னுடைய கோதை மணமூட்டி யிலங்கைநகர்
முன்னடையச் செற்ற முதல்வர்தமச் கித்தாரைப்
பின்னளிப்பே னீதே பெறுநங் கயிங்கரிய
மன்னுமிறைக் கென்றுதிரு மாலை யனைத்தினையும்.

127 சீரார் திருக்குழன்மேல் வேய்ந்துதிருக் கண்ணாடி
யேரார் கிணற்றி னிழலி லெழினோக்கிப்
பாராநின் றண்மீண்டு பட்டர்பிரா னெய்திடுமுன்
றூராரக் கோதைமண மூட்டியவை தான்கழித்தே.

128 முன்ன மிருந்த தலத்தின் முறையாலே
மன்னுதிருப் பூக்கூடை யுள்ளமைத்து மாசிறந்த
வென்னமுதுக் கெப்போது மிப்பணிக ளன்போடு
நன்னெறியிற் செய்திடநாம் வேண்டுமென நன்குணர்ந்தே.

129 ஐயர்வரு முன்ன மகன்றிக் கயிங்கரியஞ்
செய்ய வுலகிற் செனித்தபலம் பெற்றதென
மையமருங் கண்ணாண் மனமகிழ்ந்து மண்ணவர்க
ளுய்யச் சிலநாள்க ளுற்றிதுவே நற்றொழிலாய்.

130 பண்ணிவரத தாதை யறிவா லிவண்முடித்த
கண்ணியணை மெங்குங் கமழக் கொடுபோயிம்
மண்ணின் றுயர்நீர் வடபெருங் கோயிலர்மு
னண்ணி யவற்களிப்ப நாரணனு மாங்கதனால்.

131 ஒப்பரிய வின்பம் விளைய வுளமகிழ்ந்து
செப்பரிய கோதை மணத்திற் றிருவுளம்பூண்
டிப்படியோர் வாச முளதோவென் றின்பமுற்றா
னப்படியே நாள்கள் செலுமளவி லாங்கொருநாள்.

வேறு.

132 ஆசி லாத வடபெருங் கோயி லுடைய வசசுதனும்
பேச வரிய சீபூமிப் பிராட்டி யாழ்வார் பெண்மகளாய்
நேசத தாலே யவதரித்து நின்று தமக்கிப் பணிசெய்த
றேசத் தவர்கட் கறிவிக்க வேண்டு மென்னச சிந்தித்தான்.

133 'அந்த நாளி லருட்கோதை யணிந்து கழித்த திருத்தாரிற்
கந்த நாறு மயிரொன்று கூட வாழ்வார் கண்டப்பிச
சந்த மாருந் திருமார்பர் சாத்தும் படியர்ச சகர்கையின்
முந்த நாள்கள் போலளிப்ப முதிய மறையோ னதைவாங்கி.

134 கொண்டார் திருப்பூக் கூடையொடுமெ கோதை யமைத்த குளிர்வாசத
தண்டார் தன்னை யுறநோக்கிச சாத்தக் கொடுபோம் வேளையினிற்
கண்டான் றாமத் துறுமயிரைக் கலங்கு மறையோ னாழ்வீரின்
றுண்டாய்த் தீதோர் பிழையென்ன வோதித் தாமத துறுமயிரை.

135 காட்டித் தாம மனைத்தினையுங் கடிசேர் கோதை மணமிகவு
மூட்டி யிறைக்கு வரவிட்ட வுபாய மறியா தர்சசகனும்
வாட்டிப் போட்டீர் மயிர்வைத்தீர் மாலை யாகா திறைக்கிதுநம்
வீட்டிற் கொடுபோய்த் திருமாலை கொணர்க வென்றே விரைந்தென்ன

வேறு.

136 வாங்கிய மாலை யெல்லாம் வாசவிற் கூடை யோடும்
பாங்கற வெறியக் கண்ட பட்டனும் பதைத்து விம்மி
யேங்கியப் பொழுதே நந்த வனத்தினி லெய்திப் பூக்கொய்
தோங்குசீர் மாலை கட்டி யுடன்கொணர்ந் தளித்து நின்றே.

137 அர்சசகன் றனைப்பார்த் தின்றெம் மரும்பிழை பொறுத்தி யென்னக்
குச்சையுற் றாழ்வார் கூறக் கோதறு மறையோன் கூறும்
நச்சர வணையா னாணை நாளபல பலவுங் கண்டே
னிச்சலும் வாடி வாடி நிறங்குலைந் திருக்குந் தாமம்.

138 மாசிலா நிலையார் கட்டு மாலைக்கோர் மறுவுண் டாக்கிப்
பேசினா லபசா ரத்தைப் பெறுதுமென் றென்னைப் பேணிக்
கூசினேன் மயிருங் கண்டேன், கூறினேன் கோதி லாதீ
ரீசனார் சூடுந் தார்க்கின் றிதுவர லெதனா லென்னீ.

139 அந்தணன் கூற வாழ்வா ரன்றவர்நா னென்றும் போல
வந்தநாண் மலர்க ளெல்லாம் வகைதெரிந் தெடுத்துக் கட்டித்
தந்துநான் போவ திலலாற் றமியனே னிதற்கு மாசிங்
கெந்தவா றடைந்த தென்ன வறிந்திலே னிறைவ னாணை.

140 எனத்தொழு தாழ்வார் நிற்ப வெலையறு கலைகள் வல்லான்
மனத்தினில் வருந்த வேண்டா மேகிநன் மாலை பேணித்
தினத்தினங் கொணர்க வென்னச் செப்பியக் கொணர்ந்த வாசப்
புனத்துழாய்த் திருத்தா ரெல்லாம் புவனமுண் டவற்குச் சாத்தி.

141 அச்சுத னினைவு காணா தர்ச்சக ரகத்திற் போனார்
பச்சைமா முகிலின் செய்ய பதம்பணிந் தாழ்வார் பாடி
யிச்செய லெதனால் வந்த தெனத்திரு வுளத்தி லெண்ணி
மச்சணி மாட மோங்கு மாளிகை யதனுண் மன்னி.

142 வண்டமர் தாமஞ் சேர்த்து வைத்துநா மகன்ற காலை
யுண்டெனி லபாயங் காண்போ நாளையென் றுளத்தி லெண்ணி
யண்டமுண் டுமிழ்ந்தார் தொண்ட ரன்றையிற் பொழுதைப் போக்கிப்
பண்டுபோ லெழுந்து சென்று பனிமலர்க் காவி னுள்ளே.

வேறு.

143 வண்டூது முனமெய்தி மதுநிறைந்து கிண்கிணிவாய்க்
கொண்டோங்கு மலரெடுத்துக் கூடைநிறை வுறப்பெய்து
தண்டோடு மிருகூடை யொருதோளிற் றான்காவிப்
பண்டோங்குந் திருமாலைப் பணிப்பற்று மிடத்தெய்தி.

144 நாராய்ந்து கொண்டெடுத்து நறுமலரின் வகைதெரிந்து
சீராய்ந்த நறுங்கண்ணி சிறப்போடு முறைசேர்த்தங்
கோராருங் கூடையினி லெடுத்தமைத்தெப் போதும்போ
னேராக வொருதலத்தில் வைத்தொளித்து நின்றனரால்.

145 அப்போதி லருட்கோதை யறியாள்போ லையரிலை
யிப்போது மெனச்சென்றங் கிருந்ததிருத் தாரனைத்து
முப்போது மிறைக்கிடமா முகுந்தனார் முதல்காண
வெப்போதும் போற்றும மிருங்குழன்மேற் சூடினாள்.

146 கண்டுநின்ற பெரியாழ்வார் கடிதினெய்திக் கோபித்துக்
கொண்டுசெல்ல வருட்கோதை குழற்சேர்த்த திருத்தாரைப்
பண்டிருந்த கூடையினிற் பயத்தோடும் பனிமலர்க்கண்
விண்டருவி மிகப்பாய வைத்திரங்கி விம்மினாள்.

## வேறு.

147 சென்று கோபந் திருமுடிமேற் செறியச் செறிந்த வாழ்வாரு
மன்று பத்தி யழுதிரங்கு மக்களார் தம்மை யணைத்தம்மே
யொன்று மறியாய் போலுநீ யுலகத் தெவர்க ளிதுசெய்வா
ரின்று நீசெய் திட்டதெனத் திருமா லேற்ற மெலாமெடுத்து.

148 கூறித் தங்க ளெளிதராவுங் குலவு மறையி லெடுத்திசைத்தங்
காறி யிருத்தி யினியிவணஞ் செய்யே லஞ்ச லெனத்தேற்றி
வேறே தாமம் பலசமைத்து விரைந்து கொடுபோ யிறைக்களித்திட்
டேறுங் கருணை மனத்தினரா யுலக முண்டார் திருத்தொண்டர்.

149 மீண்டார் வேதக் கோன்சென்று விளங்கு மகம்புக் கின்றென்னை
யாண்டா டன்னை யருகிருத்தி யறத்தின் றிறங்கள் பலகூற
மாண்டா னிரவி குடதிசையின் மாணி யாகி மண்ணிரந்து
நீண்டான் கங்கு விடைசசென்று நிகரி லாத பெரியாழ்வார்.

## வேறு.

150 தம்மிடத்திற் சொற்பனத்திற் றங்கியிறை சாற்றியிடு
மெம்மிடத்திற் பாங்கா யினிதமரும் பூமடந்தை
யும்மிடத்திற் புத்திரியா யுற்பவித்தா ளன்போடு
நம்மிடத்திற் பூமாலை பாமாலை நன்னெறியால்.

151 சூடித் தரவழகார் சொற்றெரிந்து ளன்புருகிப்
பாடித் தரப்பிறந்தாள் பட்டர்பிரா னென்னலைநீ
வாடிற்று முன்னே மயிர்கிடந்த தின்றென்று
நாடிக் களைந்ததா ரெங்கேயத தார்நாளை.

152 நன்னலத்தாற் கொண்டுவந்து தந்தா லணிவோநா
னென்னலைநீ தந்த நெடுந்தாமங் கோதைமண
மன்னப் பெருதமையான் மற்ற தணிந்திலநா
மென்னவுரைத் தேகிப் புதுவையுள்ளோ ரெல்லோர்க்கும்.

153 இப்படியே யர்ச்சகர்க்கு மீச னருள்புரிந்து
செப்பரிய் கோயில் செறிந்தாங்கே கண்வளர
வப்புதுவை யுள்ளவரு மாழ்வாரு மர்ச்சகரு
மொப்பரியான் சன்னிதியி லுற்று ருதிப்பதன்முன்.

## வேறு.

154 அத்திறத் தமைந்து சென்று ரர்ச்சக ராகி மாயன்
றத்தமக் கிருளிற் சென்று சாற்றிய பரிசை யெல்லா
முத்தம ருணத்தான் மிக்கோங் கோங்குசீர்ப் பெரியாழ் வாராம்
பத்தரைக் குறித்துக் கோதை மகளென்று பகரே லென்ன.

---

[155 முதல் 165 வரையிலுள்ள செய்யுட்க ளிறந்துவிட்டனபோலும். எமக்குக் கிடைத்த நான்கு பிரதிகளில் ஒன்றிலாவது இவை காணப்படவில்லை. 165-வது செய்யுளில், 'மலர்ப் பூங்கோதை - முன்போல நம்மக்கொன் றெண்ணுதே முப்பொழுதும்' என்ற மூன்றுவது அடியின் ஒருபகுதியும் நான்காவது அடியும் காணப்படுகின்றன.]

166 ஆதரவாற் போற்றி யரங்க நகர்க்கிடந்த
மாதவனார் தேவியென்ன மாமனத்து ளூற்றெண்ணி
வேதக்கோ னன்போடும் வாழ்ந்தானம் மெல்லியலு
மாதக்கோர் போற்ற வளர்ந்தருளு மந்நாளில்.

வே று.

167 சீரமர் பெரியாழ் வார்தந் திருமக ளாத லாலும
பார்மக ளாத லாலும் பவளவாய்க் கருங்கட் டோகை
யோரியற் கோதை யாக்கை யிறைப்போதைக் கிறைப்போ தாங்கே
மூரிய பரம பத்திக் கொழுந்தொடு மெழுந்து தோன்ற

வே று.

168 நாரா யணனை யனுபவிக்கும் பருவம் வந்து நண்ணிடவக்
காரார் முகிலிற் றிருமேனி கணகால் செவ்வாய் கரங்களிவை
யோரார் கமலம் போலுமெழி லீச னிடத்தி லெழுங்காதல்
வாரா நிற்ப மானிடவற் கெனிற்றன் வாழா மதிதோன்ற.

169 சேலைத் தேடிக் காணுதே குழையைச் சீறுஞ் சினவிழியாள்
பாலைத் தேடிக் காணுதே பாகைக் காதும் பணிமொழியாள்
கோலைத் தேடிக் காணுதே குழைந்து வளைந்த கொழுந்தென்ன
மாலைத் தேடிக் காணுதே வாடிக் கோடு மனத்தினளாய்.

170 மண்ணிற் புத்தூர் நகருறையு மாலைக் கூடி வளர்துமென
வெண்ணி லர்ச்சா வவதார மதனு லிசையா னிவனென்னப்
பெண்ணிற் சிறந்த வருட்கோதை பெருக வருந்தித் துன்புற்றங்
குண்ணெக் குருகி யவ்வூரி லுறையு நெறிசே ருத்தமரில்.

171 அந்த ணாளர் மங்கையரி லறிவிற் சிறந்தோர் தமைக்கூவி
முந்தை நாள்க டமிலிந்த முளரிக் கண்ண னொடுங்கூடி
யிந்த வுலகின் மடவார்க ளிருந்த துண்டே லியம்புமெனச்
சிந்தை யார நினைந்தவர்க டிருமா லவதா ரந்தன்னில்.

172 சீரார் நந்த கோன்மகனுந் திருவாய்ப் பாடி மடந்தையரு
நேரார் பருவத் தொன்றாகி நின்று கூடி யளவளவி
யோரார் யமுனைப் போரற்றி லிறங்கிக் குளித்து விளையாட
வாரார் முலையார் துகிலெல்லா மாயன் வாரிக் குருந்தேறி.

173 அன்பிற் கலந்து விளையாடி யாசில் காதன் மிகப்பெருகித்
துன்புக் கிடமா மெனவெண்ணிச் சுருதி நாத னகன்றிடவோர்
பொன்புக் கிலங்குந் தடம்பொழிலிற் புகுந்து மறையப் புலம்பிமிகப்
பின்பங் கவனைக் காணுதே கலங்கி மிகவும் பேதித்தார்.

## வேறு.

174 எல்லையில் காத லோடங் கிருந்தன மடவா ரெல்லாம்
புல்லிய கண்ண னெங்கே போயின னென்று நாடி
யெல்லியும் பகலாய்த் தேடி யிளைத்தனர் மீண்டு முன்னஞ்
சொல்லிய பொழிலிற் கூடி யவன்றுணை துணிந்து செய்த.

175 படியைநாஞ் செய்யிற் றுன்பம் பாதியு மகலு மென்ன
வடிவுடை யொருத்தி தன்னைக் காரியாய் வகுத்து மற்றோர்
துடியிடை தன்னைக் கண்ண னாக்கியத் தொழில்கள் முற்றும்
விடிவத னளவுஞ் செய்து விடிந்தபி னவனைக் கண்டார்.

176 ஆங்கவர் தம்மிற் கூடி யானிரை மேய்த்துக் குன்றந்
தாங்கிய தாதி யாகக் கண்ணனத் தையலார்பாற்
பாங்குடன் களித்து வாழ்ந்த பரிசெலாம் பகர்ந்தார் கோதை
யேங்கினா ளன்று கூடப் பெற்றிலேன் யானு மென்ன.

177 தேனமர் குழற்பூங் கோதை தேவகி தனைய னோடே
நானுமோ ராய்ப்பெ ணாகி நலமனு பவிக்கு நோன்பை
யானவக் காலத் தப்பா னோற்றிலே னதனா லன்றே
போனதக் கண்ண னல்க மடந்தையர் பொருந்து மின்பம்.

178 நமையொரு பொருட்டா யின்னு நானிலத் துறுவா னேகொ
லுமையொரு பாகன் காணா வொருநீர் வண்ண னம்மா
வமைவுற விருந்தங் கண்ணுந் தாகாச மீன்றின் பார்போற்
சமைவுறக் கழிந்த காலந் தன்னையிச சித்த றன்னில்.

179 நந்தகோன் புதல்வன் முன்ன நற்றிரட் பசுவின் பின்னே
வந்தகாற் சுவடுங் கல்லின் மாரிக்கன் றெடுத்த குன்று
மந்தமில் குணத்தின் மிக்க வாய்ச்சிய ரோடுங் கூடிச்
சிந்தனை களிப்ப வாடுஞ் சீரிய யமுனை நீரும்.

180 உண்டெனி லின்றே யேகி யோரிடத் திராதே சென்று
கண்டுநங் கண்ணு னோக்கிக் காதனோய் தீர்வ மென்ன
வண்டமர் குழற்பூங் கோதை மனத்தினி னினைந்தாண் மான்மேற்
கொண்டபே ராசை வெள்ளக் கொழுஞ்சுழி யதனுட் பட்டே.

## வேறு.

181 கையுங் காலும் வழங்காதே கன்னி போக றவிர்ந்தந்தோ
செய்யும் வகையென் சீதைக்குத் தேற்றங் கொடுத்தல் சிலையவதி
னையும் பின்னைப் பிராட்டிக்கு மவதி யேறு தழுவுதனு
னுய்யும் வகைக்கோ ரிலக்குளதோ வூழி சென்று மெனவோய்ந்தாள்.

## வேறு.

182 அத்திறங் கண்டு முன்னே யாங்கவ டன்க்குக் கண்ணன்
மெய்த்திறங் கூறி வைகும் வேதியர் குலத்தின் மாத
ரித்திறம் வருந்தி யன்னே யெம்பிரா னணைய முன்னாட்
சித்திர வுருவி லாயர் மகளிர்செய் ததுவுங் கேளாய்.

183 என்றன ரெழுந்து கோதை யியம்பிடு மென்ன நின்றாள்
மன்றல்சேர் குழலாய் கேட்டி மாசிலாய்ப் பாடி தன்னி
லொன்றிய பஞ்ச லக்கங் குடிய்தி லுவந்து வாழு
மன்றதிற் கண்ணற் கொத்த பருவமா யளவி லாத.

184 மங்கையர் மாய னோடே மாசறக் கலந்து வாழ
வங்கது கண்ட வண்ட ரமலனம் மரபுக் கெல்லாம்
பங்கமே வருத்து மென்னப் பைந்தொடி யார்க டம்மைத்
தங்களிற் கூடி யெண்ணித் தத்துவன் காணா வண்ணம்.

185 மலமறு குணத்தி னாளே மங்கையர் வருத்த மெய்த
நிலவறை பலவுஞ் செய்தாங் கிருத்தினர் நேமிக் கஞ்சிச்
சிலபகல் கடக்க வந்தச சேயிழை யார்க ளெல்லா
முலகமுண் டவனைக் கூடு முபாயமே தென்ன வெண்ணி.

186 ஒன்றினு மவனைக் கூடி யுறுநெறிக் குபாயங் காணா
மன்றலங் குழலார் தம்மி லொருத்திமா மாய னம்பா
னின்றுயர் கருணை நல்கி னீணிலத் துய்வ மென்றா
ளன்றதை யுரைத்தி யென்ன வனைவரு மொழியச் சொல்வாள்.

187 செய்யமா மலர்க்கண் மாயன் றிருவருட் டிறத்தி னாலே
வையகத் துயிர்க ளெல்லா மழையற வாடு மாகி
லையன்மார் நம்மைக் கூவி வருணனோன் பனுட்டிப் பீரேற்
பெய்யுமா மழைக ணீங்கள் பிடிமினோன் பென்பா ராகில்.

188 கண்ணனை யந்த நோன்பின் கதையுணர்த் தென்பா ராகி
லுண்ணினை விருப்ப வம்மா லரிதென வுரைக்கு மாகிற்
றிண்ணமா யவர்கண் மாயன் றிருக்கையைப் பிடிப்பா ராகி
லெண்ணமற் றவனு மங்கே யிசைந்தது செய்யு மாகில்.

189 வாசமார் குழலி னாரே வாழுது மிவைய லாதே
பேசுமோ ருபாய மில்லைப் பெண்களா யிருந்தோ மெல்லா
மீசனை வேண்டிக் கொள்வே மிவணமாம் வண்ண மென்றாள்
மாசறு மனத்தி னார்கண் மற்றதற் கொருப்பட் டாங்கே.

## வேறு.

190 தங்க டங்கண் மனத்தினிற் கண்ணனைத் தாழ்வு தீர நினைந்திவை வேண்டினார்
அங்க ணொந்து வருந்தி மடந்தைய ராவி சோர வறிந்தருண் மாயனு
மங்கை மார்மிக நல்லதை யெண்ணினா னென்ன வெண்ணி மகிழ்ந்து மனத்துளே
யெங்கு மாமழை யின்றி வருத்தினா னீச னாயர்க ளின்ன லடைந்தனர்.

191 மண்ணின் மாமழை பெய்யு முபாயமென் மறைவ லாளர்கள் வாருமி தோதுமி
னெண்ணி யென்றன ராயர்க ளந்தண ரில்லை மாமழை யேயுறு கோளினாற்
பெண்ணின் மாசறு கன்னியர் தங்களைப் பெய்யு மாமழை நோன்பினைப் பீடுறப்
பண்ண வேசொலு மாரியுண் டென்றனர் பார்ப்பின் மிக்கவ ராயரப் பாவைமார்.

192 தம்மை மண்ணறை விட்டத் தலத்தினிற் றக்க நீதியிற் கூவிநன் மங்கைமீ [யின்
ரும்மை வேண்டின மாரியை நோக்கிநீ ரோங்கு நோன்பொன் றுறுதியிற் பண்ணி
றெம்மை யுய்யும் படிசெயு நோன்பினுக் கியற்றி வேண்டுவ தீர்ந்து கதைசொலுஞ்
செம்மை வல்லவ னந்தகோன் புத்திர னென்று செப்பி யுவனையுந் தேடியே.

193 மாட்டின் பின்றிரி கின்றமா மாயனை வருக வென்றோர் மனையினி லன்பொடுங்
கூட்டிக்கொணடுபோய்வைத்தபின்கொண்டலாற்கோதில்பூமிகுறையுற்றுவாடின
நாட்டின் மற்றது பெய்யவோர் நோன்பதை நாடி மங்கையர் பண்ணுவர் நீகதை
காட்டி வேணடுவ தீகுதி யென்றனர் காலி யாயர்கள் கண்ண னுரைத்திடும்.

194 கொண்ட னேன்புக் குறுங்கதை வல்லவர் குவல யத்தின் மிகவுளர் கூறுவர்
பண்டு மங்கைய ரோடெனைத் தூறுகள் பாணும் வீணும் பறையும் படியுளார்
கணடி ருப்பவிக் காரிகை யார்க்குநான் கதையு ணர்த்திற் கழறுத றிண்ணமா
மணடர் பேசிய காரிய மீங்கெனக் கல்ல னல்கு மடாதென் றெழுந்தனன்.

195 சென்று மாயவன் கையைப் பிடித்துநீ செய்ய வேண்டு மிவையென் றிரந்தன
ரன்ற தற்பினக் கண்ணனு மொப்பின ருயர் மற்றவ் வரிவையர் தங்களை
யின்று நீரிவன் றன்னொடு மேகிநோன் பியற்றும் வேண்டுவ தீவனிக் கண்ணனே
டொன்றி நோன்புக் கொருப்படு மென்றுபின் னேங்கு தம்பதி யுற்றன ராயர்கள்

வேறு.

196 முனைக்கொடுங் கோலி னுய ரகன்றபின் முதலொன் றாகி
யனைத்தினு நின்ற மாய னடிபணிந் தாயர் மாதர்
நினைததவை முடித்த கண்ண நீயினி யெம்மை விட்டோர்
தினைததனைப் பொழுது நீங்கே லென்றிவை செப்புங் காலை.

197 நந்தகோன் குமர னந்த நாரியர் தம்மை நோக்கி
முந்தைநா ணும்மைச சீறி முடித்திட நினைதத வாயர்
தந்தனர் வலிய மாரித் தவத்தொழி றன்னைப் போல
விந்தமா நிலத்தில் யார்கொ லிவ்வண முதவற் பாலார்.

198 என்றுவ்ரத் தவர்க ளோடு மியமுனைக் கரையி லெய்தி
மன்றலம் பொழிலிற் றென்றல் வரும்பெரும் பளிக்குப் பாறை
யொன்றிய புளினக் குன்றி லோவிய மனையா ரோடுஞ்
சென்றன னென்னை யாண்ட தேவகி பெற்ற சிங்கம்.

199 அருக்கனுய ருடபால் வெற்பி லுமர்ந்துதன் கிரண மெல்லாஞ்
சுருக்கினன் செக்கர் வானந் தோன்றின விசும்பின் மாரன்
செருக்கிளர் சிலையு மேந்தித் தென்றலந் தேரிற் றோன்ற
முருக்கிதழ்க் கனிவா யார்கண் முகுந்தனை வளைந்து கொண்டார்.

200 ஆங்கவர் மதன னாலே யஞ்சிய பரிசைக் கண்டு
வோங்குசீர் நந்த கோபன் றிருமக னொருத்திக் கோரோர்
பாங்குறு முருவாய்த் தானே பலபல வாய்த்தா னிற்பப்
பூங்குழ லாருந் தானும் புணர்ச்சியி லொருமை யாக.

201 எல்லையில் பேரா னந்தக் கடற்குடைந் தினிதி னாடிப்
புல்லிய மாத ராரைப் புணர்ச்சிபோ யுணர்ந்த தற்பி
னல்லியங் கண்ணு னோக்கி யரிவைமீர் நமக்கு மீதோ
ரெல்லியின் றிருந்த வாறே யெனவவர்க் கிதங்கள் கூறி.

202 கங்குலி லிவணங் கூடி யிருந்தமை யொருவர் காணி
லெங்குமாம் பேச்சுக் கேட்டோர் யாவரு மிகழ்வர் நீர்போ
யுங்கள்பே ரகத்துண் மன்னி யுதிப்பதன் முன்னே நாளை
யெங்கண்மா ளிகையில் வம்மி னெனவுரைத் திறைவன் போனான்.

203 மாயவன் போன தற்பின் மற்றவன் றன்னை நீங்கிப்
போயமர் வருத்தக் கூர்வாள் புகுந்துளத துயிரை யீர
வாயர்கண் மடவார் தத்த மகங்களின் முகங்கண் மாறிச
சேயிதழ்க் கமல மன்ன திருவடி வருந்தச சென்றே.

204 மெல்லணைப் படுக்கை மேவி வெதும்பினர் சிலவ ரீதோ
ரல்லலிற் பட்டேற் கென்ன வணையெனச் சிலவர் மண்ணி
லெல்லியிற் படுத்துந் துஞ்சார் சிலரிருந் திரங்கி வாடிப்
புல்லிய கங்கு லன்று புலருமுன் னெழுந்து மாதர்.

வேறு.

205 முற்பட்டா ரெழுந்திருந்து வைகறையின் முறைகூறிப்
பிற்பட்டார் தமையெழுப்பிப் பெருந்திரளோ டேகியவர்
கற்பட்ட திரடோளா னந்தகோன் கடைக்காவற்
சொற்பட்டான் றனையெழுப்பிச் சுருதிமுதல் வனையெழுப்பி.

206 தேன்புக்க துழாயலங்கற் றிருமாலே மார்கழியின்
நோன்புக்கு வேண்டுவன தந்துநோற் பித்திடுவான்
வான்புக்க புகழினாய் வருதியென வறையவிறை
தான்புக்கங் கவையீந்து தவக்குறையு முடித்துவந்தான்.

207 என்றனர் நன்றாய்த் தென்ன விலங்குசீ ரலங்கற் கோதை
யன்றவர் செயல்போ னம்மா லானவா செய்து நாமு
நின்றவெந் துயர மாற்றி நிமலனை யடைவோ மென்ன
வொன்றிய மகிழ்ச்சி யோடு மோங்குசீர் ஞானத் தாலே.

வேறு.

208 சீரார் புத்தூர் தனைச்சிறந்த திருவாய்ப் பாடி யாக்கியதி
லேரார் கின்ற வடபெருங் கோயிறன்னை யெம்பெருமான்
கூரார் வேற்கை நந்தகோன் றிருமா ளிகையாய்க் கொண்டதனு
ளாரா யணனை நப்பின்னை கேள்வ னாக்கி நாளும்.

வேறு.

209 அத்திரு நகரில் வைகு மரிவையர் தம்மை யாயர்
சித்திர மகளி ராக்கித் தனையுமங் கவரிற் சேர்ந்த
மெய்த்திறத் தாய்ப்பெ ணாக விளங்குசீர் மனத்துக் கொண்டா
ளுத்தம குணத்தாள் கொண்ட தியாதுமென் னுரைக்கே னந்தோ.

வேறு.

210 அப்படியே கோதைமன மாய்ப்பாடி தனைமருவிச்
செப்பரிய நறுங்கந்த திருமேனி யிடைமுடையு
மொப்பரிய விடையுடையு மிடைநடையு மொருகாலுந்
தப்பரிய விடைமொழியு மிடைமுடியுந் தானமா.

வேறு

211 ஆய்மக ளாய பின்பெ னச்சுத னணையும் வண்ண
மேயுநன் மடலொன் றேந்தி யிருப்பதோ கரும மன்றேற்
றூயநற் றவநாஞ் செய்யத துணிவதோ வெனச்சிந் தித்து
மாயவன் சுனையி லாதான் மடலினுற் பலியா தென்ன.

212 அவத்தொழி லகற்றித் தன்னை யடைந்தவ ருயிர்க ளெல்லாம்
பவக்கடல் கடக்கும் வண்ண பார்மிசைப் பிறந்து தோன்றுந்
துவர்த்தசெவ் வாயின் மிக்க தோகையிற் சிறந்த கோதை
தவத்தினி லொருப்பட் டாளன் றதனையுஞ் சாற்ற லுற்றும்.

213 மார்கழி நீரு மாயர் மடந்தையர் நோற்ற நோன்புஞ்
சீர்பெறு மேது வாகக் கண்ணனை யெழுப்பிச சென்றிய
கேர்பெறு முனக்குச் சேவ மாயவெ னுவி யீசா
பார்மிசை யொருவற் காகிப் பழுதிலே கழியா வண்ணம்.

214 அண்டனே சொரூப மாய வனுகூலம் பிறந்தெ ஞன்மாத்
தொண்டினிற் பதிய நான்செய் துகளறு தொழில்கள் செப்பி
விண்டலத் திலங்கு நீதி மேலவீ டளவு மேலோய்
தண்டமற் றடிமை நாளுந் தலைச்செயும் படிகள் செய்து.

215 காக்குதி யென்னை யென்னுங் கருத்தினுற் றனையோ ராய்ப்பெண்
ணுக்கியத் தோழி மார்க ளுடன்கலந் ததன்மேற் பூண்டாள்
வாக்கொடு மனமு மொன்ருய் மாயனை வணங்கி வாழும்
பாக்கியப் பட்டன் பெற்ற பனிமலர்ப் பைம்பொற் கோதை.

216 மார்கழித் திங்க ளென்ன வகுத்தருள் புரிந்த பாட்டிற்
சீருறு நோன்புக் கான திங்களுந் தினமுந் தந்து
நேர்பெறுங் காலந் தன்னைக் கொண்டாடி நேயத் தாலே
யேர்பெற வருளிச் செய்தா ளிடைக்குடி யிடைச்சி யாளுள்.

217 வையத்து வாழ்வீ ரென்னு மாசறு பனுவ றன்னை
யையுற வற்றார் செய்யுங் கிருத்தியா கிருத்தி யங்க
ளுய்வுற விவேகம் பண்ணி யுவந்தருள் புரிந்து செய்தாண்
மையமர் கருங்கட் செவ்வாய் மதிமுக மல்லி நாடி.

### வேறு.

218 ஓங்கி யுலக மெனக்கோலி யுரைத்த பாட்டி னேன்புக்குப்
பாங்கி னுடனே யனுமதிகள் பண்ணி னார்கள் பெறும்பலனை
யாங்கே தோன்ற வருள்செய்தா ளாழ்வார் மகளா யாய்மகளா
யேங்கு மிடைசசி மடவன்ன நடைச்சி யென்னு மெழிற்கோதை.

219 ஆழி லாழி மழைக்கண்ணில் வருண னெய்தி யடற்றிகிரி
யீசற் குவந்த கயிங்கரிய் மெனையு நியமித் திடுமினென
நேசத் துடனீ யிவ்வாறே பெய்க வென்ன நியமித்தாள்
வாசக் கமலத் தடம்புடைசூழ் மல்லி நாட்டில் வளர்கோதை.

220 ஆற்றன் மிக்க மாயனென வறைந்த பாட்டி லொருதோழி
தூற்று முலகி லெல்லாரு மறியப் பெருக்கித தொடங்கினாற்
சாற்று நோன்பு தலைக்கட்டித் தருதற் கின்று திடமுண்டோ
வேற்று முனஞ்செய் வினைதடுத்தா லென்றாந் துணிந்த விகையென்று

### வேறு.

221 அறையவே தாந்தம் போன வாயிழை யொருத்தி மின்னே
குறைவற வான்பா ளுங்க குடிப்பவ ரிடததிற் பித்த
முறையுமோ வதுபோ னும மடுததன தொழிலை யும்ப
ரிறைவனிற் செய்ய முன்னை வினையெலா மிரியு மென்றாள்.

222 ஆதலா லிதற்கு நாமு மன்னிய மென்ன வுன்னிக்
காதலா னேற்கு நோன்பைக் கைவிடக் கடவோ மன்றென்
றோதிக்கீ ழுஞ்சு பாட்டாற் பிராப்பியத் தோடு மோங்கும்
பூதநா யகனைப் புல்லி யனுபவித தவனிற் பூணும்.

223 உரைக்குமே காந்த மான வுபகர ணங்கள் கொண்டு
நிறைத்தமேற் பத்துப் பாட்டா னிரைத்திரண் டேய்த்த கோவை
யிரைப்பற வனுப விக்கு மவர்களை யெழுப்பிப் பின்னும்
விரைக்கொள்பூந் துழாயான் போக மிகப்பெரி தாத லாலும்.

224 எலையறப் பெருகு மாற்றி விழிபவர் துணைக டேடி
நிலைபெறத் திரிதல் போலு மொருவரை யொருவர் நின்றே
யுலைவற வெழுப்பு கின்ற ரன்றியு முலக முண்ட
தலைவனை வணங்க லம்மா றமர்களை முன்னிட் டன்றி.

225 தொண்டர்கள் வணங்கா ரண்ணி லன்றியுந் துகளில் வீட்டிற்
பண்டுளா நித்தர் முத்தர் பரம்பர னனுப வத்தைக்
கண்டனு பவித்து வீழ்ந்தக் கடலிடை நீந்த லல்லா
லுண்டிதற் களவென் றுன்னி யுணர்ந்திடப் படாமை யாலும்.

226 மண்மிசை வைகு மாயர் மகளிர்க ளாத லாலு
மெண்ணிமுன் போக வாற்றி லிறங்குத லின்மை யாலு
நண்ணிநாம் பலருங் கூடி ஞானநா யகனைச் சேரு
முண்ணினை வோடுங் கூடி யொருவரை யொருவர் கூவி.

227 நின்றுற வெழுப்பு கின்ற நெறியினு லுரைத்தாள் கோதை
யன்றியும் புள்ளி லீச னனுபவ வுரிசை காணு
மன்றல்சேர் குழலா ளொன்னை மறந்துற வுறங்கு வாளைச
சென்றுற வெழுப்பு கின்றாள் சேடியர் தங்க ளோடும்.

228 கீசென வுரைத்த பாட்டிற் கேசவ னனுப வத்தை
வாசற வறிந்து தன்னை யயர்ந்துட னுறங்கு வாளைப்
பேசுபல் குறியுஞ் சொல்லி யெழுப்பினாள் பிறைசேர் மாடத்
தேசமர் மதிள்சூழ்ந் தோங்குஞ் சீவிலி புத்தூ ரன்னம்.

229 எண்ணிய கீழ்வா னத்தி லேந்திழை யார்க ளெல்லா
நண்ணிவை கறையி லென்னை நாளைவந் தெழுப்ப வேண்டும்
புண்ணியக் கொழுந்தே யென்னப் புனிதனை வேண்டித் துஞ்சு
முண்ணினை வுடையா டன்னை யெழுப்பினா ளுலகை யீன்றாள்.

230 மன்னுதூ மணியின் மாயன் வந்தபோ வருகின் றானென்
றுன்னுத லுடையாள் கண்ண னுண்மகிழ் கலவி மிக்கா
டன்னுடை நலத்தி னாலே யனுதரித் தமளி சார்ந்த
மின்னிடை யொருத்தி தன்னை யெழுப்பினாள் விரக மிக்காள்.

வேறு.

231 தொடுத்த நோற்றுச சுவர்க்கத்திற் சுருதி முதல்வ னனுபவத்தின்
மடுத்த வுள்ளம் பரதவித்து வருந்தி யிரங்கி வாசமா
படுத்த வணையிற் றுயிலாத பாவை மார்கள் படும்பாடி
லெடுத்தன் றிலங்கை யுணடுமிழ்ந்த விறைவன் வருந்துமா படிசெய்து

232 கலவி நலத்தின் மாலுக்கு மாலைக் கொடுத்துக் கண்டுயிலு
மிலவ வாயா ளொருகொடியை யெழுப்பு கின்றா ளொண்டிசையும்
பலவுந் தெங்கும் வாழைகளுங் கமுகு நெருங்கும் பைம்பொழில்கள்
குலவும் புத்தூ ருறைவாற்குக் கோதை சூடிக் கொடுத்தமயில்.

வேறு.

233 உற்றசீர் மருவுங் கற்றி லொளிவளை யார்க ளோடுங்
குற்றமொன் றில்லா வாயர் குலக்கொழுந் தென்னு மாங்கோர்
பொற்றொடி முற்ற மெய்தி யெழுப்பினாள் புத்தூர் மன்னிக்
கற்றவ ரிதயப் போதிற் கலந்துவீற் றிருக்குங் கன்னி.

234 கனைத்திளி லிராமன் றன்னை யகத்தினும் புறத்துங் கண்டு
தினைத்துணை யளவு நீங்காச் சுமித்திரை சிங்க மென்ன
வினைத்தையு முண்ட கண்ண னருயிர்த் தோழ னாகு
மனைப்பெரு வளத்தின் மிக்கான் றங்கையோர் மங்கை தன்னை.

235 சென்றுற நின்று கூடுஞ் சேயிழை யார்க ளோடு
மன்றவள் வாசன் மன்னி யளவறு பனிநீர்த் துள்ளி
மன்றல்சேர் குழலிற் றோய வருத்தமுற் றழைத்தாள் செய்த
நன்றிகொன் றுழலு மென்னை நரகிடைப் புகாதீட் கொண்டாள்.

## வேறு.

236 புள்ளின் மானம் வன்கண்ணி லுண்டேற் றனியே பொருந்துமென
வுள்ளி மிகவு மனுதரித்தங் குறங்கு வாளை யுறக்கூவிப்
பள்ளி கொள்ளேல் பிள்ளைகள்போய்ப் பாவைக் களத்திற் பதிந்தனர்நீ
கள்ளந் தவிர்ந்து கலந்திடென வுரைத்தாள் விரைத்தார்க்கனங்குழலாள்

237 உங்க டன்னி னோன்புக்கங் கொருப்பா டுற்ற வொளிவளைக்கை
மங்கை நல்லீர் தமைநென்னற் றானே யெழுப்ப வாய்பேசி
யங்கச் செய்கை மறந்துறங்கு மாய்ச்சி வெள்க வதைச்சொல்லிச்
சங்கத் துடனே புகுந்தெழுப்பி நின்றா டாமக் கனங்குழலாள்.

238 சீரா ரெல்லே யிளங்கிளியிற் றோழி மார்க டிரள்கண்டு
போரா னந்தம் பெறவெண்ணி நினைந்து கிடந்த பிறைநுதலை
வாரார் முலையா ரெல்லாரும் வந்தார் வந்து காணென்றா
னாரா யணனைத் தான்சூடுந் தாரா லுருக்கி னைவித்தாள்.

## வேறு.

239 எண்ணரிய நாயகனி லெல்லாரு முடன்கூடி
நண்ணரிய நந்தகோன் றிருவாச லினைநண்ணி
விண்ணியல்பி லவ்வாசல் காப்பவனை மெய்ஞ்ஞானக்
கண்ணிபுனை செழுங்கோதை யெழுப்பவவை காப்பவனும்.

240 சென்றவர்க டிறநோக்கித் திருக்கதவைத் திறந்திலங்கு
மன்றல்கமழ் குழன்மடவீர் வம்மினென வுள்புகுந்தங்
கன்றதனிற் கண்டுயிலு நந்தகோ னாதியுரை
நின்றறவன் றெழுப்பினா ளம்பரத்தி னெறிநின்றாள்.

241 அப்படிநின் றாயிழையா ளாங்கவரைத் துயிலெழுப்ப
வொப்பரியார் பேருறக்க மொழியாத படிநோக்கிச்
செப்பரிய நப்பின்னைத் திருமகளை யெழுப்பிநமக்
கிப்பொழுதிங் கிவண்முன்னா யீடேற வேண்டுமென.

## வேறு.

242 உரைக்கு முந்து மதகளிற்றி னவளை யெழுப்பி யொளிகிளர
நிரைத்த குத்து விளக்கென்னு நிகரில் பாட்டி லவள்விழித்து
விரைக்கொள் குழலார் தம்மையுள்ளே விடுப்ப நினைத்தாங் கெழுந்திருப்ப
விரைக்குங் கடலை யடைத்துவந்தா னிவள்சென் றவருக் கிதஞ்செயுமேல்.

## வேறு

243 முன்னிலை யிவளா மந்த முகிணைகை யாருக் கெல்லா
மென்னவே யவிகா ரத்தா ரிலங்குமோர் விகாரம் பண்ணி
யன்னவ ளெழாத வண்ண மணைத்திரு கரத்தால் வாசப்
பொன்னணி மார்பி னென்றுய்ப் பொருந்திடத் தழுவிக் கொள்ள.

244 ஆங்கவ ளெழாமை கண்ட வரிவைய ரதற்பின் முன்ன
மோங்கியே யுலகு முண்ட வொருவனை யெழுப்பிப் பின்னும்
பாங்கொடு மவனுந் தோன்றாப் படியுணர்ந் தென்செய் கோமா
னீங்கினி ... .... கிண்டு மறைவனை யெழுப்பும் வண்ணம்.

245 பின்னையை யெழுப்பி யந்தப் பெண்ணமு தத்தை நோக்கி
முன்னையா ரணங்கள் போற்று ...... .. ........ ..... .. .
. . . . .....யே யனையாய் கூறு மிலக்கென வேத நாலு
மன்னையே யனையா யென்ன வாங்கவ ளாதி யாய.

246 நந்தகோன் புதல்வன் றேவி மார்களாய் நயத்தின் மிக்க
பந்தனை விரலார் தம்மைப் பிரிந்துமுப் பத்து மூவர்ச
சந்தமார் பனுவ னன்னி லெழுப்பினு டனக்காட் செய்வோர்
சிந்தனை கோயி லாகத் திருந்தவீற் றிருக்குங் கோதை.

## வேறு.

247 எற்ற கலங்க டனிற்பின்னை யெழுந்து கதவு திறந்தவரிற்
றேற்ற மிகுந்த நயிசயித்தாற் சொல்லுந் தோகை மீரெனக்கிங்
கூற்ற மேதிங் குங்களிலே யொருத்தி யன்றே யாமுமவ
ஞற்றன் மிக்க குணம்பரவி யெழுப்ப வம்மி னெனவழைத்தே.

## வேறு

248 ஆங்கவர்க ளுடன்கூடி யச்சுதனை யன்பினெடும்
பாங்குடனே நின்றெழுப்பும் படிபகர்ந்தாள் பகர்ந்ததற்பி
னோங்கியசீ ரங்கண்மா ஞாலத்தி லொளிவிளையார்
தாங்கியுல குண்டுமிழ்ந்த தத்துவனை யுற்றிறைஞ்சி.

## வேறு.

249 ஆசை யாயு நயிச்சியத்தை முன்னிட் டுக்கொண் டனைத்துயிர்க்கு
மீச வெம்மைக் கைப்பற்றி யினிநீ கொள்ள வேண்டுமெனத்
தேசு பொலியக் கட்டுரைத்தாள் சீரார் வில்லி புத்தூரி
னேச மிகுந்த பெரியாழ்வார் மகளாய்த் தோன்று நேரிழையாள்.

250 மன்னு மாரி மலைமுழஞ்சின் மாய னணைமேற் கிடந்தவரை
யென்ன கருமம் வந்தமையென் றியம்பக் கேட்ட விடைமகளி
ருன்னுஞ் சிறுமைப் பராமுகமாய்க் கேட்கு மதிலே துளதின்ப
மின்னு நேமி நெடுமாலே யெங்கட் கமையா விரிவோங்கும்.

251 சீரார் சிங்கா தனந்தன்னிற் றிருவோ லக்க மாயிருந்து
வாரார் முலையார் பலர்கூடி வந்த கரும மென்னென்ன
வாராய்ந் தருள வேண்டுமென வுரைந்தாள் புத்தூ ரவதரித்திங்
கோரா ராடிப் பூரத்துக் கேற்றங் கொடுத்த வெழிற்கோதை.

## வே று.

252 அப்படியே விரும்பியவ ராங்குரைத்த படிசெய்வான்
செப்பரிய திருப்பள்ளி யறைநின்றுந் திருமகள்கோ
னொப்பரிய மண்டபத்தி லோரங்குமரி யணைமேவ
விப்படிமே னடந்தநடை யெழிலினைக்கு மிலங்கிழையார்.

## வே று.

253 அன்றிவ் வுகை மெனும்பாட்டி லாகி நாத னடந்திடப்பின்
சென்று திருமா னடந்தநடை யெழிலைக் கண்டு திருப்பல்லாண்
டென்று கூறிக் காப்பிட்ட பரிசை யன்பா லெடுத்திசைத்தா
ளொன்றி யுலகம் பதினான்கும் வணங்கப் புத்தூ ருறைகின்றாள்.

254 ஒருத்தி மகனி லம்மாய னேங்கு மரியா சனந்தன்னி
லருத்தி செய்தாங் கிருந்தருளி யாயர் மகளி ரின்றுங்கள்
கருத்தில் வேண்டும் பொருளேது கழறு மென்னக் கண்ணனொடும்
வருத்த மின்றி நின்றந்த மடவார் நீல மணிவண்ணா.

255 பண்டே நாங்கள் செய்தமைத்த பாவத் தொடர்கள் பற்பலவு
முண்டே யெனினு நீபோக்கி யருளியெங்க ளுயிருய்ய
வண்டேர் துழாயாய் கைப்பற்ற வேண்டு மென்ன வகுத்துரைத்தாள்
தொண்டே துணையாய்ப் பிறந்திருந்த வண்ட மனைத்துந் தொழநின்றாள்.

## வே று.

256 அத்திறத் தாயர் மகளிர்கண் மொழிய வச்சுத னதுசெய்தாங் கதற்பின்
மெய்த்திற மாலே மணிவண்ணன் றன்னின் மெல்லிய லார்களோ டுரைக்கு
மித்திறம் புகுந்து நீங்கணோற் கின்ற நோன்புக்கின் றென்னிடை வேண்டுஞ்
சித்திர நெறியி லுபகர ணங்க டம்மையுஞ் செப்புமி னென்ன.

257 ஆயர்கண் மகளி ராயினர் மாலே யாங்கதற் காயின சங்க
மேயுநற் பறையு மிலங்குபல் லாண்டை யிசையுட னறையவல் லவருந்
தூயமா விளக்குஞ் சுடர்நெடு கொடியுந் துகளின்மேற் கட்டியுந் தந்து
நேயமோ டெங்க ணோன்பினுக் கிரங்கி யருளுதி நீயென நிகழ்த்த.

258 இன்னவா றுரைத்த மடந்தையர் தங்கட் கெம்பிரா னியம்புவா னொப்பி
லன்னமென் னடையீர் சங்குக்கெம் பாஞ்ச சனியமு மாசறு பறைக்கு
முன்னமா மரையிற் கட்டிய பறையு முழங்குபல் லாண்டுக்கு முகுந்தன்
றன்னுடை மகனும் விளக்குக்கெம் பின்னைப் பிராட்டியுந் தயங்குசீர்க் கொடிக்கு.

259 தேசுடைக் கருடன் றனையுமேற் கட்டி தனக்கெம தரையினிற் சிறந்த
வாசறு பீதாம் பரத்தையுங் கொண்மி னென்றனன் மாயவ னவர்க
ளீசமற் றிவைகள் பலபல வேண்டு மென்றன ரிறைவனெம் போன்றார்
பேசுமே முலகிற் பலருள ராகிற் பெறுதிர்நீ ரிப்படிப் பலவும்.

260 என்றிறை பகர மடந்தையர் மொழிவார் யாவையுந் திருவயிற் றமைத்தே
யன்றொரா லிலையி லடங்கிடு நினக்கின் றருளுத லருமையன் றதனாற்
குன்றெடுத் துயர்ந்தாய் தருதியென் றறைந்தாள் கொடிநெடு மாடமா ளிகையிற்
றென்றல்வந் துலவுஞ் சீவிலி புத்தூர் நகருறை கின்றதே மொழியாள்.

261 அப்படி யிறைவ னருளிட நோற்றார் பெற்றபே றாயின வெல்லாஞ்
செப்பருங் கூடா ரென்பதோர் பாட்டிற் றெரிதர மொழிந்ததற் பின்னே
யொப்பிலாக் கறவை தன்னிலே யிறைவ னொளிதிகழ் மாமுக நோக்கி
யிப்படி யுள்ளா றறியநோன் பென்றோ ரேதுவிட் டெய்தினோ மெனகள்.

262 நினைவிலை யன்று நின்னுடை யருளா னேமிவா னளந்தநின் செய்ய
கனைகழற் குவந்த கயிங்கரி யங்கள் செய்யுமா கருதிவந் தணைந்தோ
முனைவனே யென்ன நயிச்சிய விருப்ப முன்னிலை யாகவன் றுரைத்தாள்
வினையெலாந் திரண்டோர் வடிவெனத் திரியும் வேட்கையே னுக்கையுள் ளமர்ந்
தாள்

## வேறு.

263 ஆங்கதற்பின் சிற்றஞ் சிறுகாலை யச்சுதனை
யோங்கியசீர்க் கயிங்கரியந் திருவுளத்துக் குவந்தபடி
பாங்குடனே யுரைதந்தெம்மைப் பண்கொள்வா யெனப்பகர்ந்து
பூங்கோதை தொழுதெடுத்த விரதத்தின் குறைமுடித்தாள்.

264 சீராரும் வங்கக் கடலிற் றிருப்பாவை
யேரா ரிசைத்தமிழை யின்பமுறக் கற்றுரைப்பா
ராரா யினும்வாழ்ந் தலர்கமலச் செல்வியொடு
நாரா யணன்றா ளடைவரென்றா ணன்னுதலாள்.

## வேறு.

265 இப்படியே பாவகத்தா லிடைமகளாய்த் திருப்பாவை
முப்பதையு முரைத்ததினு முகில்வணனெய் தாமையினாற்
செப்பரியாண் மிகக்கலங்கித் திருமொழிகள் பலபகர்ந்தா
ளப்பரிசு தனையடியே னறிந்தபடி யறைகின்றேன்.

266 கனங்குழையா டிரு மொழியின் முதற்பாட்டிற் காலபா
முணும்பிரித்துக் கூட்டிடினு முன்னிலையே வேண்டுகையான்
மனந்தனிலே நினைத்தந்த மாசிலா மயிலனையா
ளனங்கனையுஞ் சாமனையு மடிதொழுதீ தறைகின்றாள்.

### வே று.

267 உன்னை யும்பி தன்னைநோக்கி யுலகத் தவர்நோற் றுய்யுநெறி
மன்னு நோன்பை நோற்கின்றேன் வடவேங் கடத்தி லுறைபவனுக்
கென்னை விதித்துச சோலைமலை யிறைவ ரரங்கத் திணிதமர்வார்
தன்னை யிலக்கா யெனைக்கணையா யெய்தி யென்று டவமிக்காள்.

### வே று.

268 இந்த வாறு மன்ம தற்கி லக்க றைந்தி ரங்கியே
கந்த மேவு கோதை யுள்க லங்கல் கண்ட கண்ணனு
முந்தை நாளின் மூல மென்றி யானை மோக முற்றபோ
வந்த வாறு போல வந்து மங்கை முன்னின் மன்னினான்.

269 அற்ற முள்ளு ணர்ந்து மாட ணைத்து நின்ற மாயனை
யிற்றை நாளி ரங்க வந்தி டாமை யுன்னி யூடினா
ளுற்ற தோழி மார்க ளோடு கூடி யுண்ம கிழ்ச்சியாற்
சிற்றி லுற்றி ழைத்தி ருந்து தேவி னைதன் மாறினாள்.

270 அண்ட முண்டு மிழ்ந்த மாய னாசில் கோதை யூடலைக்
கண்டு வண்ட னுண்ம ணற்க லந்தி ழைத்த சிற்றிலைத்
தண்டி வந்து தாள்க ளால ழிப்ப மிக்க தையலுந்
தெண்டி ரைக்க டற்கி டந்த தேவ வெங்கள் சிற்றிலை.

271 ஏது வின்றி யின்ற ழிப்ப தேதி னாலி ருந்துளோ
மோது கைகண மெய்க னோவ வுற்றி ழைத்த சிற்றிலைப்
பூத நாத மேல ழித்தி டாதி ருத்தி யென்றுபூ
மாது கூற மாய னந்த வாச கம்பு ணர்ச்சியாய்.

272 ஏகி னானி ருங்க டற்கி டந்த மாய னெய்திய
மேக வண்ண னோடு கூடி மேவி டாத காதனோ
யாக மெங்கு மூளு காம வங்கி பொங்க மங்கையு
மோக மெய்தி மற்றை நாளோர் பொய்கை மேவி முன்புபோல்

273 சேடி மார்க ளோடு சென்று சீத வார்பு னற்படிந்
தாடி யந்த வங்கி வெப்ப கற்றும் வண்ண மெண்ணியே
மாடு நீள்கு ருந்து சூத மன்னு வீரவி மன்னினா
டோடு கூறை யிட்ட ணைந்த தோழி மார்க ளோடுமே.

274 பெரும்பு னற்ப டிந்து கோதை பெண்க ளோடு மாடிடக்
கருங்க டற்கி டந்த மால்கு டப்பி னெய்தி யாங்கவர்
மருங்கி லுற்ற கூறை முற்றும் வாரி வாரு நீரெனக்
குருந்த ணைந்தி லங்கு தோள்கு லுங்க நக்கி ருந்தனன்.

275 நக்கி ருந்த கண்ணன் மாமு கத்தை நாடி நங்கையும்
பக்க நின்ற பேர்கள் காணி லேது ரைப்பர் பண்ணவா
தக்க தன்று கூறை யின்று தந்து போதி நீயெனா
வெட்க முற்றி ருந்து மாலி ரங்குமா விளம்பினாள்.

276 கோதை கூறை யீதி யென்று கோம ளம்பொ ருந்தவே
யோது பாடல் பத்து மன்பொ டோத வோத வண்ணனும்
போது மீது மிக்க தோர்பு ணர்ச்சி யென்று பூந்துகி
லீது கொண்மி னென்ற ளித்தி றங்கி யங்க ணேகினான்.

277 மாய மாம யக்க னேக மாத ரோடு கோதையுந்
தூய வாடை சென்றெ டுத்து டுத்து வந்து சுந்தரன்
போய திக்கை நாடி நின்று பூவை வண்ண னின்னும்வந்
தோயு மென்ன தாவி யுய்ய வெய்து மேகொ லென்னவும்.

வேறு.

278 மாசறுநுண் மணற்பரப்பி யதைவட்டப் படவளைத்துத்
தேசுறுமென் காந்தளங்கைத் திருவிரலால் வலஞ்சுழித்துப்
பேசியவக் கூடலுளும் பெருஞ்சுழியாங் கொன்றமைத்திட
கீசனிலும் வரும்வாரா னெனுமிரண்டி லொன்றதனை.

வேறு.

279 அறிய வேண்டு மெனக்கருதி யலங்கற் கோதை யன்றந்தக்
குறியை நோக்கி யிவையிவைகள் கூறி நின்றாள் கோலநறும்
வெறிகொ டுளபத் திருத்தாரான் விளைத்த விரக முதிர்ச்சிமிகச்
செறிய மனமும் வாசகமுஞ் செயலு மழிந்த திருவனையாள்.

வேறு.

280 மாடு மேய்த்து வரிவளை யாய்ச்சிய
ரோடு கூடி யுலக மிறைஞ்சிட
நீடு மாலிருஞ் சோலையு ணின்றவன்
கூடு மாகினீ கூடிடு கூடலே.

281 பண்டு வானம் படியளந் தோங்கிய
தண்டு ழாய்முடித் தத்துவ னுத்தம
னண்டர் நாத னணியரங் கத்துறை
கொண்டல் கூடிடிற் கூடிடு கூடலே.

282 கன்று மேய்த்துக் கடுந்திறற் கஞ்சனை
யன்று மாய்த்தட லைவர்க டூதெனச்
சென்று சேனையைச் செற்றவென் வேங்கடக்
குன்று ளான்வரிற் கூடிடு கூடலே.

### வேறு.

283 இப்படியே யிரைந்து பாட்டுமெழிற் கூடலுடன்
செப்பியுறநைந்து திருமேனி யுண்மெலிந்து
வெப்பமுற்றுக் கூட லுரையாமை யால்வெதும்பி
யொப்பரிய கோதை குயிலோடுறவாடி

### வேறு.

284 அனங்கற் கிணங்கும் விருந்தா யணைந்து பிரிந்தவர் தம்மை
மனங்கலரைத தாவி யுருக்கி மாள மிழற்றுங் குயிலே
யெனங்கம் பசலை பொருந்த விருகையிற் சங்கமுங் கொண்டு
புனந்திகழ் காலிப்பின் போன பூவை வண்ணன் வரக்கூவாய்.

285 காரிருண் மையுங் கலங்கக் கன்னங் கறுத்த குயிலே
யாரினி யுனையல் லாதென் னுருயிர் காப்பவ ரந்தோ
பாரினிற் சிற்றி லழித்துப் பணிப்பட் டெடுத்தளித தேகிச
சீரிய வேங்கட மன்னுந் தேவர் பிரான்வரக் கூவாய்.

286 நல்லியற் கீதக குயிலே நாடோறு நாரியரா முன்னே
யல்லியந் தாமரைக் கண்ணு லருவினை யேனுயிர கொண்ட
மல்லுயர் தோண்முகில் வண்ணன் மாலிருஞ் சோலையுண் மன்னி
வில்லிபுத் தூரு ளுறையும் வித்தகன் றன்வரக் கூவாய்.

287 கீத மினிய குயிலே கிளிமொழி யாயற் சேரி
மாதரொல் லாரு நகைப்ப வல்வினை யேன்மனங் கொண்டு
சீதக் கமல மனைய திருக்கண வளர்பவர் போலே
யோது மரங்கத்தின் மன்னு முலகளந் தான்வரக் கூவாய.

288 என்றெடுத் திப்படி பத்து மியம்பி யிரவும் பகலுங்
குன்றெடுத் தானிரை காத்த கோவல னென்றென்று கூறி
மன்றல் கமழுந் திருத்தார் மாலுக்குச் சூடிக் கொடுத்தா
ளொன்றிய காதல்வெந் தீயி லுருகு மெழுகினை யொத்தாள்.

### வேறு.

289 இப்படி கோதைவ ருந்துதல் கண்டுளி ரங்கிய ரங்கநகர்க்
கெப்பொழு தும்மருண் மாரிபெய் மாமுகி லெய்தியி லங்கிழையா
டப்பற மாமண மேவுமுன் வாடலு டானென வப்பொழுதே
சொப்பன மன்னிம ணத்தொழின் முற்றும ளித்தனர் தோமறவே.

290 ஒண்டொடி கண்டமை முற்றும னத்துளு வந்துக ளிப்பினொடே
வண்டமர் கோதைய ராயின தோழியர் வம்மினெ னக்கனவிற்
கொண்டனி றத்தவர் வந்தருள் செய்தமை கூறினள் சேறுபடாப்
புண்டரி கத்திரு மாதனை யாள்புது வாபுரி மாமயிலே.

291 வாரண மாயிரம் வந்துநி ரைத்திட மாமுனி வோர்கடொழ
நாரண நம்பிந மிக்கருள் செய்யந டந்தமை கண்டுலகோர்
பூரண பொற்குட மாரண மந்திர மோடுபு ரிந்தழகார்
தோரண மாநகர் வீதிக டோறுநி ரைத்தனர் தோகையனீர்.

292 சீரிய மாமண நாளையெ ழுமறை தேர்மறை யோர்புகல
வேரியன் முத்தநி ரைத்தணி பந்தரி னென்கையின் முன்கையிலே
நேரிய நூல்கொடு காப்பணி வித்துநி ரைப்பிற கேதிரியுங்
காரிருள் வண்ணனெ னச்சுரர் கூறிய காளைபு குந்தெனையே.

293 அன்றுவி டிந்தபின் னல்வது வைத்தொழி லாயின வாயவெலா
மொன்றொழி யாமன்மு டித்தென தங்கையை யுத்தம நாரணனு
ரென்றுரை செய்தவர் பதியி னோடுமெ ழுந்தொரு நற்கரிமேற்
சென்றுவ லங்கொடு நன்னக ரிற்பொலி சிட்டர்கள் பட்டனுடன்.

294 மன்னிய வீதிக டோறும கிழ்ச்சிவ ழங்கிந டம்பயிலப்
பொன்னணி மாளிகை மேலியி லங்கிய பூவணை யிற்றிருமா
லென்னிரு கொங்கைபு ணர்ந்திட விற்றையி ராத்துயி லுங்கனவி
னன்னுத லீரிவை கண்டன னென்றன ணற்புது வைக்கிளியாள்.

வேறு.

295 பொங்கோதவண்ணர் பொருந்தி யனுபவித்த
லங்கோர் கனவி லதனை லருள்கோதை
செங்கோலக் கண்ணா திருவாய்ச் சுவைவாசஞ்
சங்கோடே தான்வினவிச் சாற்றினா ளோர்பதுர்.

296 இப்படியே சங்கோ டிருந்து வினவிநா
ளொப்பரிய வான்முகில்க ளோங்கியொழு யா[illegible]
செப்பரியா னமபாற் செறிகால மீதென்ன
வப்பொழுதிற் கோதை யணிமுகிலோ டோதுவாள்.

297 விண்ணூர்க் கூண்டேகு மேகங்கா ணீர்போ[illegible]
தண்ணா ருவித் தடவேங் கடமுடையென
கண்ணாளன் வந்திலனோ கட்டுரை[illegible] னென்றுமை[illegible]தா
டிண்ணார் மதில்புடைசூழ் சீவிலிபுத் தூருறைவாள்.

298 குன்ற மெடுத்தானை கொண்டலுடன் கேட்பவளை
யொன்று மறியம்பாமை கண்டே யொளிவளையா
ணின்று கலங்கியந்த நீல்முகிற்கணத்தைச்
சென்றுதிரு வேங்கடவற் கென்றுயரஞ் செப்புமென.

299 தூதுவிட மேகங்கள் சுந்தரத் தோளருக்கம்
மாதின் றுயர முரையாமை மாமறையா
யோது முலகி லுறப்பெய்து பேர்யழியக்
கோதற்ற கோதை கொடுந்துயரத் துள்ளழுந்தி.

300 முன்புதா தேவு முகில்பொழிந்த மாரியினா
லின்ப வுலகி லியாவுமுளைத் துற்பவிப்ப
வன்பதனாற் சோலை மலையழகர் மேனியையும்
பொன்பொருந்தும் வெண்ணகையுஞ் செவ்வாயும் போன்றதென.

301 பாராரும் பூவை மலரினையும் பாரமருஞ்
சீராரு முல்லை முகையினையுஞ் செப்பமுட
னோரார் நிலத்தூரு மிந்திரகோ பத்தினையு
நேராக வெண்ணி நினைந்துநைந்து வாடினாள்.

302 இந்தவகை யெண்ணி யெழிற்கோதை மாமாயன்
வந்து கலவா வருத்தத்தால் வாய்வெருவிச்
சிந்தை கலங்கித் திகைத்தாண் மனங்குளிரச்
சந்தத் தடம்பொழிலிற் றங்கி யினிதமர்ந்து.

303 காலை யெழுந்து கரியகுரு விக்கணங்கண்
மாலின் வரவை யுரைக்க மலர்க்கோதை
சோலை மலையமருஞ் சுந்தரத் தோளரெனும்
வேலைவண்ணர் நம்பால் வரும்வந்தால் வேண்டுமென.

304 தித்திப்பு மிக்க திருவடிசி லக்கார
மெத்தித் தடாநூறில் வெண்ணெயுமங் கவ்வளவும்
பத்திப் பரிசாறப் பரமனுக்கு வாய்நேர்ந்து
புத்திக்குத் தக்கவனைக் காட்செய்வேன் போதிலென.

305 செப்பினாள் செப்பியதிற் சீதரன்செல் லாமையினா
லப்பொழுதே வாடி யுருகி யலம்வந்திங்
கொப்பில்சிலம் பாறுடைய வுத்தமன்கை வில்லொலியு
முப்பொழுது மேத்தி முழங்குதிருச் சங்கொலியும்.

306 என்றுகேட் டுய்வே னியானென் றருகிருந்த
மன்றல் கமழு மலர்க்கோதை தோழியுட
னன்றுரைத்துப் பின்னீ துரைக்கின்றா ளாரணங்கே
சென்றிலங்கை செற்ற திருமா றிருவாக்கால்.

307 என்னை யடைந்தார்க ளெப்பிழைகள் செய்திடினும்
பின்னையவர் செய்த பிழைநோக்கே னாங்கவரென்
மன்னுமுயி ரென்றுரைத்தார் மன்னவனார் மாமகனா
ரன்னவுரை பொய்த்தாலு மாழ்வார் மகளாதல்.

308 பொய்யாதே தோழீ யெனப்புலம்பி நீண்டகன்ற
மையார் தடங்கண் மலர்க்கோதை கட்டுரைத்துச்
செய்யாள் பொருந்துந் திருமார்பர் தம்மைநா
னையாமல் வல்லபடி செய்து நமக்களிப்பாய்.

309. ஐயரெனக் கோதை யனைத்தினுள்ளு ணிற்பரைய
ருய்யுந் திறத்தா ருறுஞ்சீ ருபாயத்தார்
செய்யுந் திறத்தை மறந்துசில நாளிருப்பக்
கையமரு மாழியினா னங்கவைகள் கண்டிருந்தும்.

310 வந்துகல வாமன் மலர்க்கொடியை வாட்டினு
னெந்தவகை செய்தா லினியுய்வே னென்றிரங்கிக்
கந்தமலர்க் கோதை கலங்கிக் கருமுகிலா
மெந்தை யரங்க னெடுத்திட்ட விடர்க்கடலில்.

311 தங்கினு டாமுவக்குஞ் சங்குதனிற் றூயருக்குக்
கொங்கமருங் கோதைக் குவிமுலையா டானுரைப்பாள்
செங்கயல்கள் பாயுந் திருக்கா விரிமடுவே
லங்கண்வளர் கின்ற வரங்கர்செய்த மாமறமும்.

312 ஈங்கென் றுணிவினையு மெல்லீருங் காண்மினெனப்
பூங்குழலாள் விம்மி யரங்கன் பொருந்துமுன
மாங்கயுந்தா ரோடுலக மாக்கியவை காத்தனை
யோங்கியளந் தான்வளருந் தேசத்தி லுய்த்திடுமின்.

313 என்று பகர விருந்தா ரடாதவைக
ளின்றே மறப்பா ரெனவுரைப்ப வாங்கவர்க்கு
மன்றல் கமழு மலர்க்கோதை மானனையீ
ரொன்றுளது கேண்மினென வோது மிவையிவையே.

314 ஆசையுற்ற வென்னினைவுங் காணு தயலிருந்து
பேசுகின்ற தெல்லாம் பிறவியுறு மூங்கனுக்கு
மாசுமன்னும் வஞ்சச் செவிட னுரைமானுங்
கூசிப் பயனேது கொண்டுபோ வென்னையவன்.

315 மன்னுந் துவாரகையின் மாமதுரை மாநகரிற்
சின்னமுழங் காய்ப்பாடி தன்னிலெனைச் சேர்மினென
வன்னவர்கண் மானே யவன்குடிக்கு முன்குடிக்கு
மின்னனையாய் மாறுப் பழியா மெனவிலக்க.

316 அகிலவன் சாத்தும்பீ தாம்பரமு மான்பொடிய
மேகவண்ண னிட்ட வனமாலை வெண்ணணைசேர்
பாகிலினிய பவளவா யூறமுதந்
தோகைமீர் சீபாத தூளிமுதலாமிவைகள்.

317 எல்லா மணித்தவனை யென்பால் வரவழைத்து
மல்லாண்ட தோளானை வல்வினையேன் முன்னும்வகை
வில்லார் நுதன்மடவீ ரெண்ணுமின்க ளேவேறொன்றுஞ்
சொல்லா தகன்மினெனத் தோகைதுய ருற்றிரங்க.

# சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பிரபந்தம்.

318 இல்லாப் பொருளை யெமக்கீக வென்றலகைக்
கொல்லாமற் கொல்லுங் கொடுங்கோ லரசனைப்போற்
செல்லார் குழலாளைச் செப்பார் தனமிரண்டும்
வில்லா லிலங்கைநகர் செற்றவிறற் சேவகனை.

319 காட்டித்தா வென்னக் கனத்தெழுந்து சீர்பொருந்தப்
பூட்டியவா யீரப் புடைபரந்து மேனிதனை
வாட்டி வருந்த மணவாளன் வாராத
வீட்டத்தாற் கோதையினி யென்செய்வே னென்றவனை

320 உன்னித் திருமாலே யோடிவந்தித ஞருயிரை
மன்னிநா மெய்தும் வருத்தத்தை நீக்கலையே
லென்னுயிரின் றேக விடைதந் திடுகவெனப்
பன்னிமலர்க் கோதை பதைப்பொடுங்கிப் பூவணையில்.

321 தங்கினா ளக்கணத்திற் றூழா துலகளந்த
செங்கட் கரிய திருவரங்கர் வந்தவுடன்
கொங்கை குழைய வரிக்கோல் விழிசிவப்ப
யங்கங் குளிர வணைத்திடரை யாற்றினார்.

## வேறு.

322 அங்கவ னெய்துமுனம் பட்டவ ருந்துயரு
மோங்கிய மாமாய னுற்றபி னுள்ளமிகத்
தாங்கிய நல்வளமுந் தானல தப்பரிசைப்
பாங்குட னுற்றுணர்வோர் பார்மிசை யின்மையினால்.

323 ஒண்டொடி தன்னுணர்வி லோரிரு வோர்களுமாய்ப்
பண்டுரி ரைப்பிறகே போனப ரஞ்சுடரைக்
கண்டிலி ரோவெனவுங் கண்டன ஞமெனவு
மெண்டிசை யும்புகழு மின்னிசை பாடினளால்.

## வேறு.

324 இந்தவகை யனுபவித்தன் றியம்பியிடுந் திருமொழிகள்
சந்தமிகு மொருநூற்று நாற்பதையுந் தமிழ்விளங்கக்
கந்தமிகு மலர்க்கோதை கட்டுரைத்தா ளவைகற்றோர்
பந்தமறப் பரமபத மடைந்துய்யும் படிபாரில்.

## வேறு.

325 தேடிமறை காணாத செல்வி திருப் பாற்கடல்விட்
டாடிப்பூ ரத்தி லவதரித்துப் பூமாலை
சூடிக் கொடுத்துத் துணிந்தபடி பாமாலை
பாடிக் கொடுத்துப் பரன்கடனை நீக்கினாள்.

326 இப்படியே கோதை திருமொழிக ளாங்கியம்பி
யொப்பிறிரு மாலோ டுறச்சேர்ந் தனுபவித்துச
செப்பமுடன் வாழ்ந்து திருவரங்கத் தம்மானைத்
தப்பறநான் சென்றிறைஞ்ச வேண்டுமெனத் தானினைந்து.

327 ஆசில்பெரி யாழ்வாரை நோக்கியைய ரேயடியேன்
றேசுபொலி தென்னரங்கத் துள்ளே திருக்கண்வளர்
ரீசன் கழல்வணங்க வேகநினைந் தேனெனைநீர்
கூசாம லின்றே கொடுபோய் விடுமென்றாள்.

328 என்றவுரை கேட்ட வினையாண்ட பட்டர்பிரா
னன்றென் றுலகி னவைநீக்கக் கண்வளரு
மன்றல்கமழ் சென்னி வடபெருங் கோயிலர்மு
னன்றுசென்று நின்றீ தறைவா னரவணையாய்.

329 என்னுடைய கோதை யெழின்மடவார் நால்வர்களு
மன்னுந் திருவரங்க மாநகரிற் பாம்பணைமே
லுன்னுருவங் காண வுவந்தாளென் செய்வதெனப்
பன்னரிய வேதக்கோன் பட்டர்பிரான் கட்டுரைப்ப.

330 வண்டமருஞ் சோலை வடபெருங் கோயிலருந்
தண்டமிழ்நூல் வல்லிரத் தார்குழலைப் பல்லக்கிற்
கொண்டுபோய்த் தென்னரங்க மேவிக் குவலயங்க
ளுண்டுறங்கு நங்கோல முள்ளபடி கண்டிறைஞ்சி.

331 கோதையொடு நீயும் வருதியெனக் கோதில்லா
வேத முதல்வன் விடைகொடுப்ப வேதக்கோ
னேதவண்ணன் றன்னை யுளக்கமலத் துள்ளிருத்திக்
காதன்மக டங்குங் கனகமணி மாளிகையில்.

332 வந்தவளைப் பல்லக்கில் வைத்தடியார் தோழியர்கண்
முந்தை மறைவாணர் முனிவர் புடைசூழ
வந்தரத்தோர் பூமாரி பெய்ய வருடழைப்ப
நந்தா விளக்கனைய ஞானச் செழுங்கனிசேர்.

333 மாணிக்கப் பல்லக்கை மூடிமுன்ன மாகவிட்டுப்
பேணிப்பின் றூமோர் பெருஞ்சிவிகை மீதேறி
வாணித் திலநகைசேர் யாமிளார் முன்னேகப்
பூணித்த காவலர்கள் சூழ்ந்துபொதிந் தேகியிட.

334 வில்லார் புருவத்தாள் வேதக்கோன் பட்டனுடன்
மல்லாண்ட திண்டோண் மணிவண்ணனைக் கும்பிட்டு
செல்லார் பொழில்சூழ் திருமா லிருஞ்சோலை
நில்லாநின் றூனை நினைவாற் பணிந்தேகி.

335 அண்டர் புகழு மரங்க நகர்நோக்கிப்
புண்டரிகத் தாரோனும் பூங்குழலுஞ் செல்லவ்வி
லொண்டொடியாள் கோதையினைக் கோவகுதிருப் பல்லாண்டைப்
பண்டுரைத்த வேதக்கோன் பட்டர்பிரான் றன்னோடும்.

336 செப்புவா ளோர்வார்த்தை யையரே தென்னரங்க
ரொப்பில் சிகர மொளிதிகழுங் கோபுரங்க
ளெப்பொழுது தோற்று மெனக்கதனை நீர்நோக்கி
யப்பொழுதே கூறு மடியேனிப் பல்லக்கில்.

337 நின்றிறங்கி வானளவு நீண்டமதிட் கோபுரத்தைப்
பொன்றிகழ வோங்கும் பொருவில்விமா னந்தன்னை
யின்று பணிந்தே னிருகா னடையாகச்
சென்றரங்கந் தன்னைத் தெரிசிக்க வேண்டுமென.

338 ஓதினாள் கோதையவள் பின்சென் றுரைகேட்ட
வேதக்கோன் பட்டர்பிரான் மெல்லியலா ளோடேகி
மாதக்கோ ரேதக வரியரவிற் கண்டுயிலும்
பூதக்கோன் மன்னிவளர் பொன்னரங்கப் பொற்சிகரம்.

339 இன்றே தெரிகின்ற தேந்திழையே யென்றாழ்வார்
தென்னரும் பொன்னிநதித் தென்கரையிற் சென்றதற்பமை
சொன்னா ரதுமுன்னந் தோற்றியபோ சொல்லாமை
மின்னா ரிடையா ளடையான் மெலியுமென.

340 இந்தா தெரியு தெனப்புகன்ற வப்பொழுதே
நந்தா விளக்கனையாண் ஞானிகட்குங் காணவரிதா
யந்தாமப் பல்லக்கி னின்றேகி யப்பொழுதே
செந்தா மரைக்கட் டிருவரங்கர் சேவடியை.

341 சென்று பணிந்து திருமார்பின் மீதேறி
மன்றல் கமழு மலர்க்கோதை வீற்றிருந்தா
ளன்றிவளைப் பல்லக்கிற் சீபாதந் தாங்குமவர்
நின்றனர்க ளவ்வழியி னின்றார் நிலைநோக்கி.

342 என்னென்று பட்டர்பிரான் கூற விலங்கிழைபோய்
முன்னென்றச் சீபாதந் தாங்கு மவர்மொழிவார்
நின்னென்று நுண்ணிடையார் மேவுமிந்தப் பல்லக்குத்
தன்னென்று பாரந் தவிர்ந்தவட்டான் றங்கிடுதல்.

343 இன்மைபோ லெங்கட் கிருந்த தெனவியம்ப
நன்மைமிகு மாழ்வாரு நற்றாசை நீக்கியந்த
மென்மையுறு பல்லக்கின் மெல்லியலைக் காணாதே
தின்மையடைந் தேங்கேயென் சேயிழையென் றேங்கழுது.

344 சீரார் திருவரங்கர் செய்தகளை வீதென்னப்
பாரோ ரிறைஞ்சப் படிமீதிற் றுமோடி
யோரார் பொழில்சூ ழெழிலரங்கத் துட்கிடந்த
பேரா யிரமுடைய பெம்மானைச் சென்றிறைஞ்சி.

345 நின்றமுது விம்மி நெடுமாலே நீகவர்ந்திங்
கின்றடியேன் பெற்ற விலங்கிழையை யெங்கொளித்தீர்
நன்றடியே னும்மையென்று நம்பெருமா ளென்றிருந்தா
லொன்றும் பலமு மிதுவோ வுலகின்முனம்.

வேறு.

346 கல்லைப்பெண் ணாக்கிக் கவுதமனுக் களித்தோமே
நல்லமறை யோன்மக்க ணால்வரையு மளித்தோமே
யொல்லையினிற் கலையனைத்து மோதுவித்த தக்கணையாய்ச்
செல்வமிகுஞ் சாந்தீபன் றிருமகனை யளித்தோமே.

347 ஒருமகளே யடியேனுக் குலகறிய வுள்ளவளைத்
திருமகள்சேர் மணிமார்பா சேவிப்பக் கொடுபோந்தேன்
வரும்வழியி னீர்புகுந்து கள்வாணன் மாயத்தாற்
குருமணியே யொளித்தக்காற் குவலயத்திற் பல்லுயிர்க்கும்.

வேறு.

348 தென்னார் நதிசூழ் திருவரங்கர் காவலென
முன்னு ரணங்கண் மொழிய வடைந்தவர்க
ணின்னு லிடரெய்தி னேமியாய் நின்கீர்த்தி
யென்னு மடாதவையென் கோதையெங்கே யென்றிரங்க.

349 மஞ்சேர் பொழில்சூழ் மதிளரங்க ராழ்வானை
யஞ்சே லெனத்தன் றிருமார் பமர்ந்தருளும்
பஞ்சே ரடியாளைப் பாரென் றுடனளிப்ப
வுய்ஞ்சேனென் றுள்ளங் களிகூர்ந் துவப்பினொடும்

வேறு.

350 சீரமரும் பெரியாழ்வார் திருமகளார் தமைநோக்கி
யார்வமருங் களிகூர வருகணைத்து முடிதடவி
யேரமரு மரங்கத்தீ ரெல்லாரு மறியவிந்த
வாரமரும் பூண்முலையை யறைமுழங்கும் புத்தூரில்.

351 வந்துமணம் புணர்ந்திந்த மாதினொடு மத்தலத்திற்
சந்தமருந் தடம்புயத்தீர் தங்கியினி தமர்ந்தருளப்
பந்தமறப் பல்லுயிரும் பணிந்துருளும் படிகண்டு
சிந்தைகளிப் புறவடியேன் வணங்கினேந் தனன்றேவ.

352 இப்படிச் செய்தருள வேண்டுமென விறைதாளி
லொப்பரியான் பணிந்தேத்தப் பங்குனி யுத்திரத்தி
லப்படியே சீவில்லி புத்தூரி லண்டர்தொழத்
தப்பறநாம் வந்துமணம் புரிவோமித் தார்குழலை.

வேறு.

353 இன்னேநீ யிந்த விலங்கிழையைக் கொண்டேகித்
தன்னே ரனைய புதுவைநகர் தான்மருவி
மின்னே ரிடையாண் மணத்துக்கு வேண்டுவன
முன்னே யியற்றிடுக பட்ட னெனமொழிந்து.

வேறு.

இத்தலத் தனைத்துக் கொத்து மெழுந்துசென் றுகப்பி னோடு
மத்தலத் திவளை விட்டு வருகவென் றருளிச் செய்து
பத்தர்கட் கினியா னேறும் பல்லக்குங் கோதைக் கீந்தே
யுத்தமப் பெரியாழ் வார்க்கு மொளிவளர் சிவிகை நல்கி.

வேறு.

355 ஏகுமின்க ளினியென்ன வெழிலரங்க ரருள்செய்ய
மேகவண்ண சரணமென விருவர்களும் விழுந்திறைஞ்சி
யாகமுறத் திருவரங்கத் தமுதத்தை நிறைத்தருள்சேர்
பாகவதர் பலர்சூழப் பைந்தொடியார் புடைநெருங்க.

356 திருவரங்கந் திருப்பதியிற் சீர்மருவி வாழ்பவரும்
பெருவரங்கொண் டவதரித்த பெரியாழ்வார் திருமகட்குப்
பொருவொரங்க மெடுத்துளராம் பூவையரு முளரோவென்
றிருவரங்கம் பிரியாதே யிருப்பதுநம் விருப்பென்ன.

357 பின்செல்ல வமரர்குழாம் பிரசமலர் மழைபொழியப்
பொன்செல்லும் புகழரங்கப் பூசுரர்கண் மறைபுகல
மின்செல்லுந் துடியிடையார் திருவெண்சா மரைவீச
முன்செல்லு முழவோசை முகிலொலியின் மிகமுழங்க.

வேறு.

358 பேரிகை காளங் கொம்பு பெருந்தவின் மகுடந் தாளஞ்
சீரிய நவுரி யாதிச சிறந்தவாத் தியங்க ளார்ப்ப
நாரியர் வீணை வல்லோர் நாதகீ தங்கள் பாடக்
கூரிய கவிஞர் பாணர் குழாங்கள்பல் லாண்டு கூற.

வேறு.

359 அம்பரத்தின் முனிவர்குழா மணியணியே தொழுதேத்தத்
தும்புருவு நாரதனுஞ் சுருதிநெறி யிசைபாட
வம்பவிழுங் குழற்கோதை மணவாள ருகந்தளித்த
செம்பொன்மணிப் பல்லக்கி லெழுந்தனடென் றிசைநோக்கி.

## வேறு.

360 முத்திற் கோமே தகந்தன்னின் முழுநீ லத்தில் வயிரத்திற்
றுத்தி யிரவி னொளிமணியிற் றுலங்கும் பற்ப ராகத்திற்
றத்தித் தத்தி நிரைத்தெங்குந் தயங்கும் பணிகள் பெரியாழ்வார்
பத்திக் குடையு மிடையிடையே பவளக் கொடியு முடனிழற்ற.

## வேறு.

361 மன்னியசீர் மதிளரங்க மாநகரங் கடந்திரைக்கும்
பொன்னிவள நதிகடந்து புகழ்ச்சோழ னெல்லைவிட்டு
மின்னியெழும் வச்சிரக்கை விண்ணவர்கோன் விறன்மவுலிச்
சென்னிமிசை வளையெறிந்த தென்னவன்சீர் நாடணைந்தாள்.

362 மருவரிய திருவரங்க வளநகர்விட் டெழுந்தருளிப்
பொருவரிய சீவில்லி புத்தூரிற் புகுமளவு
திருமருங்குந் திருச்சின்ன மெடுத்திசைத்தா ராங்கவற்றி
னருவினையேன் சிறிதென்னா லறிந்தபடி யறைகின்றேன்.

## வேறு.

363 இருமா நிலத்தி னிடர்கெடும் வண்ண
மருவார் திருத்துழாய் மாதாவாய் மாசி
லருமா மறைதேரு மாழ்வார் மகளாய்த்
திருவாடிப் பூரத்திற் சென்மித்தாள் வந்தாள்.

364 தேடி மலர்க டெரிந்துதன் றேவற்கு
நாடித் தொடுத்த நறுந்தாரைக் கோதையிற்
சூடிக் கொடுத்தபின் சொற்றமிழ் தன்னையும்
பாடிக் கொடுத்தருள் பைந்தொடி வந்தாள்.

## வேறு.

365 மட்டவிழும் பொழில்புடைசூழ் மதுரை தன்னில்
வாதியரை யீடழித்து முறையி னந்த
மெட்டெழுத்தே யெனக்கூறி வேத நான்கு
மிருந்தபடி யெடுத்தோதி மன்னர் மன்னன்
கட்டியபொற் கிழியறுத்துத் திருப்பல் லாண்டைக்
கட்டுரைத்துக் கண்ணனுக்குக் காப்பிட் டேத்தும்
பட்டர்பிரான் றிருமகளார் வந்தார் வந்தார்
பாடவல்ல நாய்ச்சியார் வந்தார் வந்தார்.

366 காமனையுஞ் சாமனையுங் கருத்தா லுன்னிக்
கருதியசீர்த் தைத்திங்கள் கணித்த நோன்பின்
மாமருவும் வேங்கடவ னிலக்கா யென்னை
மலர்க்கணையாய்த் தொடுத்தெய்ய மதனனென்னப்
பாமருவுந் தமிழ்பத்து மிசையி னோடே
பட்டர்பிரான் கொண்டாட வருளிச் செய்த
தேமருவு மலர்க்கோதை வந்தாள் வந்தா
டிருப்பாவை பாடினாள் வந்தாள் வந்தாள்.

367 மற்றுநங்கா மங்கண்மாற் றென்றார் வந்தார்
மாமாலே மாமிதன் மகனா யுன்னைப்
பெற்றிலே னென்றருளிச் செய்தார் வந்தார்
பெரியாழ்வார் திருமகளார் வந்தார் வந்தார்
நற்றமிழ்சேர் நாமமா யிரமோர் பதி
னாரணனே நரனேநீ நாங்கள் செய்த
சிற்றில்சிதை யேலென்றார் வந்தார் வந்தார்
திருமாலை வழங்கினார் வந்தார் வந்தார்.

368 சீரிணங்கும் பொய்கைநறும் புனல்புக் காடச்
செங்கணமா றுகிலெடுத்துக் குருந்தி லேற
நாரணனே கூறையைநல் கிவ்வா றாகி
னாங்களினிப் பொய்கைக்கு வாரோ மென்று
பூரணனை யிரந்திறைஞ்சிப் பூம்பட் டேற்றுப்
பொருவரிய தமிழ்பத்து மருளிச் செய்த
வாரணங்க டொழுதேத்து மாண்டாள் வந்தா
ளணியரங்கர் திருமார்பி லமர்ந்தாள் வந்தாள்.

369 எடவிழ்பூ மாலிருஞ் சோலை நின்ற
வெழிலழகர் வேங்கடவ ரிலங்கு நீதி
மாடமிசை மதிதவழு மரங்க மன்னு
மணவாள னம்பாலே வருமோ வென்னச்
கூடல்வளைத் திருந்துகுறி பார்த்தோர் பத்துங்
கொழுந்தமிழா லருள்செய்து குலவு மல்லி
நாடமரு மாரணங்கு வந்தாள் வந்தாள்
ஞானமயச் செழுங்கோதை வந்தாள் வந்தாள்.

370 மன்னுபெரும் புகழாதி பத்தும் புத்தூர்
மலர்க்காவி லினிதமருங் குயிலை நோக்கி
யின்னிசைகள் மிகவல்லாய் கூட லொன்று
மியம்பாமை கண்டாயோ வென்று கூறிப்
பின்னதனை மாலிருஞ் சோலை நின்ற
பிரானைவரக் கூவுதியென் றருளிச் செய்த
வன்னநடை மின்னிடையார் வந்தார் வந்தா
ராழ்வார்தந் திருமகளார் வந்தார் வந்தார்.

371 நாரணனைக் காணாத வருத்த மெய்த
நம்பெருமாள் சொப்பனத்தி னுடனார் காண
வாரணமா யிரஞ்சூழ வந்து தன்னை
மணம்புணர்ந்த படியெல்லாம் வகுத்தோர் பத்திற்
சீரிணங்க வருள்செய்த செல்வி வந்தாள்
செங்கமலத் தடவயல்சூழ் மல்லி நாட்டி
னாரணங்கு வந்தாள்பூங் கோதை வந்தா
ளனைத்துயிர்க்கு மன்பருளி யாண்டாள் வந்தாள்.

372 செங்கோலக் கண்ணன்வாய்ச் சுவையின் வாசஞ்
செப்புதியெப் போதுமவன் கையின் மன்னி
யங்கோதும் வாயமுத முண்டு வைகு
மடலாழி வெண்சங்கே யென்றோர் பத்துஞ்
சங்கோடு கேட்டுவந்தாள் வந்தாள் வந்தாள்
சதுமறையோர் குலவிளக்காந் தையல் வந்தாள்
பொங்கோத வண்ணரிட மருங்கில் வைகும்
புவிமடந்தை வந்தாள்பூங் கோதை வந்தாள்.

373 மஞ்சினங்காள் வேங்கடவற் கென்று தாக
வான்மீதி லேகியவன் மயலிற் பட்டு
நஞ்சருந்துங் கெண்டையென வறிவு சோர்ந்து
நான்படுமித் துயரெல்லா நயந்து கூறிப்
பஞ்சவர்க டேனுரை கொண்டு மீளிற்
பாவியே னுயிர்பெறுவே னென்றோர் பத்துஞ்
செஞ்சொல்பெற வெடுத்துரைத்தார் வந்தார் வந்தார்
செவ்வியிற் சூடினார் வந்தார் வந்தார்.

சிந்துரச் செம்பொடியி லழகார் கோலத்
திருவுருவை நினைந்துபத்து மருளிச் செய்த
கந்தநறு மலர்க்கோதை வந்தாள் வந்தாள்
கார்க்கோடற் பூவாகிக் கருதும் பத்தி
னைந்தாவி யறச்சோர்ந்தாள் வந்தாள் வந்தா
ளேன்புக்கன் றுருப்பட்டு நோற்றாள் வந்தாள்
செந்துவர்வாய்ச் செங்கமல முகத்தாள் வந்தா
டிருமாலைப் பிரியாதாள் வந்தாள் வந்தாள்.

375 எண்ணியசீர்த் தாமுவக்குஞ் சங்க மாதி
யெழிறிகழு மொருபத்து மருளிச் செய்து
மண்ணினிடர் கெடப்பிறந்தாள் வந்தாள் வந்தாண்
மற்றிருந்தீர் கட்கென்ன வகுத்த பத்தி
னண்ணியமா றேசத்திற் கொடுபோ மென்ன
நாரியர்க ளுடனுரைத்த நங்கை வந்தாள்
கண்ணனெனுங் கருந்தெய்வந் தன்னிற் கூடிக்
கலவிநலத் துறவாழ்ந்து கலந்தாள் வந்தாள்.

வேறு.

376 ஆதி மூர்த்தி யுறக்கலந்த பின்பு மகிழ்ச்சி யடங்காமல்
வீதி யார வருவானை விருந்தா வனத்தே கண்டேனென்
றோதிக் களிக்கு மனைவந்தா ளுலக மேழுந் தொழுதேத்தச்
சோதி திகழு மதிமுகத்தாள் வந்தா டோகை மயில்வந்தாள்.

வேறு.

377 பங்கய முகமதி யெனமுதியோர் பரவிடு நலமுடை யவள்வந்தாள்
கொங்கலர் குழல்பொங் கியவஞ்சக் கோசலை திருமரு மகள்வந்தாள்
மங்கையர் குலமா மயில்வந்தாள் வாளென விளமா னெனமிளிருஞ்
செங்கயல் விழியனை யவள்வந்தா டேவகி திருமரு மகள்வந்தாள்

வேறு.

378 பொன்னவிர் பூணமுலை வந்தாள் பொருவறு புதுவைய தென்னு
நன்னக ருடையவள் வந்தா ணான்மறை பயில்பவள் வந்தா
ளன்னமென் னடையினள் வந்தா ளமுதெனு மொழியினள் வந்தாண்
மின்னெனு மிடையினள் வந்தாள் வேலெனும் விழியினள் வந்தாள்.

வேறு.

379 மதுமலர்க் குழன்மா மயில்வந்தாள் வாரிசூழ் புவிமா மயில்வந்தாள்
பதுமநற் றிருமங் கையினொக்க பாதந் தரியத் தினள்வந்தாண்
முதுமொழித் திருமா மொழிதந்தே முத்திறல் கியவுந் தமிவந்தாள்
புதுமதுப் பொழிகா வினமன்னும் புதுவையுற் றுறைபொற் றொடிவந்தாள்.

வேறு.

380 பரிபுரப் பதத்தி வந்தாள் பழமறைக் கிழத்தி வந்தாள்
சரிவளைக் கரத்தி வந்தா டடமுலைக் குடத்தி வந்தா
ளரிவரக் கருத்தி வந்தா ளனநடை திருத்தி வந்தாள்
சுரிவளைக் கழுத்தி வந்தா ளிணைவிழிப் பிணைச்சி வந்தாள்.

வேறு

381 வேதநா யகிவந்தாள் வேள்விநா யகிவந்தாள்
கோதைநா யகிவந்தாள் கோலநா யகிவந்தாள்
போதநா யகிவந்தாள் பூமிநா யகிவந்தா
ணாதநா யகிவந்தாள் ஞானநா யகிவந்தாள்.

வேறு.

382 என்றிசைக்குஞ் சின்னங்க ளெண்டிசையுங் கீழ்மேலு
மொன்றிவளா ரன்பின்ர்க ளுளங்குளிர வெடுத்தூதி
மன்றல்கமழ் வேங்கடத்தோன் சேனையொடு மற்றவள்பின்
சென்றுவழி நடத்தவெழிற் றிருவரங்க ரருள்சூழ

383 சீரார்மா லிருஞ்சோலை நின்றருளுந் தேவனு
ரேராருஞ் சேனையொடு மெதிர்ப்பவிஞ்சிட் டெதிர்சென்று
வாரார்பூண் முலைக்கோதை மாணிக்கப் பல்லக்கி
னேராய விடம்வலத்து முன்னுமணி நெருங்காமல்.

வேறு.

384 பிரம்படி கார ருகப் பெண்ணணங் கருகே யேக
சிரம்படிந் தமரர் தாழச் சித்தர்கள் சுற்ப கத்தின்
மரம்படு மலர்கள் சிந்த மறையவர் மறைகள் பாட
நரம்பொடு வீணை வல்லார் நவிலுமே ழிசைகள் பாட.

385 பல்லாண்டு பட்டன் பாடப் பறவைமே லிருந்து கேட்ட
மல்லாண்ட திண்டோ ளாதி மணிவண்ணன் சேனை யோடும்
வில்லாரு நுதலாள் பாங்கின் வெளிபட நடந்து சென்று
கல்லாரம் பிடித்த கையாள் கணகணே ராக வேக.

386 மாசறும வில்லி புத்தூர் வடபெருங் கோயி லாதி
யீசனு மவ்வூர் தன்னை யெழில்பெற வலங்க ரித்துங்
காசறு தோரணங்க ளணியணி பொருந்தக் கட்டித்
தேசுற வுடன்செல வார்க்குத் திருவிருந் தமைத்தவ் வூரில்.

387 உறைபவ ரனைவ ரோடு முவந்தெழுந் ததிரே செல்ல
நறைகமழ் கோதை யாகு ளானநா யகியார் வந்து
பிறைதவழ் மாட நீடு பேருட் புதுவை புக்கார்
முறைமுறை பணிந்து நிற்பா முதுதரு மடிக டாழ.

388 வேங்கடத் துறைவா ரன்றே மீண்டுதம் பதியிற் புக்கார்
பாங்குடன் கோதை யேகும் பல்லக்கின் முன்ன ராகி
வாங்குவித் துடனே மன்னு மாலிருஞ் சோலை யாரும்
பூங்குழ லருளி னாலே பொருந்துதம் பதியிற் புக்கார்.

389 மணிவண்ணர் சேனை யோடு மதுரைமா நகரம் புக்கா
ரணியணி நிரைத்து வந்த வரங்கனு ரனைத்துக் கொத்தும்
பணியணைப் படுத்தார் நல்கும் பயன்படு விருந்து முண்டு
பிணிபசி பிறவி யற்றார் பிரான்வள ரரங்கம் புக்கார்.

390 ஆசிலா மலர்ப்பூங் கோதை யரங்கர்நா மணைவோ மென்ற
மாசறு மனத்துக் கெண்ணி வகுத்தநாள் வரவு நோக்கித்
தேசுற விருந்தா ளாழ்வார் சிலபகல் செல்ல மாயன்
பேசிய மணநா ளுளை யென்மறை யவர்கள் பேச.

391 திருநக ரலங்கரிக்க திருமணங் காண வென்றே
வருபுவ னறிய யானைக் கழுத்தில்வள் ளுவனை யேற்றிப்
பெருமுர சறைக வென்னப் பெண்ணமு தத்தைப் பெற்ற
வருமறை யந்த ணாள னருளுவங் கறைந்தா னன்றே.

392 திருக்கலி யாண நாளை யெனசசெழு முரசு தட்டிப்
பெருக்கொலி யந்த ணாளர் பெருநலக் களிப்போ டோது
மிருக்கொலி வீதி யெங்கு மெழுந்தச் சோசை கேட்டோர்
நெருக்கொலி கடலு மஞ்ச நிறைந்தன வான மெல்லாம்.

393 நிலந்தரு வளங்க ளாலு நீணகர்ப் புதுவை தன்னைக்
குலந்தரு வளங்க ளாலுங் கொழுமறை வளங்க ளாலும்
புலந்தரு வளங்க ளாலும் பொதுவுறு வளங்க ளாலு
மலங்கரிக் கின்ற வாற்றை யறிந்தவா றறைய லுற்றேன்.

வேறு.

394 படவரவத் தணைக்கிடந்து பங்கயக்கண் வளர்ந்தருளும்
வடபெருங்கோ யிலர்கோயின் மணிமாட கோபுரங்க
ளிடவகைகண் மண்டபங்க ளெழிறிகழ வலங்கரித்துத்
தடவயல்சூழ் புத்தூரிற் சதுர்விளங்கும் வீதிதொறும்.

வேறு

395 ஆணிக் கனகப் பசும்பொன்னு மமரர்க் கிறங்க வமைத்துளவா
மேணித் திரள்கொ லெனக்கண்டோ ரியம்ப விலங்கு நிதநிலத்தின்
மாணிக் கத்தின் பவளத்தின் மாலை யாக்கி மறுவற்ற
சேணிற் பொலியுந் தோரணங்க ளூட்டி யிடையே சிறந்தோங்கும்.

வேறு.

396 இந்திர விமான மேகொ லன்றெனி லிரவி தேர்கொல்
சந்திர விமான மேகொ றமனிய மலைக ளோகொன்
மந்தர கிரிக ளோகொ லென்றுமண் ணவர்கள் கூற
வந்தர மளப்ப வோங்கு மணிநிலைத் தேர்கள் செய்தார்.

வேறு.

397 மின்னுமா மணிசேர மாடமா ளிகையில் விசும்புறத் தூக்கிய கொடிகள்
பொன்னிலுட் டவளைத் திருமணங் காணப் போதுமி னென்றழைப் பனபோன்
மன்னிநின் றூடத் தமனியக் கும்ப மலைமிசை மதியொளிர் கின்ற
தென்னலாம் படியே முனம்பகர் மாடத் தெழில்பெற வமைத்தன ரிலங்க.

வேறு.

398 காவண நகர மெங்கு மிட்டதிற் கவின்கொண் டோங்கு
மாவண விதானந் தூக்கி வளர்நகர்க் கழகு செய்தங்
காவண வீதி தோறு மணியணி வாழை வாசப்
பூவணக் கமுகு நாட்டிப் பூரண பொற்கும் பங்கள்.

399 அணியணி நிரைத்துப் பூம்பட் டாடைக ளதன்மேற் சுற்றி
மணியிணுந் தென்னங் காய்கள் வயங்குமாந் தளிருஞ் சேர்த்துக்
குணிகொணூன் மறையோர் மன்னர் குலத்துயர் நலத்தோ டோங்கும்
வணிகர்வே ளாளர் தத்தம் வாயில்க டோறும் வைத்தார்.

வேறு.

400 ஆணிக் கனக நெடுந்தூணி லாடை பொதிவா ரலங்கரிப்பார்
மாணிக் குறளாய் நிலங்கொண்டான் மணநா ளென்று வருமென்று
பேணிப் பகர்வீர் மறையவர்க ளென்பார் பெண்ணை வளர்த்தவர்க
ளுணி யிறைக்குச் சுருள்வைக்க நலத்தோர் பலன்க ளுடிடுவார்.

வேறு.

401 மஞ்சன மாடு வாரும் வரிவிழி யிணைக டம்மி
லஞ்சன மெழுது வாரு மம்மனை யாடு வாரும்
பஞ்சுக ளணிகின் றாரும் பரிபுரப் பதத்தி னேர்ந்த
வஞ்சிபோ லிடையின் வண்ண மேகலை யணிகின் றாரும்.

402 மருவிருங் குழல்க டம்மின் மாலைக ளணிகின் றாரு
மருமறைப் பயன்க டம்மை யாசற விரிக்கின் றாரும்
வருவிருந் தெதிர்கொள் வாரு மனைதொறுங் கொடிசெல் வாரு
மிருமிரு மென்னப் பேணி யாசன மிடுகின் றாரும்.

403 அறுசுவை யடிசில் பேணி யணைந்தவாக் களிக்கின் றாரு
நறுமலர் புனைகின் றாரு நாசியா பரணம் வெள்கக்
குறுநகை விளக்கின் றாருங் கூன்பிறை நுதலில் வட்ட
மறுவறு திலத மிட்ட மயிலென வருகின் றாரும்.

404 ஏழிசை பாடு வாரு மெழின்மலர்க் கோதை யென்றும்
வாழியென் றேத்து வாரு மறையவர் மனையிற் சென்றிங்
காழிமா லெய்து நாளை யறைதியென் றார்க்கின் றாருந்
தோழிய ரோடுங் கூடிச சூதுகள் பயில்கின் றாரும்.

405 ஓவிய மெழுது வாரு முயிர்ப்புள திதற்கென் பாரு
மாவிபெற் றுடையீர் வாதிட் டாடுமெம் மோடென் பாருங்
காவிபோற் சிவந்து நீண்ட கயல்விழிக் கடைக்கூர் வாளான
மேவிய விளைஞ ராவி மெலிவுற நலிகின் றாரும்.

406 தண்ணறும் புழுகும் வாசச சந்தனக் குழம்புங் கூட்டித்
திண்ணைகண் மெழுகு வாருந் தெருக்களிற் றெளிக்கின் றாரும்
பண்ணமர் சிந்திற் சேர்ந்த பாடல்கள் பயில்கின் றாரும்
வண்ணமா மணிப்பட் டாடை வறியவர்க் களிக்கின் றாரும்.

407 தேசுறு பொன்னில் விட்டந் திரண்டகால் பட்டுத் தாம்பிட்
டாசறு வயிரத் தாலே யழகுறு பலகை சேர்த்தே
யூசல்க ளாடு மாத ரும்பர்நா டிவ்வூர்க் கொவ்வா
சீசியென் றிகழக் கேட்டுச் சிந்தனை களிக்கின் றாரும்.

408 பாலிகை பொன்னிற் செய்து பலமுளைப் படுத்து வாரு
மாலிருஞ் சோலை யானே மணஞ்செய் வருமென் பாரு
மாலிலைப் பள்ளி கொண்ட வரங்கனார் காணென் பாருந்
தாலிவேங் கடவர் முன்னே சமைத்தன ரிவட்கென் பாரும்.

409 வடபெருங் கோயி லுள்ளான் வளர்ப்பமற் றவர்கள் கொள்ளக்
கடவதோ வென்கின் றாருங் கைப்பிடி வலியி லென்னி
லிடவகை யடுக்கு முண்டேன் யவற்கென விசைக்கின் றாருங்
குடதிசை முடியை வைத்தான் கோமக னாமென் பாரும்.

410 சீருறு பெரியாழ் வாருந் திரிந்துநின் றுதகந் தன்னை
யாதிருக் கையால் விட்டா ரவர்க்கிவ ளாமென் பாரு
நோபெற நால்வ ரோக்க நிரைத்தகை பதினா றுக்கும்
பாரமசை நின்ற தொண்ட ரென்செய்வார் பகரென் பாரும்.

## வேறு.

411 குரவைகண முழக்குவார் கொடிமனை புதுக்குவார்
பரவையி னிரைக்குமா பழமறை பயிற்றுவார்
நிரவய வெளிக்கணே நிலவிசை பரப்பிமால்
வரவையு முணர்த்துவார் மணவினை பயிற்றுவார்.

412 வீதியி னடிப்பொரு வெயின்மணி யொதுக்குவார்
போதிம நடக்குமா றுநடை பயிற்றுவார்
வேதிகை புதுக்குவார் விரைமலர் பரப்புவார்
சாதியி னொழுக்கமே தருகலை வழுத்துவார்.

413 சிறுபறை முழக்குவார் சிலாபணி விளக்குவார்
குறுநகை பெருக்குவார் குழன்முடி கனக்கவே
யறுபதம் விலக்குவா ரமரர்கள் விடுத்தசீர்
நறுமலர் பொதுக்குவார் நவமணி திருத்துவார்.

414 பங்கய முகத்தினார் பஞ்சணை பதத்தினார்
குங்கும மிகுத்தமா கொங்கைகள் பெருத்துளார்
செங்கையி லெடுத்தயாழ் திண்டிம மொலிக்கவே
மங்கல நகர்க்கெலாம் வந்தொலி பரப்புவார்.

415 பேரிகை முழக்கினார் பேரருள் விளக்கினார்
தூரிய முழக்கினார் சூழ்வினை துளக்கினார்
சீரிய முகத்தினார் தேவமர் தீர்த்தினார்
கூரிய கருத்தினார் கோமள வளத்தினார்.

416 மாசறு குணத்தினார் மான்மத மணத்தினா
ராசறு தனத்தினா ராடவர் மனத்தினார்
தேசுறு குலத்தினார் தேமொழி வளத்தினார்
வீசிய கரத்தினார் வீதியி னெருக்கினார்.

417. பான்மொழி வளத்தினர் பனிமதி முகத்தினர்
மேவிடு தனத்தினர் மேகலை துவக்கின
ராலிலை வயிற்றின ராடவர் மனத்தினர்
வேல்விழி யினத்தினர் வீதியி னெருக்கினரா.

418 வேதியர் நெருக்குவார் வேள்விகள் பெருக்குவா
ரோதிய மறைக்குழா வோசைக ணிரப்புவார்
சாதியி னொழுக்கமே சார்வுற நிறுத்துவார்
வீதியி லெடுத்தயாழ் வீணைகள் பயிற்றுவார்.

419 கசசணி தனத்தினர் கட்கடு விடத்தின
பசிலை பிடித்தகா மற்கரு ளளித்துவோர்
வசிர மனத்தினர் வற்கலை நிறுத்தினர்
நேசனு நெருக்கவே நித்திரை யருக்குவார்.

வேறு.

420 இந்தவகை யனைவர்களு மெழில்விளங்க வலங்கரிப்ப
முந்துமறை தொழுமாதி மொழிந்ததிரு மணநாளாம்
பந்தமறும் பங்குனி யுத்திரத்தின் முன்னாளி
லந்தரத்தி லரம்பையரு மமரர்களு மணியணியே.

421 இளைத்தேத்து மிந்திர னுமியக்கர்களு மெழுந்திறைஞ்சி
நிலைத்தேத்தச சித்தர்குழா நிலவுமலர் மழைபொழியத்
திளைத்தேத்துங் கடலரசன் சேவிப்பச செழுமறைக
ளுளைத்தேத்திச சிவில்லி புத்தூரி னுட்புகுந்தார்.

422 வாசநறு மலரயனும் வாக்கியுமற் றுள்ளவருந்
தேசுபொலி விமானமிசைச செழுமறைக டொழுதேத்த
மாசகன்ற வில்லிபுத்தூர் வளநகரி னுட்புகுந்தார்
வீசுபுனற் சடையானு மெல்லியலா ளுடன்சென்றான்

வேறு.

423 வித்தியா தாரும் வீணைவல் லவரு மேவுதம் மனைவிய ரோடுஞ்
சித்தியா தவர்கள் சித்தியா மென்று செங்கணமா றிருமணங் காணும்
பத்தியால் வந்து பலருடன் றேன்றிப் பாம்பணைப் பரன்பணி செய்யு
நித்தியா னந்த ருறைந்திடும் புதுவை நகரினி ணகரம தடைந்தார்.

வேறு.

424 வேதவி யாதன் சூதன் மேதினி படைக்கப் புக்கா
னோதுமா சுகத்தி முன்னை மொலிகடல் குடித்தோ னுள்ள
போதெலா மரியைப் போற்றும் புண்ணிய வசிட்டன் மிக்க
காதலா னுலக மேத்துங் கவுதமன் கருணை மிக்க.

425 காசிபன் சுதிட்டன் ஞானப் புலத்தியன் கலைக்கோட் டும்ப
ருசறு சனகன் மிக்க வத்திரி பரத்து வாசன்
பேசிய சனக்கு மாரன் பிருகுமாற் கண்ட னாதித்
தேசுறு முனிவ ரெல்லாந் திருமணங் காணச் சென்றார்.

426 முனிவர்க ளுலகின் மிக்க மூத்தறி வுடையோர் மாயன்
பனிமலர்க் குழலி னாளைப் பங்குனி யுத்தி ரத்தி
லினியநன் மணஞ்செய் கோல மிறைஞ்சிட வேண்டு மென்னக்
கனிபொழிற் புதுவை தன்னிற் கணத்தினி லெழுந்து சென்றார்.

427 அண்டத்துக் குட்பட் டார்க ளனைவரும் புதுவை புக்குப்
பணைத்தெண் டிரைநீர்ப் பொன்னி மடியிசைப் பள்ளி கொண்டு
தொண்டர்க்கின் னருள்க ணல்குஞ் சுடரொளிக் கருணைக் குன்றாம்
வண்டுற்ற துளவத் தாரான் வரும்வழி நோக்கி நின்றார்.

## வேறு.

428 அற்றைநா ளிராப்பக லவணம் வைகினார்
மற்றைநாள் வைகறை யெழுந்த வாசிய
மிற்றைநா டிருமண மென்ற பேரொலி
யுற்றநான் மறையொலி யுலகி னோங்கவே

## வேறு.

429 காரார் குழலாளைக் கலியாண குணங்கள் கைவி டாத
வேரா ரிடையாளை யிறவாவர நல்கிய வின்சொ லாளை
வாரார் முலையாளை யின்னாமு தென்ன வளர்த்த தாதை
சீரார் திருமாளிகை முன்றிலினிற் றேவர்கள் சூழ்ந்து போற்ற

## வேறு.

430 மாணிக் கத்தின் காலூட்டி வயிரத் திலங்கும் விளைபோட்டுப்
பேணிப் பவளக் கொம்பாலே பெருக்கி நிரப்பிப் பாப்பலகை
யாணிக் கனகப் பொற்றகட்டால் வேய்ந்தவ் வழகார் காவணத்தில்
வாணித் திலத்தின் செழுங்கோவை மணிக்கோ வைகளோ டறத்தூக்கி.

431 சுற்று மிலங்கும் பொற்றகட்டாற் சுவர்கள் பொதிந்தோ வியமெழுதிப்
பற்றும் பளிங்காற் றளவிசைகள் படுத்துத் தொடுத்த தொடர்தூக்கி
மற்று முள்ள பலவளமு மணக்கா வணத்தின் மன்னுவித்தா
ருற்ற வரங்கள் குறித்ததின மின்றென் றோங்கு மொளிவளையை

## வேறு.

432 மடந்தையர் கூடி வாச மஞ்சன மாட்டி யீரந்
தொடர்ந்திழு கிருவேள்ற் றுடை சுரிகுழற் றுவட்டி முற்று
மிடந்துடிக் கின்ற கோதைக் கிமைப்பினிற் சாத்தி மாற்றி
நுடங்கிடைக் கிணங்கும் பூவி னெய்யபட் டாடை சாத்தி.

433 தேனமர் மொழிக ணல்குஞ் செந்துவர் வாயி னூட்கு
மான்மதச் சந்தன சந்தக் குங்கும மற்று முள்ள
வானநற் கலவை சாத்தி யலர்கம லங்க ளென்ன
வானவர் வணங்கி யேத்து மலரடி யிணைக டம்மில.

434 பேசுமங் குலியிற் றோன்றும் பெருவிரன் முடிச்சு ரிக்க
வாசறு பீலி கான்மோ திரமயி லடிக ளன்றித்
தேசுற நின்ற கோலச் சிறுவிரன் முடிச்சுஞ் சாத்தி
மாசிலா மயிலின் சாயல் வல்லிதன் புறந்தாணை மீதில்.

435 சிலம்புபா டகநற் றண்டை திகழ்மணிச் சதங்கை சாத்தி
நலந்திக ழரைஞாண் சாத்தி நான்மறை வணங்கி யேத்தும்
வலந்திக ழாழி மாமான் மலரடி வருடி னாளு
மலர்ந்தெழு கமல மன்ன செங்கையங் குலிசட் கான.

436 சிறந்தமோ திரங்கள் சாத்தித் தேமொழி திருமுன் கைக்கு
நிறங்கிளர் பவள மிக்க நீடொளிக் கடகஞ் சாத்திப்
புறம்புட னகமு மிக்க பொலிமணிச் சரிகள் பூட்டித்
திறந்திகழ் கேசச மாதி தோள்வளை சிறப்பச் சாத்தி.

437 செப்பெனப் புடைத்து விம்முந் திருமுலைக் கச்சின் மீதே
யொப்பறு முத்துத் தாம மொளிதிகழ் பதக்கஞ் சாத்தி
யப்பரு வத்துக் கான வாபர ணங்க ளெல்லாந்
தப்பறு களத்திற் சாத்தித் தயங்கிரு குழைக டம்மில்.

438 இருகதிர் வட்ட மென்ன விலங்குபொற் றோடுஞ் சாத்தி
மருவுசீர்ச் செவிப்பூச் சாத்தி மாசறு கொப்புச் சாத்திப்
பொருகயல் கழுநீ ரன்ன போர்விழி யிணைக டம்மிற்
கருமுகிற் கழகு நல்கிக் கறுத்தமைக் காப்புஞ் சாத்தி.

439 ஆசிலா முத்திற் பொன்னி லழகுறச் சமைத்த கோல
நாசியா பரணஞ் சாத்தி நளிமதி நுதலிற் றோன்றத்
தேசுறு திருமண் காப்புஞ் சிறப்புடன் சாத்தி யூடே
வாசமார் மஞ்சட் காப்பும் வயங்குறச் சாத்தி னார்கள்.

440 பட்டமுந் திருவும் பூரப் பாளையும் பரிவாற் சாத்தி
மட்டவிழ் குழலில் வாச மலர்த்துழாய் மாலை சூட்டி
யுட்டெளி வுடைய கோதைக் கோங்குசீ ரரங்க ருருஞ்
சிட்டரு மகிழும் வண்ணந் திருமுடிப் பூட்டு மிட்டார்.

வேறு.

441 அப்பரிசே மணக்கோலஞ் செய்தாண்டா ளங்கிருப்ப
வொப்பரிய வயனூழ்வார் முகநோக்கி யுத்திரத்தி
லிப்பொழுதை யிலக்கினமே திருமணத்துக் கிட்டதினி
யெய்பொழுது வருமிறைவ னென்றனனென் றலுமாழ்வார்.

### வேறு.

442 அன்றொன் றேடே பங்குனி யுத்திரத்தி லாசில்லா
மன்றல் கமழுங் குழலாளை வதுவை செய்ய வருகின்றே
னென்று பரங்க ரையறிவ னேழை யேனம் மாமாயன்
குன்று மயக்கை யென்னறிந்து கூறக் கடவே னென்னக்கூற.

443 இருந்த வயனு முருத்திரனு மிமையோர் கோனு மிமையவரு
மருந்த வஞ்சேர் முனிவர்களு மல்லூ ருறைவோ ரனைவர்களும்
வருந்தி யிரங்கி யினியரங்கன் வாரான் கொல்லோ வெனமறுகத்
திருந்து மாழ்வார் திருமகளா ரருகே சென்றென் செயவென்றா.

444 என்னெனென் றுண்டாள் வினவியிட வொழிலா ரரங்கத் தினிதமர்வார்
முன்னம் போமோட கட்டுரைத்த முகிழ்த்த முடுகிற் றம்மாய
னின்னம் வந்தா னில்லையினி யென்செய் கேனிங் கியாவர்களு
மன்ன நடையாய் சகவாடி யழுங்கு கின்று ரெனவுரைந்தார்.

### வேறு.

445 மையமர் கருங்கட் கோதை மற்றவை கேட்ட போதே
யையரின் றந்த வேண்டா மரங்கனை நாமெல் லோரு
முய்யவித் கணத்தி லிங்கே யாக்குவ னும்ப ரெல்லா
நைந்துரு வண்ணந் தேற்றி யிடுகநன் னலத்தா ளென்றாள்.

### வேறு.

446 சீரார் கருடன் றனைக்கூவிச் சென்றிக் கணத்திற் றிருவரங்கத்
தாரா வழுதைக் கொணருதியே லவனே டென்னே டருகமரு
போரா சனநான் றருகின்றே னென்றாள் கோதை யுடனவனும்
பாரா ரென்னப் பகர்ந்தேகி யரங்கன் பாதாம் புயம்பணிந்தே.

### வேறு.

447 மலரொருந் திணபுயத்தோய் வளர்புதுவை மாநகரிற்
பல்லாண்டு முன்புரைத்த பட்டர்பிரா னுதியர்க
ளெல்லாரு நீயிந்த விலக்கினத்துக் கெய்தாயேற்
செல்லாருங் குழலியொடுந் தீதுறுவர் சிக்கிரத்தில்.

448 என்னுடைய தோணமீதி லேறியரு ளென்றுரைப்ப
முன்னுலக மேழுமுண்ட முழுமுதல்வ னப்படியே
பொன்னடியைக் கட்டுரைத்த புள்ளரசின் மேல்வைத்து
மின்னமரு நேமியினு னீள்விசும்பின் மீதானான்.

### வேறு

449 நண்டனர் புதுவை யுள்ளோர் ககனமீ துறைவோர் மிக்க
வெண்டிசைத் தலத்தி லுள்ளோ ரிருடிக ளாழ்வா ராதி
கொண்டலிற் பொலிந்த மேனி குளிர்மதி வதனங் கைகால்
புண்டரீ கத்தை யொத்த தேவனைப் புள்ளின் மீதே.

450 ஆடினா ரன்பு கூர்ந்தா ரலர்மழை சிந்தி வானோர்
பாடினார் சித்த ரார்த்தார் பங்கயத் தயனும் வானி
லோடினீர்ச் சடையி னானு மும்பர்கோன் றானுஞ் சென்று
சூடினாள் கருடன் செய்ய தோண்மிசை யமர்ந்த தாளை.

வேறு.

451 சீரார் கருடன் திருத்தோள்விட் டிறங்கித் தேவர் புடைசூழ
ஏரார் மதிள்சூழ் வடபெருங் கோயி லெய்தி யினிதமர்ந்து
காரார் வண்ண னிந்திரனைக் கண்ணா லிட்டாழ்வார் திருமகளாம்
வாரார் முலையா டனைநீபோய் மகட்பே சிடுக வெனவிடுப்ப

வேறு.

452 ஆங்கவன்போய் மகட்பேச வாழ்வாரு மகிழ்ந்திணங்கிப்
பாங்குடனே யிருந்ததற்பின் பரம்பரனும் படர்வானி
லோங்கியசீர்ப் பந்தர்க்கீ ழும்பர்தொழப் போய்ப்புகுந்தான்
பூங்குழலாண் மணமகிழப் பூதலத்தோர் புகழ்ந்தேத்த

வேறு

453 பங்கயப் போதி னுள்ளான் பரிந்துநற் சடங்கு காட்டக்
கொங்கலர் குழலி னார்கள் குரவைகண் முழக்க வேத
மெங்கணு நிறைப்பச் சங்க மேழ்கட லொலியி னார்ப்ப
மங்கல முரசு மார்ப்ப மந்திரக் கோடி சாத்தி.

454 செந்துவர் வாயி னாட்குந் திருமண மாலை சாத்திப்
பந்தணை கரத்திற் காப்பும் பழமறை விதியிற் கட்டிச்
சுந்தரத் தோள னீண்ட சோதிவேங் கடவன் மாதை
முந்துற வளர்த்தோ னாழ்வார் முன்னின்று முகத்தை நோக்க.

455 ஆங்கவர் தமைநோக் காதே யழகிய மணவா ளற்குப்
பூங்குழற் கோதை தன்னைத் தந்தனன் புனித வென்னப்
பாங்குட னுதகம் பண்ணிப் படிமிசைப் பணிந்து நின்றான்
றேங்கமழ் பொழில்சூழ் செல்வச் சீவில்லி புத்தூர்ப் பட்டன்.

வேறு.

456 இருக்காதி மறைபுகழ யாவர்களு மானந்தப்
பெருக்காற்றி னிடைத்திளைப்பப் பெரியாழ்வார் திருமகளார்க்
கொருக்காலுஞ் சிதையாத வோங்குதிரு மங்கிலியந்
திருக்காறைப் பட்டத்தி னுள்ளாகச் செறிவித்தார்.

வேறு.

457 சீரார் பிரமன் செறிந்தா குதிசெய்ய
ஏரார் பெரியாழ்வார் பல்லாண் டெடுத்தேத்த
வாராத காத லடியார் குழாம்புகழக்
காரார் குழலணங்கைக் கண்ணபிரான் கைப்பிடித்தான்.

வேறு.

58 மாயவன் கோதை செய்ய மலர்க்கரம் பிடித்துத் தன்றன்
சேயிழை திருத்தா டன்னைத் திருந்துறப் பிடித்து முக்கா
லாயசி ரம்மி மீதின் மிதிப்பித்தங் கயனார் போற்றுந்
தீயினை வலஞ்செய் தாங்கே திருக்கையிற் பொரியு மேற்றே.

459 அருந்ததி நோக்கி மிக்க வாகுதிக் குறைக ணேர்ந்து
திருந்திய வெள்ளை யானை மீதிலத் தேவி யோடும்
வரும்பெருந் திசையி னுள்ளோர் வானுளோர் முனிவோர் கண
நெருங்கினா ராசி கூற நீணகர் வலம தாக.

460 பாற்கடன் மீதி லேறிப் பரிதியா யிரங்கள் சூடிச்
சீர்ப்பொலி மின்னென் றோடுஞ் செய்யதா மரைகள் பூத்தோர்
கார்க்கடல் வருவ தென்னக் கண்ணனுங் கருணைக் கோல
வார்ப்பொலி கொங்கை யாளும் வந்தனர் வானோர் சூழ.

வேறு.

461 வாரணத் தெருத்தம் விட்டிழிந் தருளி மாணிக்கத் திருவடி நிலைதொட்
டாரண மொலிப்ப வாசிய மொலிப்ப வடியவ ரணியணி துதிப்பப்
பூரண கும்பந் திருவிளக் கெடுத்துப் பூசுர ராசிகள் பகரக்
காரணப் புவிமா மடந்தையுந் தாமுங் கடிமணக் கனகமா ளிகையில்.

462 மணவறை புகுந்தார் மன்னனார் மாலை வழங்கிய மடமயி லோடும்
பணவறை திறந்து பட்டர்கோன் பாரில் வறியவர் பசிகெடச் சமைத்த
வுணவளித் தாடை யாபர ணத்தோ டோங்குசீர் நிதியமும் வழங்கி
வணமலர்ப் பிரம னாதிவா னவர்க்கு மாசறு பேரமு தளித்தான்.

463 அன்னமென் னடையாள் கருடற்கு முன்ன மறைந்தவே காசன மளித்து
முன்னனா ரிடத்து மருங்கினி லவனும் வலத்திரு மருங்கினிற் றானு
மின்னுமா முகிலு மேருமால் வரையும் வேறிதற் குவமையொன் றில்லை
யென்னலாம் படிநின் றருளினா ராண்டா ளிமையவர் முறைமுறை தொழுதார்.

வேறு.

464 திருமணங் காண வந்த சிவனயன் முனிவர் சித்தர்
தருமணக் கடவுள் வானோ ராதியர் சார்ந்தோ ரெல்லா
மருமணக் குழலி யோடு மன்னரை வணங்கிப் போனார்
பெருமணம் வில்லி புத்தூர் நகர்தனிற் பெறமுன் வேண்டும்.

வேறு.

465 பட்டர்பிரா னுளமகிழ்ந்து பங்கயக்கட் டனிமுதல்வன்
மட்டவிழ்பூம் பொழிலரங்க மாநகரா னென்மகளை
யிட்டதிரு முகிழ்த்தத்தி லெழுந்துமணஞ் செயப்பெற்றே
னுட்டெளிவா னுறநோக்கி யொருகுறைவே றினியுளதோ.

466 என்றுமிகழ்ந் தரங்கனையு மேழுலகுந் தொழுதேத்து
மன்றல்கமழ் குழலியையு மணக்கோலச் சேர்த்தியினிற்
சென்றுதொழு வேமென்னச் செறிந்திறைஞ்சி யக்கோல
மொன்றியசீ ரன்பதினு னூறவிருத்திப் பல்லாண்டும்.

467 இப்படிநீ கோதையொடும் யாவர்களுந் தொழுதேத்த
வொப்பரியா யித்தலத்தி லுறைகுதியென் றுற்றிறைஞ்சிச்
செப்பமறை யடிபரவுந் திருவரங்கத் தினிதமர்வா
ரப்படியே செய்கின்றோ மென்றருளிப் பின்றுழ்வார்.

468 முகநோக்கி யறைகின்றார் முகுந்தனார் திருமகனே
மகநோக்கு மேலோர்கள் வணங்கருமிம் மூவுருவு
மகனுக்கு மர்ச்சாவ தாரமா யருள்விளங்கப்
புகநோக்கு கின்றேனுன் புத்தூரி லெப்பொழுதும்.

469 ஆதலா லதுசெய்தி யென்றருள வாழ்வாருந்
தீதெலாங் கெடவென்றுஞ் சென்றிறைஞ்சி யுலகுய்யக்
காதலான் மூவரையுங் கணதேறி யருள்வித்து
வாதெலாங் கெடவென்றார் நின்றார்பின் மதிளரங்கா.

வேறு.

470 சீரார் வில்லி புத்தூர்க்குச் சீவை குண்டத் தினிதமரு
மேரார் செல்வ மெப்பொழுது முண்டா யிடுக வெனவிசைத்துங்
காரா வன்போ டாழ்வாரை யரங்க நகரில் வருகவெனக்
காரார் குழலா டன்னோடுங் கண்ணன் கருடன் மேற்கொண்டு.

வேறு.

471 திருவரங்க நகரணைந்து சீபூமி விண்டுவெனு
மிருவரங்க மொன்றாகி யினிதமர்ந்தா னிறையாழ்வா
ரொருவரங்க மொன்றேனும் புத்தூரி லுறைபவர்க்கண
மருவரங்கம் பலவாகி வாழ்ந்தனர்மற் றவர்வருந்த.

472 ஆதிவட பெருங்கோயி லச்சுதனைப் பணிந்தேத்தி
வேதியர்கள் புடைசூழ விடைகொண்டு கூடலிடைச்
சோதிவளர் மணிவண்ணனைத் தொழுதகன்றங் கழகனையு
நீதியினு லுறவணங்கி நிலவுமணி மதிளரங்கம்.

473 சென்றணைந்தார் தேவர்தொழுந் திருமாலைத் தாம்வணங்கி
நின்றனரங் காழ்வாரு நெடுமாலு நிகரிலாக்
குன்றனைய மெய்ஞ்ஞானக் குணத்தினனே செய்திரம்ப
கொன்றுளது கேளென்ன வரங்கவனோ டுரைக்கின்றான்.

474 இத்தலத்தி லொருகோயி லுனக்கென்றே யெடுத்தென்னை
யத்தலத்திற் கோதையையிக் கருடனையே காசனத்திற்
பத்தர்தொழும் படிபண்ணிப் படிவான முள்ளளவு
முத்தமமாங் குணத்தினனே நீயுமுட னுறைதியென.

கட்டுரைத்தான் றிருவரங்கத் தினிதமரு கார்வண்ணன்
பட்டர்பிரா னப்படியே பணித்துவித்துப் பழமறைதேர்
மட்டவிழ்பூங் குழற்கோதை முன்னிலையாய் முதிளரங்க
ரெட்டெழுத்தை யெடுத்தோதி யிணையடிக்கீழ்ப் போய்ப்புகுந்தான்.

வேறு

476 அன்பதினாற் கன்மத்தால் ஞானத்தா லாசற்ற
வின்பமிகு பத்தி யிலங்குவையி ராக்கியத்தாற்
றன்பமன்ற வின்பந் துலங்குபிர பத்தியினான்
முன்புதித்தார் பட்டர்பிரான் கோத்தாயா ருலகில்.

477 ஆங்கவன்றன் பிள்ளையா மாண்டா ளயிசசியத்துக்
கோங்கு முலகி லுயர்வீட்டி லுற்றவரிற்
பாங்குடனே யாராய்ந்து பாரதமாலு முண்டாங்கொல்
பூங்குழலாட் கொத்தார்கண மிக்கார் புகன்றிடிலே.

வேறு.

478 ஆகவை யாவி யபிமானம் பண்ணு மவர்க்கு மான்மாவை
நோக்கிச சொரூபம் பிறப்பித்து நோன்பில் வைகு மிருடிகட்கும்
பார்க்கி லனுவை மேருவினை யொத்த வாசி யெனப்பகர்வர்
வாக்கு மனமுஞ் செய்தொழிலு மொன்றாய் நின்ற மதிமிக்கார்.

479 அந்த வாறு மிருடிகட்கு மாழ்வார் களுக்கு முளவேற்றம்
பந்த மில்லாப் பத்தர்கட்கும் பட்டன் றனக்கு முளவேற்ற
முந்த மொழிந்த வணுமேரு மானு முகுந்தன் மகனார்க்குங்
கந்த மலர்ப்பூங் கோதைக்கு மவண்ணமேற்றங் கண்டுரைத்தார்.

வேறு.

480 முனிவர்களி லாழ்வார்கட் கேற்றங் கண்டு
மொழிந்தபடி யென்னென்னின் முனிவர் ஞானக்
கனியிருப்பக் காய்கவர்ந்த வாறு போலுங்
கண்டிருப்பக் கரும்புகடித் தெய்த்தல் போலும்
பனிமலர்ச்செந் திருமகள்கோ னுய சோதிப்
பரம்புருட னிருப்பவவன் படைப்பிற் றேவைத்
தனிமுதலா மிதுவென்றே நாட்டி நூலுஞ்
சமையங்க டோறுமதற் கிணங்கச சாற்றி

481 மாய்ந்தனர்க ளிருடிகளந் நூலைச் சுற்று
மதியாம லாழ்வார்கண் முறையி னந்த
மாய்ந்துதிரு வாய்மொழிக ளருளிச் செய்தே
யச்சுதனே பரமெனவந் தன்றென் றுரைக்
காய்ந்துபிர பஞ்சச்சொற் கலைக டம்மைக்
காற்றிலிடு மிலவம்பஞ் சென்னக் காட்டிச்
சாய்ந்துசரண் புகுந்தேத்துஞ் சமையத் தார்க்குத
தத்துவத்தைக் கட்டுணர்ந்த தலைமை யாலே.

482 ஆழ்வார்கண் மேருமால் வரையை யொத்தா
ரருந்தவஞ்சேர் முனிவர்களு மணுவை யொத்தா
ரேழ்பாரி லுள்ளவர்கள் வேதாந் தத்தை
யிகழ்ந்துதிரு மாறிறத்தை யிகழ்ந்த பின்பு
வாழ்வாரோ வாழ்வாரோ மீட்சி யில்லா
மாநரகப் பெருங்குழியிற் குப்புவாரோடும்
வீழ்வாரோ வெழுவாரோ வறியே னந்தோ
விளக்கிருப்ப மின்மினியை விரும்பு வாரோ.

483 ஆசிலா வாழ்வார்கள் பதின்மர் தம்மி
லாண்டாளுக் கேற்றமென்சொ லென்ப ராகி
லீசனவர் கழுத்தியிற்சென் றெழுப்பித் தன்சீ
ரிருந்தபடி காட்டக்கண் டின்புற் றாக
தேசுபொலி யாண்டாளத் திருமா றனைச
சென்றெழுப்பித் தன்குறைகள் செப்பி வாழ்ந்தாள்
பேசருசீ ராழ்வார்க ணமகளா யாண்டா
டாயானா ளந்நிலையின் பெருமை யாலே.

484 தூயநெறி யாழ்வார்க டம்மி லானிச்
சோதிதரும் பட்டாபிரா னேற்றஞ் சொல்லின்
மாயவன்மற் றவர்ஞான மங்கா வண்ண
மயர்வறுசீர் மதிநலத்தை வழங்கிக் காத்தா
னயனெனு மத்திருமா றனக்குக் கண்ணே
றாகாதே காப்பிட்டுத் திருப்பல் லாண்டை
யேயவருட் பட்டர்பிரா னருளிச் செய்தா
னதனாலே யவரிலவ னேற்ற மாமே.

485 இத்திறஞ்சேர் பட்டனிலுங் கோதைக் கேற்ற
மெவணமெனிற் பட்டாபிரான் புருடன் பொன்று
முத்திதருந் திருமாலும் புருட னென்னு
முறைமையினாற் புருடனுக்குப் புருட னைசை
சித்தரஞ்சேர் பெண்புருடன் மேலே வைத்த
சீராளை நேராமோ தேருங் காலை
யத்திறத்தாற் பெரியாழ்வார் தம்மி லேற்ற
மாண்டாளுக் கென்றனர்மெய் யறிவி னோரே.

வேறு.

486 ஆதலா லாண்டாளு மாழ்வார்க டம்மின்மிகக்
காதலான் மாலைக் கலந்தா ளதனாலுங்
கோதிலாழ் வார்களிலிக் கோதைக்கே யேற்றமென
வோதலா மென்றுணர்வா லுயர்ந்தோர்கள்.